# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 3 சனிக்கிழமை (19.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 358




16 விஷத்தை உறுஞ்சும் அபூர்வக் கல்



29 தோற்றது இலங்கை



31 அரசியல்வாதி ஒருவரின் சதி

### சரணடைந்த புலித் தலைவர்களைக் கொல்ல கோத்தபாய உத்தரவு எனப் பொய் கூறினார்

# பொன்சேகாவுக்கு 3 வருடச் சிறை

கொழும்பு, நவம்பர் 19

வெள்ளைக்கொடி விவகார வழக்கு அறியப்பட்ட, விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் நடேசன் மற்றும் சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் ஆகியோர் உள்ளிட்ட சரணடைந்த புலி உறுப்பினர்களைச் சுட்டுக்கொன்றார்கள் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியதற்கு எதிராக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் பொன்சேகா பொய் கூறினார் என தீர்ப்பளித்த மேல் நீதிமன்றம் அவருக்கு மூன்று வருட சிறைத்தண்டனை விதித்தது.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. நீதிபதி தீபாலி விஜயசுந்தர, பொன்சேகா குற்றவாளி என்ற தீர்ப்பை வாசித்தார். 'ட்ரயல் அட்பார்' முறையில் மூன்று நீதிபதிகள் முன்னிலையில் சுமார் ஒன்றரை வருட காலமாக இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வந்தது.

பக் 31



## தீர்ப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேல்நீதிமன்ற வளாகமே பரபரப்பு

### அரசுக்கு எதிராகவும் கோஷம்

கொழும்பு, நவ.19

வெள்ளைக்கொடி விவகார வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட தினமான நேற்று கொழும்பு மேல்நீதிமன்ற வளாகத்தில் ஒருவித பதற்ற நிலை ஏற்பட்டது. நீதிமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டமும் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை வெலிக்கடை சிறைக்கு அழைத்துச் செல்ல பொலிஸாரும், அவரை சிறைச்சாலை வானிலிருந்து மீட்க ஆதரவாளர்களும் போராடினர். ஊடகவியலாளர்களும், அரசியல்வாதி

பக் 30

## 2013 இல் யாழ்தேவி குடாநாடு வரும்

கொழும்பு, நவ. 19

யாழ்ப்பாணத்தையும் கொழும்பையும் இணைக்கும் யாழ்தேவி ரயில் 2013ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சென்று சேரும் என்று தெரிவித்தார் போக்குவரத்துத் துறை அமைச்சர் குமார வெல்கம.

வடபகுதிக்கான ரயில் பாதையைச் சீரமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியாவும் இலங்கையும் நேற்றுக் கையெழுத்திட்டன.



போரினால் அழிக்கப்பட்ட வடபகுதிக்கான தொடருந்துப் பாதையை 150 மில்லியன் டொலர் செலவில் புனரமைப்பதற்காக இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இலங்கை ரயில் திணைக்கள

பக் 31

### போர் முடிந்து இரண்டரை வருடங்களின் பின்னர்

## இரு கரையோரப் போர்க் கப்பல்களை இந்தியாவிடம் வாங்குகிறது கொழும்பு

கொழும்பு, நவ. 19

போர் முடிவடைந்து இரண்டரை வருடங்கள் கடந்துவிட்ட போதும் கடற்படையைப் மேலும் பலப்படுத்தும் நோக்குடன் இந்தியாவிடம் இருந்து இரண்டு கரையோரப் பாதுகாப்புக்கான போர்க் கப்பல்களைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

'காலி பேச்சுக்கள்' என்ற தலைப்பில் பாதுகாப்பு அமைச்சு நடத்திய மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வருகைதந்திருந்த கடற்படை அதிகாரிகளுடன், அலரி மாளிகையில் நேற்று நடந்த சந்திப்பின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பான கேள்வி அறிவித்தல் சில மாதங்களுக்கு முன்னரே இந்தியா

பக் 30

## போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் புரிந்தோர் மேஜர் தர நிலை அதிகாரிகள் உட்பட 100 படையினரே

### அடையாளப்படுத்தி அறிக்கையிட்டது படிப்பினைகள் ஆணைக்குழு

கொழும்பு, நவ. 19

வன்னியில் நடந்து முடிந்த இறுதிப் போரின்போது போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில், இலங்கை இராணுவத்தின் மேஜர் தர அதிகாரிகள் உட்பட 100 படையினர் ஈடுபட்டார்கள் என்று நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. 'லங்கா நியூஸ் வெப்' என்கிற இணையத் தளம் அறிக்கையின் உள்ளடக்கம் பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

''2009ஆம் ஆண்டு மே மாதம் முடிவடைந்த போரின் போது அனைத்துலகச் சட்டங்கள் மீறப்பட்டன என்ற குற்றச்சாட்டில் இருந்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் பாதுகாப்பதற்காக, மேஜர் தரம் வரையிலான சில அதிகாரிகள் உட்பட சுமார் 100 படையினர் பலிக்கடாக்கள் ஆக்கப்பட உள்ளனர்'' என்று அந்த இணையத் தளம் குறிப்பிட்டுள்ளது.

நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு அறிக்கையில் உள்ளவை என்று 'லங்கா நியூஸ் வெப்' கூறியவை வருமாறு:-

போரின் இறுதிக் கட்டத்தில் நிகழ்த்தப்பட்ட குற்றங்கள், மனித உரிமை மீறல்களுக்கு அனைத்துக்கும் இந்த 100 படையினருமே பொறுப்பு என்று கூறியுள்ள நல்லிணக்க ஆணைக்குழு, இவர்கள் மீதான குற்றங்களை இலங்கைச் சட்டங்களின் கீழ் விசாரணை செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டபின்னர் காணா

பக் 31

### குற்றமிழைத்த படையினருக்கு இரண்டு வருடங்களில் மன்னிப்பு

கொழும்பு, நவ.19

இறுதிப் போரில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டார்கள் என்று நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு அடையாளப்படுத்தியுள்ள படையினர் அனைவருக்கும் இரண்டு வருடங்களின் பின்னர் ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்று அவர்களது உறவினர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக 'லங்கா நியூஸ் வெப்' இணையத்தளம் தெரிவிக்கிறது.

இது பற்றி இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சனல் - 4 தொலைக்காட்சியில் காட்டப்பட்ட காட்சிகளில் உள்ள படையினர் மற்றும் கேணல் ரமேஷ் உயிருடன் பிடிக்கப்பட்டு விசாரணை செய்யப்படும் காட்சிகள் அடங்கிய காணொளியில் காணப்படும் படையினர் ஆகியோரை அடையாளம் காணுமாறு, இராணுவப் புலனாய்வுப் பிரிவு ஆலோசகர் கபில கெந்தவிதாரணவுக்கும் அவரது சிறப்புப்

பக் 31

## வருகிறது மற்றொரு ஆணைக்குழு!

கொழும்பு, நவ.19

நல்லிணக்க ஆணைக்குழு தனது விசாரணைகளை முடித்து அறிக்கையைக் கையளித்துவிட்ட நிலையில் மற்றொரு ஆணைக்குழுவை அரசு நியமிக்க உள்ளதாக 'லங்கா நியூஸ் வெப்' இணையத்தளம் தெரிவிக்கிறது.

நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலேயே புதிய ஆணைக்குழு நியமிக்கப்பட உள்ளது என்றும் அந்தத் தளம் கூறுகின்றது.

இது குறித்து இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தென்னாபிரிக்காவின் பாணியில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கு ராஜபக்ஷ அரசு முடிவு செய்துள்ளது. இந்த ஆணைக்குழுவில் தென்னாபிரிக்கர்கள் உள்ளிட்ட சர்வதேச முகங்களையும் இணைத்துக்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

அணிசேரா நாடுகளில் இருந்தும் மதத் தலைவர்களில் இருந்தும் ஏனைய பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கும் அரசு முடிவெடுத்

பக் 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்திப்பிரிவுகள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியம் உள்ளது.

# மீளக்குடியமர்ந்த முஸ்லிம்கள் குறித்து அமைச்சர் ஹக்கீம் - அரச அதிபர் பேச்சு

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக்காலை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாக அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறும் முஸ்லிம் மக்களின் பதிவுகள் மேற்கொள்ளும் விடயத்தில் யாழ்.பிரதேச செயலர் நெகிழ்வுத் தன்மையுடன் நடந்து கொள்வதில்லை என்று முஸ்லிம் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். மேலும் வன்னி மக்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையான 25 ஆயிரம் ரூபா தங்களுக்கும் தரப்பட வேண்டுமென முஸ்லிம்மக்கள் கேட்டபோதும் அதனை வழங்க முடியாது என்று கூறப்பட்டதாகவும் அவர்கள் கலந்துரையாடலின் போது தெரிவித்தனர்.

மேலும் முஸ்லிம் பகுதிக்கு நியமிக்கப்பட்ட கிராம சேவகர்கள் அலுவலங்களில் இருப்பதில்லை. தாம் எங்கு செல்கின்றோம் என்று அறிவிக்காமல் அவர்கள் செல்கின்றனர். இதனால் தாம் வீணாக அலைவதாக முஸ்லிம் மக்கள் இங்கு தெரிவித்தனர். மேலும் மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்களின் வாக்காளர் பதிவுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இந்தக் கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டது.

வாழ் வாதார உதிவிகள் செய்யும் அரச சார்பற்ற நிறுவங்கள் முஸ்லிம்களை இணைத்துக் கொள்வதில்லை என இங்கு கூறப்பட்டது. அத்துடன் யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் பொது மலசல கூடம் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் கோரினர். அத்துடன் இந்திய வீடமைப்புத் திட்டத்தில் முஸ்லிம் மக்களை அதிகளவில் உள்வாங்க வேண்டும் இந்தக் கலந்துரையாடலில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இது குறித்து அரச அதிகாரிகளினால் ஆராய்ந்து தீர்க்கக் கூடிய பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்குமாறு அமைச்சர் ஹம்கீம் தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சர் ஹக்கீம் நேற்று முஸ்லிம் மக்கள் குடியமர்ந்துள்ள பொம்மைவெளி, நாவாந்துறை, ஐந்து சந்தி, யாழ். நகர் ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்யதார். (த-15)

# நீரில் மூழ்கி அறுவர் பலி!

கொழும்பு, நவ. 19

கிரியுல்லவில் உறவினர் வீடொன்றில் இடம்பெற்ற விருந்து உபசாரத்தில் கலந்துகொள்வதற்கு கொழும்பிலிருந்து சென்ற17 பேர் அடங்கிய குழுவினர் அங்குள்ள வாவியொன்றில் நீராடச் சென்றபோது அதில் 8 பேர் அந்த வாவியில் மூழ்கியதில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 4 பேர் பெண்களாவர்.

ஒருவர் நீரில் மூழ்க அவரைக் காப்பாற்றுவதற்கு மற்றவர்கள் முயற்சி செய்த வேளையிலேயே அவர்களும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் தம்பதெனிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

வெள்ளவத்தையைச் சேர்ந்த அப்துல் கரீம் மொஹமட் சியாம் (வயது-42), ரஜீதா சியாம் (வயது - 16), சப்னா நிம்சான் (வயது - 19) பாத்திமா பஸ்ரியா சியாம் (வயது - 38), மற்றும் கொழும்பு-12 ஐ சேர்ந்த எஸ்.சித்திக் வயது-19), கொழும்பு - 2 ஐ சேர்ந்த மொஹமட் பவும் (வயது - 39,) ஆகியோரே கிரிவுல்ல வாவியில் மூழ்கி பலியாகியுள்ளனர் என்று பொலிஸ்தலைமையகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுநகர் பிரதேசத்திலும் இருவர் நீரில் மூழ்கி பலியாகியுள்ளனர்.

# பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு சீருடை

வலி.வடக்கு நவ.19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள வைத்தியசாலைகள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பெற்றோர்களை இழந்த பிள்ளைகள் எனப் பலருக்கும் பல்வேறு உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

இன்று சனிக்கிழமை சங்கானை பிரதேச வைத்தியசாலை மற்றும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு முறையே மருத்துவப் படுக்கை, சக்கர நாற்காலி என்பன வழங்கப் படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து சித்தன்கேணிப் பகுதியில் பெற்றோர்களை இழந்த முன்பள்ளிகளின் சிறார்களுக்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட முன்பள்ளி பிள்ளைகளுக்கு 300 சீருடைகள் வழங்கப்படவுள்ளன.

விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுவதுடன் பொன்னாலை திருவடி நிழல் மயானத்துக்குச் செல்லும் பாதை திருத்தப் பணிக்கு 50 ஆயிரம் ரூபா நிதி உதவியும் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வலி.மேற்கு பிரதேச சபைத்தலைவர் திருமதி ம.ஜங்கரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் இந்த நிகழ்வுகளில் பங்கேற்பர். (ஒ-86)

# ஜேர்மனி விபத்தில் யாழ். சிறுவன் சாவு

நவாலி, நவ.19

நவாலி சின்னப்பா வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியில் வசிப்பவருமான சிவகுமாரன் சுஜித் எனும் ஐந்து வயது மாணவன் ஜேர்மனியில் இடம்பெற்ற கார் விபத்தில் மரணமானார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு இடம்பெற்றது.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

இந்தச் சிறுவன் தனது தாய் மற்றும் சகோதரனுடன் பாடசாலையில் இருந்து வீட்டுக்கு நடந்து வரும் பொழுது வீதியைக் கடப்பதற்கு வசதியாகப் பச்சை விளக்கு சமிக்ஞை எரிந்த வண்ணம் இருந்தது.

அந்தச் சமயம் இவர்கள் வீதியைக் கடந்த போது சமிக்ஞையையும் கவனிக்காது வேகமாக வீதியால் வந்த கார் ஒன்று இவரை மோதிப் பல மீற்றர் தூரம் தூக்கி வீசியதில் சிறுவன் தலத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

# வெளிநாட்டில் உள்ளவர்கள் வாக்காளராக பதிவு செய்யக் கடவுச்சீட்டுப் பிரதி அவசியம்

வெளிநாடுகளில் உள்ளவர்கள் இங்கு தம்மை வாக்காளராகப் பதிவு செய்வதற்குக் கடவுச்சீட்டு இலக்கத்தையும், கடவுச்சீட்டின் பிரதியையும் சமர்ப்பிக்க வேண்டும். இல்லாவிடின் இலங்கைப் பிரஜை என்பதை நிரூபிக்கும் வகையில் தேசிய அடையாள அட்டையின் பிரதியை உறுதிப்படுத்திச் சமர்ப்பிக்க முடியும்.

இவ்வாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது-

2009 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலிலிருந்து 2010 ஆம் ஆண்டு நீக்கப்பட்ட 3 லட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்களும் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் உரிமைக் கோரிக்கைப் படிவத்தினூடாக விண்ணப்பிக்க முடியும்.

பெயர் நீக்கப்பட்டவர்களில் வெளிநாடுகளில் வாழ்பவர்கள் விசேட படிவத்தினூடாகத் தமது கடவுச்சீட்டு இலக்கத்தினைக் குறிப்பிட்டு யாழ். மாவட்டத் தேர்தல் திணைக்களத்துக்கு நேரடியாக விண்ணப்பிக்க முடியும். இல்லாவிடின் அவர்கள் சார்பாக அவர்களின் உறவினர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்கும்போது கடவுச்சீட்டின் பிரதியொன்று அல்லது தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

உரிமைக் கோரிக்கைப் படிவத்தினை கிராமசேவையாளர்கள் ஊடாகவும் சமர்ப்பிக்க முடியும். இல்லாவிடின் நேரடியாக மாவட்ட செயலகத் தேர்தல் திணைக்களத்துக்கும் சமர்ப்பிக்க முடியும் - என்றார். (த-15)

# நிகழ்வுகள் இன்று

**கணித முகாம்**

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் கணித முகாம் காலை 9 மணிக்கு சிவபாத சுந்தரம் மண்டபத்தில் நடை பெறவுள்ளது. பாடசாலை அதிபர் வே.சிவசிதம்பரம் தலை மையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தின ராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா கலந்துகொண்டார்.

**நூல் வெளியீடு**

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா.பாலகணேசன் எழுதிய தமிழ் மொழியும் இலக்கணமும் நூல் வெளியீட்டு விழா முற்பகல் 11 மணிக்கு கல்வியியற் கல் லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இணைப்பாளர் இ.சத்தியேந்திரம் பிள்ளை தலைமை யில் நடைபெறும் இந்த நிகழ்வில் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ம-313)

**பரிசளிப்பு விழா**

கரவெட்டி காசிநாதர் வித்தியாலய பரிசளிப்பு விழா முற் பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.பாடசாலை அதிபர் பொ. இரத்தினராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குண லிங்கம் கலந்துகொள்வார். (ம-313-190)

* * *

ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது. பாடசாலை அதிபர் தி.ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி காமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர். இராஜேந்திரன் கலந்துகொள்வார். (ம-313)

* * *

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வு பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி சி.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கணித-விஞ்ஞானபீடத் தலைவர் கலாநிதி சிவக்கொழுந்து சிவசற்குணராசா கலந்துகொள்வார்.

**நிறுவுநர் தினம்**

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் காலை 8.30 மணிக்கு ஒறேற்றர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.கல்லூரி அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவர் பேராசிரியர் பி.புவனராஜன் கலந்து கொள்வார். (ம-313)

**கௌரவிப்பு**

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் தரம் -05 புல மைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு காலை 9 மணிக்கு சின்னத்தம்பி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜேஸ்வரன் கலந்து கொள்வார். (ம-313-190)

**பண்பாட்டு விழா**

நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் நடத்தும் கலை பண்பாட்டு விழா நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.இதன் போது கழகத்தின் நீர்வை எனும் மலர் வெளியீடும் அழகொளிரும் நீர்வேலி எனும் இறுவட்டும் வெளியிடப்படவுள்ளன. (ம-313)

**மகளிர் தின நிகழ்வு**

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் மகளிர் தின நிகழ்வுகள் காலை 8.30 மணிக்கு திருநெல்வேலி சேர்.பொன் இராமநாதன் வீதியிலுள்ள பகவான் சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

**திறப்பு விழா**

வடமராட்சி கிழக்கு நல்லொழுக்க நிறுவனக் கட்டடத் திறப்பு விழா பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் மாலு சந்திக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது. வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத் தலைவர் [illegible] தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்வார். (ம-313,190)

**கருத்தரங்கு**

511 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான கருத்த ரங்கு காலை 8.30 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி , உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் இடம்பெறவுள்ளது. (ம-121)

**கூட்டம்**

யாழ்.மாநகர சபையால் நடத்தப்படும் ஜே/79 கிராம அலுவலர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தித் திட்டமிடல் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு சன்மார்க்க வித்தியாலயத்தில் நடை பெறவுள்ளது. (ம-313)

* * *

குப்பிளான் விக்னேஸ்வரா இளைஞர் கலை இலக்கிய மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் பிற்பகல் 4.30 மணிக்கு குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளன. (ம-313)

* * *

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (313)

**கல்வி மாணிக் கற்கை நெறி**

தேசியக் கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் கல்வி மாணிக் கற்கை நெறி முதலாம், இரண்டாம் வருட வகுப்புகள் காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி பிராந்திய நிலையத்தில் நடைபெறும். (ஒ-313)

**ஆசிரியருக்கு சாரணர் பயிற்சி**

சாரணர் பயிற்சி கலைக்கூறு ஒன்றைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கான கலைக்கூறு-2 பயிற்சி இன்றும் நாளையும் காலை 9 மணிக்கு வவுனியா ஓமந்தைக் கல்லூரியில் நடைபெறவுள்வது.

**மக்கள் சந்திப்பு**

"நாம் எங்கே நிற்கின்றோம்" எனும் தலைப்பில் அமைந்த மக்கள் சந்திப்பு பிற்பகல் 3.30 மணிக்கு புத்தளம் தில்லையடி மக்கள் பணிமனையில் யாழ்.மாநகரசபை உறுப்பினரான மௌலவி சுபியான் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஒ-323)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'வெள்ளைக்கொடி'யுடன் தொடர்கிறது சிறைவாசம்










## அரசியல்வாதி ஒருவரின் சதியே நியாயமற்ற தீர்ப்புக்குக் காரணம்!

### தனக்குக் கிடைத்த ஆசீர்வாதம் என்கிறார் பொன்சேகா

கொழும்பு, நவ. 19

சிறைக்குச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட்ட ஓர் அரசியல்வாதியின் சதி காரணமாகவே எனக்கு இவ்வாறானதொரு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனினும், எதிர்காலத்தின் என்னால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளுக்காகக் கிடைக்கப்பெற்ற ஆசீர்வாதமாகவே இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கருதுகின்றேன்.

- இவ்வாறு முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா நேற்றுத் தெரிவித்தார்.

வெள்ளைக்கொடியுடன் சரணடையும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களை சுடுமாறு பிரிகேடியர் சவேந்திர சில்வாவுக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டார் என சண்டே லீடர் பத்திரிகைக்கு அவர் அளித்த செவ்வி தொடர்பான வழக்கின் தீர்ப்பு நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது.

இதன்போது சரத் பொன்சேகா குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டதுடன் அவருக்கு மூன்று வருடகால சிறைத்தண்டனையையும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நீதிபதிகள் குழுவின் தீர்ப்பை அடுத்து குற்றவாளிக்கூண்டில் நின்றிருந்த சரத் பொன்சேகா தனது தரப்பு நியாயத்தைத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கூறியவை வருமாறு -

நீதிமன்றத்தினால் எனக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பை நானும் மக்களும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இந்தத் தீர்ப்பு நியாயமற்றது. இதனால் மக்களின் எதிர்ப்பார்ப்பு சீர்குலைந்துள்ளது. இவ்வாறானதொரு தீர்ப்பை வழங்கிய நீதிமன்றத்தின் சுயாதீனம் வெளிப்படையாகியுள்ளது. இதனால் நீதிமன்றுக்கு எதிர்காலத்தில் கரும்புள்ளி விழப்போகிறது.

நான் சிறைக்குச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட்ட ஓர் அரசியல்வாதியின் சதி காரணமாகவே நான் இவ்வாறானதொரு தீர்ப்புக்கு உட்பட்டுள்ளேன். எனக்காக பாடுபட்ட அனைவருக்கும் நன்றிகள் - என்றார்.

### தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு

கொழும்பு, நவ. 19

வெள்ளைக்கொடி விவகார வழக்கில் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு விதிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யத் தீர்மானித்திருப்பதாக சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இதன்படி நாளைமறுதினம் திங்கட்கிழமை மேற்படி மேன்முறையீடு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

வெள்ளைக்கொடி விவகார வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட நேற்று நீதிபதிகள் குழுவிலுள்ள ஒருவரான வராவெவ, சரத் பொன்சேகாவை குற்றமற்றவர், அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இருந்து அவரை விடுதலை செய்கிறேன் எனத் தெரிவித்தார்.

எனினும், ஏனைய இரண்டு நீதிபதிகளும் சரத் பொன்சேகாவுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள மூன்று குற்றச்சாட்டுகளில் இரண்டை நிராகரித்தனர்.

இந்த நிலையில், நீதிபதி வராவெவ இப்படித் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கொழும்பு மேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வோம் - என்றார்.

## ஜனாதிபதியின் பிறந்தநாளில் விசேட வழிபாடுகள்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது 66 ஆவது பிறந்தநாளான நேற்றுக்காலை பேலியகொட வித்தியாலங்கார பிரிவேனாவுக்குச் சென்று மத வழிபாடுகளை மேற்கொண்டு பேலியகொட வித்தியாலங்கார பிரிவேனாதிபதி கலாநிதி வணக்கத்துக்குரிய வெலமிட்டியாவே குசலதம்ம தேரரிடம் ஆசிபெற்றார் என ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற வித்தியாலங்கார பிரிவேனா வழிபாடுகளைத் தொடர்ந்து ஜனாதிபதி களனி ரஜமஹா விகாரையிலும் வழிபாடுகளை மேற்கொண்டார்.

களனி ரஜமஹா விகாரையின் விகாராதிபதி அதி. வணக்கத்துக்குரிய பேராசிரியர் கொள்ளுப்பிட்டிய மஹிந்த சங்கரகித்த தேரரிடம் ஜனாதிபதி ஆசீர்வாதம் பெற்றார்.



களனி விஷ்ணு கோவிலுக்கு சென்று பூஜையில் கலந்துகொண்டு ஆசிர் வாதமும் பெற்றார் ஜனாதிபதி.

அதனைத் தொடர்ந்து களனி பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் சில குடும்பங்களுக்கு ஜனாதிபதி சார்பாக பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டதோடு, மூக்குக்கண்ணாடிகள், சக்கரநாற்காலிகள் ஆகியனவும் இலவசமாக வழங்கப்பட்டன.

களனி விஷ்ணு கோவிலுக்குச் சென்ற ஜனாதிபதி வழிபாடுகளை மேற்கொண்டதுடன் வெட்டுவதற்காக வைக்கப்பட்டிருந்த மாடுகளின் ஒரு தொகுதியையும் விடுதலை செய்தார்.

அவ்விடத்திற்கு வருகைதந்திருந்த பொதுமக்கள் பலரும் இதற்காக ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் பிறந்தநாள் நிகழ்வுகளில் அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, மேர்வின் சில்வா, லசந்த அலகியவன்ன ஆகியோருடன் மற்றும் பல அதிகாரிகளும் கலந்துகொண்டனர் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
19 நவம்பர் 2011 சனிக்கிழமை

# மன்னாரில் சிறப்புற நடைபெறவிருக்கும் இந்த ஆண்டுக்கான நாவலர் விழா நாளை

மன்னார்,நவ.19

மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் இணையத்தினரின் ஏற்பாட்டில் இந்த ஆண்டுக்கான நாவலர் விழா நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறப்பான முறையில் நடைபெறவிருப்பதாக இணையத்தின் தலைவர் பிரம்ம ஸ்ரீ ம.தர்மகுமார சர்மா அறிவித்துள்ளார்.

மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி மண்டபத்தில் மு.ப. 10 மணிக்கு விழா நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. இதற்கு முன்னதாகக் காலை 9 மணியளவில் மன்னார் ஞான வைரவர் ஆலயத்தில் இருந்து நாவலர் உருவம் தாங்கிய ஊர்வலம் நந்திக்கொடி சகிதம் ஆயிரத்து 500 அறநெறிப்பாடசாலை மாணவர்கள், 500 இந்து சமயப் பெரியோர்கள் சகிதம் நடைபெறவுள்ளது. ஊர்வலம் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியை அடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

நல்லை ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இந்த விழாவில் முக்கியமாகப் பங்குபற்றவுள்ளமை சிறப்பு அம்சமாகும்.

மேலும் முன்னாள் மன்னார் அரச அதிபர் வேதநாயகன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளுகின்றனர்.

சிறப்பு விருந்தினர்களாக நலிவுற்றோர் நலன்காப்பு நிதியத்தின் செயலாளர் செ.சி. இராமகிருஷ்ணன், இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் மருத்துவர் மு.கதிர்காமநாதன், முசலி பிரதேச செயலர் செ.கேதீஸ்வரன், மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் மா.சிறிஸ்கந்தகுமார், சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் அதிபர் ச.சண்முகலிங்கம், மருத்துவர் எஸ்.செல்வமகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலையின் இணையத் தலைவர் பிரம்ம ஸ்ரீ ம.தர்மகுமாரசர்மா தலைமையில் விழா நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

கலை நிகழ்வுகள், இறை பணியாளர்களுக்கு விருது வழங்குதல், நாவலர் விருது வழங்குதல், நாவன்மைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குச் சான்றிதழ் மற்றும் பரிசு வழங்குதல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மேலும் மன்னார் சிவபூமி இந்து இளைஞர் மன்றத்தினர் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களைக் கௌரவிக்கவுள்ளனர். சிறப்பு நிகழ்வாக மன்னார் மாவட்ட கலை இலக்கிய மன்றத்தினரின் 'நாவலர் கண்ட கனவு நனவாகியுள்ளது, கனவாகவே நிற்கின்றது' என்னும் தலைப்பிலான பட்டி மன்றமும் இடம்பெறவுள்ளது. (க)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சார்பில் டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் நடவடிக்கை

கிளிநொச்சி,நவ.19

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினரால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் ஒருவாரம் டெங்கு ஒழிப்பு வாரமாகப் பிரதேச சபையால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு அங்கமாகப் பிரதேச சபையினரின் வேண்டுகோளின் பிரகாரம் சுகாதாரத் திணைக்களத்தினர் புகையூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். நேற்று பளை நகரில் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கான புகையூட்டல் இடம்பெற்றது.

மேலும் பளை நகரில் இருந்து இயக்கச்சி வரையான பகுதிகளில் பிரதேச சபையினரால் கழிவுகள் அகற்றப்பட்டு நுளம்புகளை அழிப்பதற்கான மருந்துகளும் விசிறப்படுகின்றன. அத்துடன் மக்களுக்கு டெங்கு நோயின் ஆபத்துத் தொடர்பான விழிப்புணர்வுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தச் செயற்பாடுகளில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தலைவர், செயலாளர், பணியாளர்கள் தமது முழுப் பங்களிப்பையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# புனரமைக்க வேண்டிய நிலையில் ஒட்டுசுட்டான் பேராறு மயானம்

முல்லைத்தீவு,நவ.19

ஒட்டுசுட்டான் பேராறுப் பகுதியில் அமைந்துள்ள மயானத்தைப் புனரமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக இங்கு வசிக்கின்ற மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஒட்டுசுட்டானில் உள்ள மயானத்தை இராணுவத்தினர் தமது பயன்பாட்டில் வைத்துக் கொண்டுள்ளனர். இதனால் அங்கு இறப்பவர்களையும் பேராறு மயானத்துக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது. அத்துடன் கற்சிலைமடு, பேராறு, வலதுகரை 3 ஆம் கண்டம், பண்டாரவன்னி, வித்தியாபுரம், கணேசபுரம் ஆகிய கிராம மக்களும் இந்த மயானத்தையே பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் இந்த மயானம் பற்றைகளால் சூழப்பட்டுக் காணப்படுகின்றது. தகனம் செய்வதற்கென உடல்களைக் கொண்டு செல்பவர்கள் தங்கி நின்று உடல்களை எரிக்கவோ அல்லது வேறு கடமைகளைச் செய்வதற்கோ வசதிகள் எதுவும் இங்கில்லை. அத்துடன் கிணறு ஒன்றும் அங்கு உடனடியாக அமைக்கப்படல் வேண்டும்.

மக்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு இந்த மயானத்தைப் புனரமைப்பதுடன் அனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டுமென்பதே பிரதேச மக்களின் வேண்டுகோளாகும். (க-500)

# முல்லை அதிபர்கள் ஏமாற்றம்

முள்ளியவளை,நவ.19

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையில் நேற்று நடைபெறுவதாக இருந்த அதிபர்களுக்கான கூட்டம் நடைபெறவில்லை.

முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டமொன்று நேற்று வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் அதிபர்கள் காலையிலிருந்தே அங்கு குழுமத் தொடங்கிவிட்டனர். ஆனால் கல்விப் பணிப்பாளரோ அல்லது பிரதிக் கல்விப் பணிப்பாளரோ அங்கில்லாத நிலையில் கூட்டம் நடைபெறவில்லை.

இதனால் அங்கு வந்த பாடசாலை அதிபர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதைக் காண முடிந்தது.

மூன்றாம் தவணைக்கான இறுதிப் பரீட்சை வேலைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டிய நிலையில் தாம் இவ்வாறு பயனற்ற வகையில் வந்து செல்வதையிட்டுச் சில அதிபர்கள் தமது விசனத்தையும் வெளியிட்டனர். (க-433)

# முகாமைத்துவ உதவியாளர் நியமனம்

கிளிநொச்சி,நவ.18

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதி மன்றத்துக்கு மூன்று முகாமைத்துவ உதவியாளர்கள் இலங்கை நிதிச் சேவை ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முகாமைத்துவ உதவியாளர் தரம் இரண்டு பதவிக்கு நவரத்தினராசா முருகதாஸ், மகேஸ்வரன் சபேசன், கனகராசா தர்சன் ஆகிய மூன்று பேரே இலங்கை நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக்கடிதங்கள் கிடைத்துள்ளன. (க-6)

## அறம் ஓங்கட்டும்...



தெய்வ சந்நிதியில்: ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பௌர்ணமி தின விழாவில் முன்பள்ளிச் சிறார்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலர் பெருமளவில் கலந்துகொண்டனர். (500)

# பச்சிலைப்பள்ளியில் மரநடுகை

கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் மரநடுகை நிகழ்வொன்றை நடத்தியுள்ளனர். கடந்த 15 ஆம் திகதி சபையின் தலைவர் தலைமையில் சந்தைப் பகுதியில் முதலில் மரம் நட்டு வைக்கப்பட்டது. பின்னர் முள்ளிப்பற்று உப அலுவலகத்திலும் மரங்கள் நட்டு வைக்கப்பட்டன. (க)

# நிறைவேற்றப்படாத தீர்மானங்கள்; விவசாயிகள் மத்தியில் அதிருப்தி

முல்லைத்தீவு,நவ.19

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக விவசாயச் செய்கைக்கான கூட்டங்கள் ஒழுங்காக நடைபெற்றபோதும் அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஒழுங்காக நிறைவேற்றப்படவில்லையென விவசாயிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாகக் கால்நடைகள் கட்டுப்படுத்தப்படாததால் பயிர்கள் நாசமடைந்து வருகின்றன. கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகள் வீதிகள், பாடசாலைகள், பொதுஇடங்கள் ஆகியவற்றில் தங்கி நிற்பதோடு இரவு வேளைகளில் பயிர்களுக்குப் பெரும் அழிவையும் ஏற்படுத்தி வருகின்றன.

தற்போதும் வயல்களில் விதைப்பு வேலைகள் நடைபெறுகின்றன. ஆனால் வேலிகள் அமைக்கப்படாமையால் கால்நடைகள் அழிவுகளை மேற்கொள்கின்றன.

எனவே கமநலச் சேவை நிலையத்தின் அனுசரணையுடன் கமக்கார அமைப்பினர் விவசாய செய்கைக்கான கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதுடன் ஏனைய தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதே இந்தப் பகுதி விவசாயிகளின் கோரிக்கையாகும். (க-500)

# ஜனாதிபதியின் பிறந்தநாளையொட்டி வற்றாப்பளையில் விசேட வழிபாடு

முள்ளியவளை,நவ.19

முல்லைத்தீவு மாவட்டம் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தின நிகழ்வுகள் பூசை வழிபாடுகளுடன் நடந்தேறியுள்ளன.

இந்த நிகழ்வில் சிறுவர் நன்னடத்தை மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவும் கலந்து கொண்டார்.

இவருடன் ஜனாதிபதி யின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் கனகரத்தினம், அரச அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அத்துடன் தலைமைத்துவப் பயிற்சி பெற்றுவரும் 500 மாணவர்களும் இவர்களுடன் இணைந்து கொண்டனர்.

ஆலயத்தில் ஜனாதிபதியின் நலன்வேண்டி விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வையொட்டி ஆலய வளாகத்தைச் சுற்றிப் பெருமளவு படையினர் நின்றதை அவதானிக்க முடிந்தது.

மேலும் ஜனாதிபதியின் பிறந்தநாள் நிகழ்வுகளுக்காக விரிவான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் வற்றாப்பளை அம்மன் ஆலய சுற்றாடலில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அத்துடன் கோயிலுக்குள் சென்ற பொதுமக்கள் சிலரைப் பரி சோதனைக்கு உட்படுத்தியதையும் காணமுடிந்தது. (க-433)

# பூநகரியின் பல இடங்களிலும் விரிவான சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகள்

கிளிநொச்சி,நவ.19

பூநகரிப் பிரதேசத்தில் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வழிநடத்தலில் பூநகரிப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

மேற்படி சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளில் பூநகரி வாடியடி, செல்வபுரம் போன்ற பகுதிகளில் வீடுகளுக்கு நுளம்பு ஒழித்தல் புகையூட்டல், சிரமதானம் போன்ற செயற்பாடுகள் 17 ஆம் திகதி இடம்பெற்றன. இந்தச் செயற்பாடுகள் தொடர்ந்தும் பூநகரிப் பகுதிகளில் இடம்பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார உத்தியோகத்தர்கள், பூநகரிப் பிரதேச சபையினர், பூநகரிப் பொலிஸார், பூநகரி இராணுவத்தினர், வர்த்தக சங்கத்தினர், மலேரியா தடுப்புப் பிரிவினர், வைத்திய அதிகாரி, இந்தப் பகுதி பொது மக்கள் எனப் பலரும் பங்குபற்றிச் சுகாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொது இடங்களில் சிரமதானம் செய்தல், வீடு வீடாகச் சென்று மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல், ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வுக் கருத்துரைகளைப் பரப்புதல் போன்ற நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

வன்னிப் பகுதிகளில் மழை காலத்தைத் தொடர்ந்து நுளம்பு, இலையான் போன்றவற்றின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இவ்வேளையில் இப்படியான சுகாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் மீளக் குடியமர்ந்த நிலையில் தற்காலிக வீடுகளில் வாழும் மக்களின் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி நோய்கள் பரவுவதிலிருந்து பாதுகாக்க முடியுமென்பது பலரதும் கருத்தாக உள்ளது. (க-426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றம் தவிர்க்கப்படக் கூடியதல்ல

எமது அடிப்படைக் கொள்கைகளில் நாங்கள் பற்றுறுதியுடன் இருக்க வேண்டும். அதேவேளை நிதானத்துடன் செயற்பட வேண்டும். எதையாவது தாருங்கள், அதனை ஏற்றுக்கொள்வோம் என்று நாம் நினைத்தால், இத்தனை பேர் சித்திரவதைப்பட்டதற்கும், உயிர்களைத் தியாகம் செய்ததற்கும் அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நாளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட இருக்கும் வேளையில், உதயனுக்கு வழங்கிய செவ்வியிலேயே முன்னாள் நீதியரசர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், அரசாங்கத்துடன் ஸ்திரத் தன்மையுடன் பேச்சு நடத்த வேண்டும். அதனையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அவர்கள் முன்னெச்சரிக்கையுடன் செயற்படாவிட்டால், தமிழ் மக்கள் அவர்களை நிராகரிக்கத் தொடங்குவர். அதனைத் தொடர்ந்து மக்களின் ஒற்றுமையும் குலைந்துவிடும் என்ற யதார்த்தத்தையும் முன்னாள் நீதியரசர் வெளிப்படுத்தி உள்ளார்.

சமகாலப் போக்குகளை அனுசரித்து அவர் வெளியிட்டுள்ள கருத்துகள் ஊன்றிக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. அவர் சுட்டிக்காட்டும் முந்தைய நிலைகளும், அவற்றின் மூலம் பெற்ற அனுபவங்களும் இப்போது மீட்டுப் பார்க்கப்பட வேண்டியவையே.

* கடந்த 60 வருடங்களாக பெரும்பான்மை இனத்தவர்களின் அரசியல் கட்சிகள் 'அதைத் தருகிறோம் இதைத் தருகிறோம்' என்று கூறிவிட்டு எதனையுமே சட்ட ரீதியாக வழங்கவில்லை. அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

* பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டது. டட்லி - செல்வா ஒப்பந்தம் கைவிடப்பட்டது.

* சட்ட வலுவுள்ள மாவட்ட சபைகள் உருவாக்கித் தரப்படும் என்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கூறிவிட்டுப் பின்னர் அதிலிருந்தும் நழுவி விட்டார்.

– கடைசியில், இப்போது கண்ட மிச்சம், வடக்கு - கிழக்கு வாழ் மக்களுக்கு எதுவுமே அரசியல் ரீதியாக வழங்கப்படவில்லை.

இவற்றுடன் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டும் பிரதான விடயம் உன்னிப்பாகக் கவனிக்கத்தக்கது.

தமிழ் மக்கள், கூட்டமைப்பைத் தமது ஏகப்பிரதிநிதிகள் ஆக்கிவிட்டதால், தமிழர்களின் அரசியலில் முக்கியமான இக்கட்டத்தில் அவர்களின் உரிமைகளுக்கான போராட்டத்தில் தாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் நிதானத்துடனும் மிகக் கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் அவர்கள் எடுத்து வைக்க வேண்டும்.

தமிழர்களின் அரசியல் உரிமைகள் முந்திய காலங்களைவிட, இப்போது மிகப் பெரிய அளவில் அனைத்துலக மயப்பட்டுவிட்டது. அதனை மனதிற்கொண்டு, அற்ப சொற்ப சலுகைகளுக்காகச் சோரம் போய்விடக் கூடாது.

* ஆயுதம் ஏந்திய பிரபாகரன் காலத்தில், அவர் மிஞ்சியமையால் அரசுகள் அவரிடம் கெஞ்சின. இன்று கூட நாங்கள் அரசிடம் கெஞ்ச வேண்டியதில்லை. அரசு மிஞ்சிவிடவும் இடம் அளிக்க வேண்டியதில்லை.

* எமது கோரிக்கைகள் தார்மீக அடிப்படையிலானவை; சட்ட ரீதியானவை; சர்வதேச சமூகம் ஏற்கும் தன்மையுடையன. ஆகையால் அரசிடம் கெஞ்சும் நிலைக்குப் போகக் கூடாது. ஒருவரிடம் மற்றவர் கெஞ்சினால் முதலாமவர் மிஞ்சுவது வழமை.

* தமிழ் மக்களின் அரசியல் கருத்துக்கள் சிங்கள மக்களுக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக, தமிழர்கள் தமது பாரம்பரிய உரிமைகளையும் தனித்துவங்களையும் விட்டுக்கொடுக்க முடியாது. சமஷ்டி என்ற பதத்துக்குத் தவறான அர்த்தத்தைக் கற்பித்தவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகளே. இப்பொழுது அவர்கள் அதன் உண்மையான அர்த்தத்தைத் தமது மக்கள் விளங்கிக்கொள்ளவைக்க வேண்டும்.

* இந்திய அரசமைப்பைப் போன்று சமஷ்டி என்று கூறாமலே, சமஷ்டி அமைப்பின் கீழ் பெறக்கூடிய உரித்துக்களை நாம் பெறுவதற்கு இடமளிக்க வேண்டும்.

– இத்தகைய பின்னணியில் சமஷ்டி என்ற பதத்தைப் பயன்படுத்தாமலே மாகாண சபைகளுக்குரிய அதி உச்ச அதிகாரங்களை அரசு வழங்க வேண்டும்.

– வடக்கு, கிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமைகளை தமிழர் தரப்பில் வலியுறுத்த வேண்டும். முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் உரிய தருணத்தில் வெளியிட்ட கருத்து ஒவ்வொன்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் தக்க கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை.

அவர் தெரிவிப்பது போன்று, தமிழ் மக்கள், அரசாங்கத்திடம் கெஞ்ச வேண்டிய நிலை எதுவும் இல்லை. தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய அவர்களது பிறப்புரிமைகள் சிங்கள மக்களின், அவர்களின் தலைவர்களின் அரசியல் ஆசாபாசங்களை நிறைவேற்றுவதற்காக, விட்டுக்கொடுக்கப்பட வேண்டியவை அல்ல. இதனைச் சர்வதேசங்கள் பரந்த அளவில் உணர்ந்திருக்கின்றன. நாம், மதியூகத்தினால் எமக்குரிய உரிமைகளை வென்று எடுப்பதற்கு கடந்த 62 வருடங்களில் கிடைக்காத சந்தர்ப்பமும் வாய்ப்பும் இப்போது உண்டாகி உள்ளன.

ஆகையால், தங்கள் சார்பில் பேசுவதற்கும், அரசியல் விடிவை நோக்கி உரிய வழியில் உத்வேகத்துடனும் விவேகத்துடனும் செயற்படுவதற்கும் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையையும் (Mandate) அவர்களுக்குரிய தேவைகளையும் கருத்தில் கொண்டு, செயற்பட வேண்டிய தார்மிகக் கடமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு உண்டு. மக்கள் மனம் அறிந்து செயற்பட வேண்டிய வேளை இது. தம் போக்கில் செயற்படும் உரிமை விரும்பத்தக்கது அன்று. மிகக் குறிப்பாக அரசு விரிக்கும் வலையில் சிக்கிக் கொள்ளாது செயற்படும் வியூகமும் மதிநுட்பமும் இன்றைய பிரதான தேவைகள். இந்த இக்கட்டான கட்டத்தில் சில பிரதான விடயங்களில் இரகசியம் பேணப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு அவசியம் என வாதிட்டாலும், மக்கள் இனி என்ன, ஏது, எவ்வாறாகப் போகிறது என்று அங்கலாய்க்க இடம் தரலாகாது.

மக்கள் பிரதிநிதிகள் தமது நடவடிக்கைகளை செயற்பாடுகளில் இரகசியம் பேணுவதும் ஜனநாயக வழி அன்று. மக்கள் நலனில் அக்கறையுள்ள தக்காரின் ஆலோசனைகள், கருத்துட்டங்கள், வாதப் பிரதிவாதங்கள் அவசியத்திலும் அவசியம்; மிகவும் இன்றி அமையாதவை.

**அவ்வாறு செயற்படுவது தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு வலுவூட்டும். பல எலிகள் சேர்ந்தால் புற்றெடுக்க மாட்டா என்ற பழமொழி தமிழ் மக்கள் இன்றுள்ள நிலையில் பொருந்தாது. தமிழர் நலன் நாடிய அறிவு ஜீவிகளின் கருத்துகள் உள்வாங்கப்படுவதும் பரந்த அளவிலான ஆரோக்கியமான கலந்துரையாடல்களும் அத்தியாவசியம்.**

**பல்வேறு துறைசார் புத்திஜீவிகளைக்கொண்ட சிந்தனைசார் ஆலோசனை ஆயம் (Think Tank) ஒன்றை நிறுவி, அதன் சிபார்சுகள், நெறிமுறைகளை உள்வாங்கிச் செயற்படும் மனப்பக்குவம் தேவை. மக்கள் எமக்கு ஆணை தந்திருக்கிறார்கள். அதனால் நாங்களே - கட்சியே எல்லா முடிவுகளையும் எடுக்க முடியும் என்ற செருக்கு கவ்வைக்கும் கூடாது. அரசாங்கம் வெவ்வேறு வடிவங்களில் ஆலோசனை ஆயங்களை நிறுவியிருந்தமையையும் இங்கே சுட்டிக்காட்டுகிறோம்.**

**எந்த நிபுணத்துவமிக்க ஒருவரினதும் செயற்பாடும் திறந்த புத்தகமாக அமைவது சிறப்புடைத்து. மக்கள் நலன் கருதிய செயற்பாடுகளில் அளவுக்கு அதிகமாக இரகசியம் பேணும் முனைப்பு, எப்போதும் சந்தேகத்தையும் விரும்பத் தகாத விளைவுகளையும் தரும் என்பதனை மனங்கொண்டே ஆகவேண்டும்.**

# ஏனைய நாடுகள் போல் இலங்கையிலும் தேர்தல்கள் தொடர்பான கல்விமுறை

## பிரதித் தேர்தல் ஆணையாளர் மொகமட் தகவல்

வலி- வடக்கு, நவ.19

ஏனைய நாடுகளில் இடம்பெறுவது போன்று இலங்கையிலும் தேர்தல் தொடர்பான கல்வியை மக்கள் மத்தியில் புகட்டத் தேர்தல் திணைக்களம் அடுத்தாண்டு முதல் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

கடந்த காலத்தில் தேர்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கல்வியை ஏற்படுத்த உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. இந்த நிலையில் தற்போது தேர்தல் திணைக்களத்தின் ஆணையாளரினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி தகவலைத் தேர்தல் திணைக்களத்தின் பிரதித்தேர்தல் ஆணையாளர் மொகமட் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த காலங்களில் தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையைத் தேர்தல் திணைக்களம் மேற்கொள்ளவில்லை. அடுத் தாண்டு முதல் குறிப்பாக வாக்காளர் இடாப்பில் பதிவுகளை மேற் கொள்ளுதல், வாக்களித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றித் தேர்தல் திணைக் களம் பரப்புரைகளை மேற்கொள்ளவுள்ளது.

இந்தச் செயல் திட்டத்திற்கென விசேடமாக அரசினால் நிதி ஒதுக்கீடு வழங்கப்படாத போதிலும் தேர்தல் திணைக்கள ஆணையாளர் தனக்குக் கிடைக்கும் நிதியில் ஒரு பகுதியை இந்தச் செயல் திட்டத்துக்கு பயன்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். அடிப்படையில் அடுத்த ஆண்டில் இருந்து இந்த செயல் திட்டம் முன்னெடுக்கப்படும் என்றார்.

(த-86)

# வரவு-செலவுத் திட்டம் முடியும் வரை அமைச்சர்கள் வெளிநாடு செல்லத் தடை

கொழும்பு, நவ.19

எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் முடிவடையும் வரை அமைச்சர்கள் எவரும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளத் தடைவிதிக்கப் பட்டுள்ளது.

வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா ஆகிய இரு அமைச்சர்கள் மட்டுமே ஐ.நா.சபை கூட்டத் தொடரில் பங்குபற்ற வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்விரு அமைச்சர்களையும் தவிர வேறு அமைச்சர்கள் எவரும் வரவு செலவுத்திட்ட விவாதம் முடிவடையும் வரை வெளிநாட்டுப் பயணமெதனையும் மேற் கொள்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும், வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம் இடம்பெறும் வேளையிலும், வாக்கெடுப்பு இடம்பெறும் வேளையிலும் அமைச்சர்கள் அனைவரும் நாடாளுமன்றத்துக்குத் தவறாது சமூகமளிக்க வேண்டும் எனவும் கட்சி அலுவலகம் அமைச்சர்களுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த-ஞ)

# யாழ்.பல்கலை உடற்கல்வி டிப்ளோமாவை பட்டக் கற்கையாகத் தரம் உயர்த்துங்கள்

## உயர் கல்வி அமைச்சரிடம் சரவணபவன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, நவ.19

யாழ்.பல்கலைக்கழகத்தில் தற்பொழுது நடைபெற்றுவரும் உடற்கல்வி டிப்ளோமா பாடநெறியை மூன்று வருடப் பயிற்சியுடன் பட்டப் படிப்பாகத் தரம் உயர்த்தும்படி யாழ்.மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பட்டம் வழங்கும் பாடநெறியாகத் தரம் உயர்த்துவதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையிலும், யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் அதனை நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளதாகச் சுட்டிக் காட்டியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு உத்தரவிடுமாறும் கேட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக உயர் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் கீழ்க்கண்ட விவரங்களையும் அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளார்.

**✱ டிப்ளோமா பாடநெறி 1998 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.**

**✱ கடந்த 12 வருடங்களில் 415 மாணவர்கள் டிப்ளோமா பயிற்சிகளை முடித்து சான்றிதழ் பெற்று வெளியேறி உள்ளனர்.**

**✱ பட்டதாரிகளுக்கான நியமனங்கள் வழங்கப்படும்போது இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுவதில்லை.**

✱ மூன்று வருடங்களுக்கு முன் களனி மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்களில் உடற்கல்விப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு அங்கு மூன்று வருடப் பயிற்சியுடன் பட்டம் வழங்கப்படுகின்றது. யாழ். பல்கலைக் கழகம் ஓரம் கட்டப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் பெரிதும் அதிருப்தியடைந்துள்ளனர்.

முன்னர் 750 மாணவர்களுக்கு ஒரு உடற் பயிற்சி ஆசிரியர் நியமிக்கப் படவேண்டும் என நிர்ணயிக்கப்பட்டபோதி லும் மஹிந்த சிந்தனையின் மூலம் இம்முறை ஒழிக்கப்பட்டு சகல பாடசாலை களுக்கும் உடற்கல்வி ஆசிரியர்களை நியமிக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் காணப்படும் உடற்பயிற்சி ஆசிரியர் வெற்றிடங்களுக்கு யாழ்.பல்கலைக் கழகத்தில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றுள்ள வர்களை நியமனம் செய்யவேண்டும்.

**இவர்களுக்கு பட்டதாரிகளுக்கான அடிப்படைச் சம்பளம் வழங்கப்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் உயர்கல்வி அமைச்சரிடம் கேட்டுள்ளார்.**

**(த-ச)**

## நாளை

கார்த்திகை 04, ஞாயிற்றுக்கிழமை 20.11.2011
திதி: தசமி முன்னிரவு 11.52 வரை
நட்சத்திரம்: பூரம்
மு.ப. 11.52 வரை
சுபநேரம்: 9.09-10.39 வரை, ராகு காலம்: 4.39-6.09 வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவுக்கான பிரதான மார்க்கமான பண்ணை வீதி மோசமாகச் சேதம்

யாழ்ப்பாணம், நவ.19

தீவுப்பகுதிக்கான பிரதான பாதை மார்க்கமான பண்ணை வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளமையால் அந்த வீதியினூடாகப் பயணம் செய்வதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாலத்தையொட்டி அமைந்துள்ள வீதியின் இரு மருங்கிலும் பெரிய குழிகள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் திருத்த வேலைகள் இடம்பெற்ற பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளமையால் அந்தப் பகுதி சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

அல்லைப்பிட்டி வரையான வீதியின் இரு மருங்கிலும் பல இடங்களில் வாகனங்கள் விலத்திச் செல்ல முடியாத அளவுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளன. பண்ணையில் இருந்து மண்டைதீவு வரை வீதியின் நடுவிலும் பெரிய பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த வீதியைச் செப்பனிடுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுச் சில மாதங்களாக வேலைகள் இடம்பெற்றன. பின்னர் அவை அப்படியே கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

தற்போது மழை ஆரம்பித்துள்ளமையால் இந்த வீதியின் நிலைமை மேலும் மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. இதனால் இந்த வீதியூடாகப் பயணிப்பதில் வாகனச் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தீவுப் பகுதியின் மிகப் பிரதான வீதியாக உள்ள பண்ணை வீதியின் நிலை குறித்து இதுவரை உரிய தரப்பினர் அக்கறை காட்டாமல் இருப்பதாக தீவுப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த வீதியைத் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு தீவுப் பகுதிக்கான சீரான போக்குவரத்தை உரியவர்கள் உறுதி செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-7)

**புனரமைப்புப் பணிகள் இடைநடுவில்**



மோசமாகச் சேதமடைந்துள்ள பண்ணை வீதியின் நிலை இது. (த-7)

# யாழ். நகரின் முக்கிய சந்திகளில் சக்தி வாய்ந்த மின் விளக்குகள்

யாழ்ப்பாணம், நவ.19

யாழ். நகரின் முக்கிய சந்திகளுக்கு அதி சக்தி வாய்ந்த மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

ஆஸ்பத்திரி வீதிச் சந்தி, சத்திரச்சந்தி, மின்சார நிலைய வீதிச் சந்தி மற்றும் யாழ். பஸ் தரிப்பு நிலையம் ஆகிய இடங்களில் மின்சார சபையினால் இந்த சக்தி வாய்ந்த மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளமையால் யாழ். நகரப் பகுதி இரவு வேளையில் போதிய மின்சார வெளிச்சம் இன்றி இருளில் மூழ்கிக் காணப்பட்டது.

இதனால் பஸ் நிலையத்துக்கு வரும் பயணிகள் உட்படப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இதனையடுத்துத் தற்போது யாழ்.நகரின் முக்கிய சந்திகளுக்கு மட்டும் அதி சக்தி வாய்ந்த மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் யாழ். நகரப் பகுதியில் இப்போது இரவில் ஓரளவு வெளிச்சம் ஏற்பட்டுள்ளதாகப் பயணிகள் கூறுகின்றனர். (த-26)

# உயர்கிறது வெங்காய விலை

யாழ்ப்பாணம், நவ.19

குடாநாட்டுச் சந்தைகளில் சின்ன வெங்காயத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

தற்போது பெய்துவரும் மழையினால் வெங்காயப் பயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இதுவே வெங்காயத்தின் விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

மழை வெள்ளத்தில் மூழ்கிய வெங்காயப் பயிர்கள் தற்போது உடனடியாக அறுவடை செய்யப்பட்டுச் சந்தைக்கு எடுத்து வரப்படுகின்றன.

திருநெல்வேலிச் சந்தையில் இந்த வெங்காயம் ஒரு கிலோ 80 ரூபா முதல் 90 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

சின்ன வெங்காயத்தின் விலை அடுத்து வரும் நாள்களில் மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் மேலும் தெரிவித்தனர். (த-26)

**கவனிப்பார்களா?...**



இந்த நிலை:- யாழ். தனியார் பஸ் நிலையத்துக்கு முன்பாக மழை வெள்ளம் தேங்கியுள்ளமையால் சாரதிகளும், பயணிகளும் பெரும் சிரமப்படுகின்றனர். இது தொடர்பாகப் பலமுறை சுட்டிக்காட்டப்பட்ட போதும் யாழ். மாநகர சபையால் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்தப் பகுதியில் குளம் போல வெள்ளம் தேங்கியுள்ளது.

(த-7)

# யாழ். ஆஸ்பத்திரிக்கு தூதுவர்கள் விஜயம்

யாழ்ப்பாணம்,நவ.19

மலேசியா, இந்தோனேசியா, வியட்நாம் நாடுகளின் இலங்கைத் தூதுவர்கள் உட்பட ஐந்து நாடுகளின் அதிகாரிகள் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று அங்குள்ள தற்போதைய நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர்.

வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் திருமதி பவானி பசுபதிராஜா இதனைத் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்த அவர்கள் எதிர்காலத்தில் உதவிகள் வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியுள்ளனர் எனப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்தோனேசியத் தூதர் ஜபார் ஹுசைன், வியட்நாம் தூதர் ரொன் சிங்தாஹ், மலேசியத் தூதுவர் அஸ்மி சைனுடின், இந்தோனேசியத் தூதரக முதலாவது செயலர் அல்பேட் அப்பி, மலேசியத் தூதரக அதிகாரி ரான்லுங், தாய்லாந்து தூதர அதிகாரி ருங்கன்பா சிறிவன்னவிற், தாய்லாந்து தூதரக முதல் செயலர் நரிட்டா சுப்டிஸ்ற் ஆகியோரே யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்றிருந்தனர். (த-4)

# இந்திய நீதித்துறையினரின் உதவியுடன் வடக்கு - கிழக்கு நீதிபதிகளுக்குப் பயிற்சி

**யாழ்ப்பாணத்தில் நீதியமைச்சர் ஹக்கீம்**

வடமராட்சி,நவ.19

வடக்கு, கிழக்கு மாகாணத்தில், தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதியில் தமிழ் இயங்கும் ஆரம்ப நீதிமன்றங்களில் தமிழ் மொழி மூலமான நடவடிக்கைகளை ஊக்குவிக்கத் தமிழ் நீதிபதிகளுக்கு இந்திய நீதிபதிகளின் உதவியுடன் பயிற்சி அளிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இவ்வாறு நீதி அமைச்சர் ரவூக் ஹக்கீம் புனரமைக்கப்பட்ட பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் கொண்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதித் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

யுத்தத்தால் சேதமடைந்த இந்த நீதிமன்றக் கட்டடத் தொகுதி 70 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது. இந்தக் கட்டடத்தொகுதியைப் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் சாந்தா அபிமன்ன சிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நீதி அமைச்சர் ரவூக் ஹக்கீம் ஆங்கிலத்திலும் தமிழிலும் உரையாற்றினார்.

அவர் கூறியதாவது:-

பல்லினத்தன்மை கொண்ட எமது நாட்டில் இன்றைய சவாலுக்கு முகம் கொடுக்க வேண்டியது நீதி அமைச்சின் பணியாக இருக்கின்றது. மொழி அமுலாக்கல் அமைச்சுடன் நீதி அமைச்சும் இணைந்து மொழிகளைக் கையாள்வது தொடர்பாகப் புதிய செயற்திட்டம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

இந்திய அரசின் உதவியோடு தமிழ் பேசும் வடக்கு - கிழக்கு மாகாண ஆரம்ப நீதிமன்றங்களில் பணியாற்றும் தமிழ் பேசும் நீதிபதிகளுக்குத் தமிழ் மொழியில் வழக்குகளை நடத்த ஊக்குவிக்க இந்திய நீதிபதிகளுடன் கலந்துரையாடல்களையும், பயிற்சிகளையும் மேற்கொள்ளவுள்ளோம்.

யாழ். பல்கலைக்கழகச் சட்ட பீடத்தை ஊக்குவிக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். நீதித்துறை, சட்டம், சட்டவிரிவுரைகளை மேலும் விரிவுபடுத்தும் பொருட்டு சட்ட ஆய்வு நிறுவனம் ஒன்றை விரைவில் தோற்றுவிக்கவுள்ளோம். இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஏனைய நீதிமன்றங்களுக்கு இருக்கின்றதைப் போல, தமிழ் மூல நீதிமன்றங்களை வலுவூட்ட ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம்.

இந்த நீதிமன்றத்துக்கு அருகில் உள்ள ஹாட்லிக்கல்லூரி, கல்லூரியுடன் சேர்ந்ததாக உள்ள நீதிமன்றத்துக்குச் சொந்தமான காணித் துண்டைத் தருமாறு அமைச்சுக்கு விண்ணப்பித்துள்ளோம். இதனை நாம் ஆராய்ந்து வருகின்றோம். விரைவில் சாதகமான பதில்கிடைக்கும்- என்றார். (த-236-319)

# மெகா கோப் சிற்றி விரைவில் கொடிகாமத்திலும் திறக்கப்படும்

யாழ்ப்பாணம்,நவ.19

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 'மெகா கோப் சிற்றி' ஒன்றை விரைவில் திறந்து வைக்கவுள்ளதாக யாழ் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மெகா கோப் சிற்றிக்காக அந்தச் சங்கத்துக்கு 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு கொடிகாமம் பஸ்தரிப்பு நிலையத்துக்கு அருகில் இதற்கான கட்டடம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் முதல் முதலாக இந்த மெகா கோப் சிற்றியை அமைப்பதற்கான வாய்ப்பு மேற்படி சங்கத்துக்கு கிடைத்துள்ளது.

இந்தச் சங்கத்தின் கோப் சிற்றி மற்றும் ஐந்து மினி கோப் சிற்றிகள் என்பன மிகவும் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றன- என்றார். (த-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காக்கைதீவுக் கடற்கரையில் விரைவில் புதிய மீன் சந்தை

## வலி.தென்மேற்குப் பிரதேச சபை தீர்மானம்

சண்டிலிப்பாய்,நவ.19

பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடனும் கடலுணவு வியாபாரிகளினதும் பாவனையாளர்களினதும் நலன் கருதி காக்கை தீவுக் கடற்கரையில் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் மீன் சந்தை அமைக்கப் படவுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

காக்கை தீவுக் கடற்கரையில் கடற்றொழிலில் ஈடுபட்டுவரும் சாவல்கட்டு, காக்கைதீவு, ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மீனவர்கள், பிரதேசசபைக்கு வரி செலுத்தாமல் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள கூறுவிலை மண்டபத்தில் வைத்துக் கடலுணவை வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்பனை செய்து வருகிறார்கள்.

மீனவர்களிடம் கடலுணவை வாங்கும் வியாபாரிகளும் இடநெருக்கடிகளின் மத்தியில் கடற்றொழிலாளர்களைப் போல் பிரதேசசபைக்கு வரி செலுத்தாமல் கூறுவிலை மண்டபத்தில் வைத்து வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதனால் சபைக்கு வரும் வருமானத்தில் பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் பாவனையாளரும் பெரும் சிரமங்களை அனுபவிக்கிறார்கள்.

பல மாதங்களாக நடைபெற்று வரும் இந்த நிலை குறித்து பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டதைத் தொடர்ந்து, வியாபாரிகளிடமிருந்து வரி வசூலிக்கும் வகையில் கூறுவிலை மண்டபத்துக்கு அருகில் சந்தை கட்டுவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

சந்தை அமைக்கப்படுவதனால் பாவனையாளருக்கு ஏற்பட்டுவந்த சிரமங்கள் நீங்குவதுடன் மாலை நேர சந்தை நடைபெறுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (த-115)

# சட்டத்தரணிகளின் பிரச்சினைகள்; நீதியரசருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் தமது தொழில் சார் குறைபாடுகள் அல்லது பிரச்சினைகள் குறித்து பிரதம நீதியரசர் சீராணி பண்டார நாயக்க, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் அடங்கிய குழுவினருடன் கலந்துரையாடியுள்ளனர்.

சட்டத்தரணிகளின் பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்த குழுவினர் அவை தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு நேற்று முன்தினம் பிற்பகல் விஜயம் செய்த இந்தக் குழுவினர் சட்டத்தரணிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது பொலிஸாரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கை தனிச் சிங்களத்தில் இருப்பதனால் விசாரணையின்போது சிக்கல்கள் எழுகின்றன. எனவே இந்த அறிக்கைகளும் தமிழில் பதிவு செய்யப்படல் வேண்டும். சட்ட ஆவணங்களைப் புதிதாக அச்சடிக்கும் போது உரிய மொழி பெயர்ப்புடன் அவை தமிழ் மொழியில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்யப்படும் ஆவணத்தரவுகள் சரியான மொழி பெயர்ப்பில் அமைந்திருக்கவில்லை என இந்தக் கலந்துரையாடலின் போது சட்டத்தரணிகள் சுட்டிக் காட்டினர்.

அத்துடன் பழைய சட்ட அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளது எனவும், இவற்றை இலகுவாகப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பெரும்பாலான சட்ட நூல்கள் பிறமொழிகளிலேயே காணப்படுகின்றன. அவை அனைத்தும் தமிழ் மொழியில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் இதில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நீதிமன்றில் தமக்கான கட்டட வசதிகள் போதாமலுள்ளது எனவும் இவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

இவற்றைச் செவிமடுத்த குழுவினர் இவைபற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

(த-4)

# யாழ்.நகரின் பிரதான வடிகால் துப்புரவின்றி தூர்ந்த நிலையில்



யாழ்ப்பாணம்,நவ.19

யாழ். நகரில் கந்தப்பசேகரம் வீதியூடாக புல்லுக்குளத்துக்குச் செல்லும் பிரதான வடிகால் துப்புரவுப் பணிகள் எதுவுமின்றித் தூர்ந்த நிலையில் உள்ளது. இதனால் கால்வாயில் கழிவு நீர் தேங்கி அந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

இந்த வடிகால் கடந்த பல வருடங்களாக எந்த வித கட்டுமானப் பணிகளும் இல்லாமல் காணப்படுகின்றது. யாழ். மாநகர சபை இதனை இதுவரை கவனத்தில் கொள்ளவில்லை என அந்தப் பகுதியில் உள்ள வர்த்தகர்களும் பொது மக்களும் தெரிவிக்கின்றனர்.

தூர்ந்த நிலையில் காணப்படும் இந்த வடிகாலின் இரு பக்கங்களிலும் செடிகள், பற்றைகள் வளர்ந்துள்ளன.

வடிகாலின் ஒரு கரையில் சில குடியிருப்புகளும் உள்ளன. வடிகாலில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதால் இந்தக் குடியிருப்பாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

இந்தப் பகுதியில் நுளம்புப் பெருக்கமும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் டெங்கு பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த வடிகால் தொடர்பில் யாழ்.மாநகரசபை அதிக கவனம் எடுத்து இதனைச் சீர்செய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-26)

# கவிதை நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் அனுசரணையில் யாழ்.ராஜனின் ''கரைந்தோடும் கண்ணீர்'' என்ற தலைப்பிலான கவிதை நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நூல் வெளியீட்டுக்குப் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக வணிக பீட சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ கற்கை நெறித் துறைத் தலைவர் இளையதம்பி இரட்ணம் கலந்து கொள்வார்.

சிறப்பு அதிதியாக நாவாந்துறைப் பங்குத் தந்தை அருட்தந்தை பா.பி. இராஜசிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

(த-ந)

# பாடசாலை மாணவர்களுக்கு இலவச கணினிப் பயிற்சி

## பளை அபிவிருத்திப் பேரவை ஏற்பாடு

பளை,நவ.19

பளை அபிவிருத்திப் பேரவையினால் பாடசாலை மாணவர்களுக்கான இலவச கணினிப் பயிற்சி வகுப்புகள் டிசெம்பர் மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாடசாலைகளின் மூன்றாம் தவணை விடுமுறை காலத்தில் இந்தக் கணினிப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளவுள்ள மாணவர்கள் பளை முல்லையடியில் உள்ள பேரவை அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்களுக்கான இலவச கணினிப் பயிற்சி வகுப்புகள் பேரவை மண்டபத்தில் கட்டம் கட்டடமாக நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(த-207)

# போலி விவசாய இரசாயனங்கள் யாழ்ப்பாணத்தில் விற்பனையில்

## எச்சரிக்கிறார் விவசாயப் பணிப்பாளர்

யாழ். குடாநாட்டில் போலி விவசாய இரசாயனப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாகவும், குறிப்பாக சுன்னாகம், அளவெட்டிப் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் இவை விற்பனை செய்யப்படுவதாகவும், விவசாயிகள் சரியான விவசாய இரசாயனங்களை உறுதிப்படுத்திய பின்னரே தமது கொள்வனவுகளை மேற்கொள்ளுமாறும் யாழ். விவசாயப் பணிப்பாளர் எஸ். ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

அற்றப்புறோன் 5 ஈ.சி, சுப்பர்டாஸ் போன்ற இரசாயனங்களே போலித் தயாரிப்புக்களில் விற்பனையாவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த இரசாயனங்களைப் பயன்படுத்திய விவசாயிகள் இவை உரிய முறையில் தொழில்படுவதில்லை என முறைப்பாடு செய்துள்ளதன் காரணமாக மேற்கொண்ட ஆய்வுகளின் போது இந்த போலி விவசாய இரசாயனங்கள் விற்பனையில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சாதாரண விவசாயிகளால் இவற்றை அடையாளம்காண்பது கடினம் எனவும், யாழ். மாவட்டத்தில் இயங்கும் சகல அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்கள், சில்லறை விற்பனை நிலையங்கள் உரிய உற்பத்தியாளர்களின் அனுமதி பெற்ற விற்பனை முகவர்களிடமே அவற்றைக் கொள்வனவு செய்யுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

போலி விவசாய இரசாயனங்களை விற்பனை செய்வது கண்டு பிடிக்கப்படும் பட்சத்தில் விற்பனை உரிமம் உடன் ரத்துச் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-7)

# பண்டத்தரிப்பு கூ.சங்கத்தின் 17 ஆவது கிளை

யாழ்ப்பாணம்,நவ.19

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 17 ஆம் இலக்க கிளை கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார்.

மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 17 லட்சம் ரூபா செலவில் இந்த விற்பனை நிலையம் இளவாலை சித்திரை மேழியில் திறந்து வைக்கப்பட்டதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

இந்தக் கிளை நவீன கோப் சிற்றி தரத்துக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது.

(த-26)

# வலிமேற்கு காட்டுப்புலத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு

## பிரதேச சபைத் தலைவரிடம் முறைப்பாடு

சண்டிலிப்பாய்,நவ.19

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் காட்டுப்புலம் கிராமத்தில் அனுமதியின்றித் திருட்டுத் தனமாக மணல் அகழ்வு நடைபெறுவதுடன் பனை மரங்களும் வெட்டப்பட்டு ஏற்றிச் செல்லப்படுகின்றன. இது குறித்துக் கவலை அடைந்துள்ள அந்தப் பகுதி மக்கள் இதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவரைக் கோரியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டிருந்த இராணுவ நடவடிக்கை காரணமாகக் காட்டுப்புலம் கிராமத்தில் வசித்து வந்த சுமார் 150 மீனவக் குடும்பங்கள் 1992 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்ந்து வருகிறார்கள். மீளக்குடியமர்த்துமாறு பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களைக் கோரிய போதும் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை.

கடற்படையினரின் கண்காணிப்பில் இருக்கும் இந்தப் பகுதியிலிருந்து திருட்டுத் தனமாக வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்லப்படுகின்றது. இதனால் குடியிருக்கும் இடங்கள் சேதத்துக்குள்ளாகி வருகின்றன. அத்துடன் பயன்தரும் பனை மரங்களும் வெட்டப்பட்டு ஏற்றிச் செல்லப்படுகின்றன.

எங்கள் சொந்த மண்ணையும் பனை மரங்களையும் பாதுகாக்கும் வகையில், அடாவடித் தனமாக இடம்பெற்று வரும் இந்தச் செயலைத் தடுத்து நிறுத்துவதற்கு உரியவர்களிடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு இந்தப் பிரதேச மக்கள் தலைவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(த-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

A9 வீதியில் நுணாவில் சந்தி எவர் கிரீன் தனியார் மருத்துவ மனைக்கு முன்பாக 4 பரப்புக் காணி பழைய வீட்டுக் கட்டடத்துடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: யாழ் ரெக்ஸ்,
இல. 13A, நவீன சந்தை, சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை பத்மநாதன்

(முன்னாள் முகாமையாளர் தோல்பொருள் கூட்டுத்தாபனம், உரிமையாளர் கைதடிச் சந்தி சொரூபினி பல்பொருள் வாணிபம், கைதடி வீரகத்திப்பிள்ளையார் பரிபாலனசபை உறுப்பினர், கைதடி நாவற்குழி கம்பிளி வைரவர் கோயில் தர்மகத்தா)



சரசாலையைப் பிறப்பிடமாகவும், கைதடி தெற்கு மானார்வளவை வசிப்பிடமாகவும் கொண்டபொன்னுத்துரை பத்மநாதன் 15.11.2011 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சரசாலை தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தில்லைநாயகி தம்பதியரின் அன்பு மகனும், கைதடி தெற்கு மானார் வளவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மானார்-தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், பத்மராஜன் (பத்தியர்), பரராஜன் (UK), பாலச்சந்திரன் ( சந்திரன்-கொழும்பு), பாலேந்திரன் ( இந்திரன், ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரிமளாதேவி, மாரியம்மா, நவரட்ணராணி, விமலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திவ்விய சொரூபினி (திவ்வியா) மற்றும் அனீத்தா(கனடா), ஜீவகி (கனடா), சுஜீதாயினி, மயூரன், தங்கசொரூபினி (UK), தயாள சொரூபன் (கொழும்பு இந்துக் கல்லூரி உயர்தர மாணவன்), தாரகா (கொழும்பு இந்து மகளிர் கல்லூரி 12 ஆம் தர மாணவி ) ஆகியோரின்அன்புப் பேரனும், அபிலாச், அபிசேக், மித்தி (கனடா) ஆகியோரின் பூட்டனும், ஜோகானந்த ஈஸ்வரனின் (இந்தியா) தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி ஊற்றல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
மகன் பத்மராஜன் (பத்தியர்)

மானார் வளவு,
கைதடி தெற்கு, கைதடி. (10598)(3.6.7)

## இரண்டாம் மொழி கற்கை; ஒப்பமிடல் இன்று

தேசிய கல்வி நிறுவகத்தில் இரண்டாம் மொழிக்கற்கையை (சிங்களம், ஆங்கிலம்) மேற்கொண்டுவரும் ஆசிரியர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இந்த பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் அனுமதி அட்டைகளில் ஒப்பமிடுவதற்காக இன்று சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரிக்கு வரு மாறு தேசிய கல்வி நிறுவகத்தின் புதிய இணைப்பாளர் க.தணிகாசலம்பிள்ளை கேட்டுள்ளார்.

## காலியில் இளைஞர் கத்திக் குத்தில் பலி

காலி ஜின்தொட்ட பகுதியில் இடம் பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்த நிலையில் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர். வர்த்தக நிலையம் ஒன்றில் ஏற்பட்ட இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் ஜின்தொட்ட, ஹப்புகல்ல பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கடை விற்பனைக்கு

A9 வீதியில் சாவகச்சேரி சுற்றுவட்ட சந்தியில் நிது மதர் கெயருக்கும் கரன் பல்பொருள் வாணிபத்துக்கும் இடையில் அமைந்துள்ள இல.102 இல் உள்ள கடை விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: யாழ் ரெக்ஸ்,
இல. 13A, நவீன சந்தை, சாவகச்சேரி.

## கடை வாடகைக்கு

இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக எல்லா வசதிகளுடனும் கடை வாடகைக்குண்டு.
தொடர்பு : 0776081693

## காணி விற்பனைக்கு

நல்லூர் கோயில் வீதியில் நான்கு பரப்புக் காணியும் வீடு வளவும் விற்பனைக்கு உண்டு.
தொலைபேசி இல- 0773992261

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடனடியாக உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம்.
அழையுங்கள்: 0771329513
Computer Repair

## தவறிவிட்டது

நாகலிங்கம் உதயராணி என்பவரின் தேசிய அடையாள அட்டை (856663736V), காப்புறுதி அனுமதிப் பத்திரம், வரிப் பத்திரம், BOC Bank Book, LB Finance அடகுச்சீட்டு என்பன அடங்கிய கை பேர்ஸ் ஒன்று 03.11.2011 அன்று மருதனார்மடத்துக்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0779181071 இற்குத் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## மரண அறிவித்தல்



### சிவகுமார் சுஜித்

சின்னப்பா வீதி, நவாலியைச் சேர்ந்த சிவகுமார் -சிவசாந்தி தம்பதியரின் அன்பு மகன் சிவகும்ார் சுஜித் 17.11.2011 வியாழக் கிழமை ஜேர்மனியில் அகாலமரணமானார்.

அன்னார் சிவகுமார்-சிவசாந்தி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் சுருதியின் அன்பு சகோதரனும் கொழும்பு வைத்தியர் சிவசம்பு பொன்னுத்துரை - சறோஜினிதேவி தம்பதியரின் பேரனும் கிருபானந்தனின் (லண்டன்) மருமகனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னப்பா வீதி,
நவாலி கிழக்கு.

தகவல்: பி.பொன்னுத்துரை,
(உதயன் செய்தியாளர்)

## கண்ணீர் அஞ்சலி



கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் பரிபாலன சபையின் பரம்பரை உறுப்பினரும் கைதடி தெற்கைச் சேர்ந்தவருமான

### பொன்னுத்துரை பத்மநாதன்

15.11.2011 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துள்ளார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய வீரகத்தி விநாயகப் பெருமானை வேண்டுவதுடன் அவரது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலன சபை
வீரகத்திப் பிள்ளையார் கோயில், கைதடி.
(10599)(6-7-8)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் முதல் அதிபராக இருந்து இறைபதமடைந்த

### கதிரவேலு ஆறுமுகம்

அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/ நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை,
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(10608)(7-8-9)

# மரண அறிவித்தல்



## சபாபதி தனபாலசிங்கம்

(இணுவில் பத்திரிகை முகவர்)

திருநெல்வேலி, மணல்தறை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் நீராவியடியை வதிவிடமாகவும் கொண்ட சபாபதி தனபாலசிங்கம் நேற்று (18.11.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் சாம்பவியின் பாசமிகு தந்தையும் நீலாவதி, காலஞ்சென்ற இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.11.2011)வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-6051)(1.6.7)

இல.61, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் சர்வதேச ரீதியிலான பிரசாரங்களை முறியடிக்க வெளிவிவகார அமைச்சால் முடியாது

## பயங்கரவாத விவகார நிபுணர் ரொஹான் குணரட்ண கருத்து

புலிகளால் சர்வதேச ரீதியாக பரப்பப்படும் பொய்யான தகவல்களையும் பிரசாரங்களையும் வெளிவிவகார அமைச்சால் மாத்திரம் முறியடிக்க முடியாது என்று பயங்கரவாத விவகார நிபுணர் பேராசிரியர் ரெஹான் குணரட்ன கூறியுள்ளார்.

'இலங்கையின் எதிர்காலம் - மேற்குலக மண்ணில் விடுதலைப் புலிகளை எதிர்கொள்ளல்' என்ற தொனிப்பொருளில் கொழும்பு பிரிட்டன் குழுவில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்:

இது நாம் செய்த பெரியதொரு தவறு. இப்பிரசாரங்கள் எப்போதும் உண்மையானவை அல்ல. ஆனால் நாம் அவற்றை முறியடிக்க வேண்டும். ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவை இலங்கைக்கு பயணம் செய்யுமாறு அரசு அழைத்திருக்கலாம்.

அவ்வாறு அழைக்கப்படாத நிலையில் அந்தக்குழு இறுதியில் புலிகள் சார்பு அமைப்புகளின் தகவல்களினதும் பிரசாரங்களினதும் அடிப்படையிலேயே அறிக்கையைத் தயாரித்துள்ளது. புலிகளின் சர்வதேச வலைப் பின்னல் மேற்கொள்ளும் இலங்கைக்கு எதிரான பிரசாரங்களை முறியடிக்கவும் மேற்கு நாடுகளில் புலிகளின் பிரசாரங்களால் மங்கச் செய்யப்பட்ட இலங்கையின் மதிப்பை மீள நிலைநாட்டவும் அந்த நாடுகளுடன் நல்லுறவை நிலைநாட்டவும் தொண்டுநிறுவன ஆலோசனைப் பிரிவொன்றையும் புலம்பெயர்ந்தோர் பிரிவொன்றையும் ஸ்தாபிக்க வேண்டும்.

புலிகளின் மூன்று முக்கிய ஈர்ப்பு மையங்கள் இருந்தன. முதலாவது பிரபாரகன். அடுத்தது பிரசாரம் மேற்கொள்வதற்கான் ஆற்றல், நிதி திரட்டுவதற்கு, ஆயுதம் வாங்குவதற்கான ஆற்றல் மற்றும் விருத்தியடைந்த கப்பல் வலையமைப்பைக் கொண்ட விருத்தியடைந்த சர்வதேச வலையமைப்பு. மூன்றாவது, போரிடுவதில் அவர்களின் விசேட ஆற்றலாகும்.

நெடியவன், வண. பிதா இமானுவேல், உருத்திரகுமாரன் போன்றோர் பொய்யான தகவல்களை தமது அமைப்புகள் மற்றும் பிரசார வலையமைப்புகளுக்கூடாகப் பரப்புவதில் முன்னிற்கின்றனர். வடக்கு- கிழக்கு மாகாணங்களில் சமாதானத்தைப் பாதுகாத்தல், நல்லிணக்கத்தை நோக்கி நகர்தல் மூலம் ஜனநாயகத்தை நிலைநாட்டுதல் போன்றவற்றில் அரசு தீவிரமாக ஈடுபட வேண்டும்.

புலிகள் பெரும் எண்ணிக்கையான அரசியல் தலைவர்கள், மற்றும் இராணுவத் தலைவர்களை கொன்றனர். அந்தக் கொலைகளை வேறெந்த பயங்கரவாத அமைப்பும் செய்தவற்றுடன் ஒப்பிட முடியாது - என்றார் அவர்.

# ரணிலுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

கட்சியின் நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் எதிராகச் செயற்படுகிறார் என்றும் கட்சியின் யாப்பையும் மீறி நடக்கிறார் என்றும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை ஒன்று நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்டது.

அந்தக்கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி மைத்திரி குணரத்னவினால் தயாரிக்கப்பட்ட இந்தப் பத்திரிகை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.கவின் தலைமைத்துவத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள இந்த குற்றப் பத்திரிகையில் 20 விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கட்சியின் யாப்பை ரணில் விக்கிரமசிங்க மீறியுள்ள சந்தர்ப்பங்களை ஒவ்வொன்றாக சுட்டிக் காட்டியுள்ள மைத்திரி குணரத்ன, அந்தக் குற்றச் சாட்டுக்களுக்குச் சாட்சியாளர்களாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் முன்னாள் செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரை உள்ளடக்கியுள்ளார்.

அனைத்து குற்றச்சாட்டுக்களையும் அவர் சாட்சியங்களுடன் முன்வைத்துள்ளார்.

# இந்தியத் துறைமுகங்கள் இலங்கை துறைமுகங்களுக்கு அச்சுறுத்தலல்ல

## இந்திய முன்னாள் வெளிவிவகாரச் செயலர் கருத்து

இந்தியத் துறைமுகங்கள் ஹம்பாந்தோட்டையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட துறைமுகத்துக்கோ இலங்கையின் ஏனைய துறை முகங்களுக்கோ அச்சுறுத்தல் இல்லை என்று இந்திய முன்னாள் வெளி விவகாரச் செயலர் ஷியாம் சரண் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இந்திய - இலங்கை மன்றமும், சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையமும் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் எதிர்காலத்தில் கப்பல்துறை அபிவிருத்தி மிகப் பெரியளவிலாக இருக்கும் என்பதால் இந்தியாவினதோ இலங்கையினதோ துறைமுகங்கள் ஆதிக்கம் செலுத்த முடியாது என்றும் அவர் கூறினார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகமோ எதிர்காலத்தில் வட பகுதியில் அமைக்கப்படக்கூடிய துறைமுகமோ இனிவரும் காலங்களில் போதுமானதாக இருக்க மாட்டாது என்று அவர் தெரிவித்தார். எனினும் ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் வடக்கிலுள்ள துறைமுகம் என்பன முறையாகப் பயன்படுத்தப்பட்டால் இலங்கை நன்மைகளை பெற முடியும் என்று அவர் கூறினார்.

இலங்கை, இந்தியாவுக்கு இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு அதிகரிக்கப்பட வேண்டும் எனக் கூறிய அவர், இந்தியா மற்றும் சீனா ஆகியவற்றையும் ஒப்பிட்டுப் பேசினார்.




இந்திய - இலங்கை மன்றமும், சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையமும் கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஏற்பாடு செய்த 'இந்தியாவும் இலங்கையும் ஆசிய மீள் எழுச்சியும்' கருத்தரங்கில் இந்திய முன்னாள் வெளிவிவகார செயலர் ஷியாம் சரண் பிரதான உரைநிகழ்த்துகிறார். இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம, இந்தியத் தூதர் அசோக் கே காந்தா ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

# கொலையுண்ட பாரதவின் மகனுக்கும் தொலைபேசியில் அச்சுறுத்தல்

கொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச் சந்திரவின் மனைவி சுமணா பிரேமச் சந்திர, தமது மகனான யோஹின் ராவை கொலை செய்யப்போவதாகத் தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப்படுவதாக, கறுவாத் தோட்ட பொலிஸில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார்.

கொலைக்கு முன்னர் தமது கணவருக்கும் இதேபோன்று மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன.

எனவே தமது மகனுக்கும் அந்த நிலை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக சுமணா குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலையும் இவ்வாறான அச்சுறுத்தல் அழைப்பு விடுக்கப்பட்டதாக சுமணா தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உட்பட்ட மூவர் கடந்த ஒக்ரோபர் 8 ஆம் திகதி முல்லேரியாவில் வைத்து கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தெற்கு அதிவேக வீதியில் கண்காணிப்பு கமெராக்கள்!

ஜனாதிபதியால் திறந்து வைக்கப்படவுள்ள தெற்கு அதிவேக வீதியில் வேகக்கட்டுப்பாட்டு மீறல்களைக் கண்காணிப்பதற்காக கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்படவுள்ளன. கொட்டாவையிலிருந்து காலி மாவட்டத்தின் பின்னதுவ வரையிலான இவ்வீதியிலுள்ள 8 நுழைவாயில்களிலும் இந்தக் கண்காணிப்பு கமெராக்கள் பொருத்தப்படவுள்ளன. கொட்டாவையிலிருந்து காலி மாவட்டத்தின் பின்ன துவ வரை 8 இடங்களில் இந்தக் கண்காணிப்பு கமெராக்கள் பொருத்தப்படவுள்ளன. மணித்தியாலத்திற்கு 100 கிலோ மீற்றர் வேக எல்லையை மீறும் சாரதிகளை கண்டறியவும் இந்த கமெராக்கள் உதவியாக இருக்கும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி இவ் வீதி திறந்து வைக்கப்படவுள்ள நிலையில் நாட்டின் நெடுஞ்சாலைகளின் பாவனையாளர்களுக்காக 1989 எனும் புதிய துரித தொலைபேசி சேவையொன்றும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

# நீதிமன்ற உத்தரவின்றியே இணையங்கள் முடக்கம்

## கெஹலிய கருத்து

கொழும்பு, நவ. 19

நீதிமன்றத்தின் உத்தரவு இல்லாமலேயே தாம் இணையத்தளங்களை முடக்கியதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது:

உரிமை கோராதவர்களினால் பல இணையத்தளங்கள் நடத்தப்படுகின்றன. இந்த நிலையில் நாட்டின் இறைமை, பாதுகாப்பைக் கருதி அவற்றை அரசு முடக்கியதாக ரம்புக் வெல கூறினார்.

அத்துடன், சட்ட ஏற்பாடுகள் இல்லாமலேயே குறித்த இணையத்தளங்கள் முடக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை தமக்கு இலங்கை அரசினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து சில ஆக்கங்களை



அகற்றியதாக கூகுல் இணைய நிறுவனம் அறிவித்துள்ளது. எனினும் அது தொடர்பான தகவல்களை கூகுல் தெரிவிக்கவில்லை.

தமக்கு உயர்பீடத்தில் இருந்து விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து சில ஆக்கங்களை அகற்றியதாக கூகுலின் பொதுமக்கள் தொடர்பு முகாமையாளர்கள் ஸ்டிவன் ரொசென்தல் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் சிங்கள இணையத் தளங்களை முடக்கும் அரசின் திட்டம் ஊடக நசுக்கல் திட்டத்தின் ஒரு கட்டமே என்று ஊடக காப்பு நிறுவனங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

# லிபர்டி பிளாஸா கடைத்தொகுதி உரிமையாளர்களை வெளியேற உத்தரவு

இலங்கையில் முதல்முதலில் உருவாக்கப்பட்ட வர்த்தகத் தொகுதிகளில் ஒன்றான லிபர்ட்டி பிளாஸா கட்டடத் தொகுதியின் கடை உரிமையாளர்களை வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 400 கடை உரிமையாளர்கள் இவ்வாறு வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

லிபர்ட்டி பிளாஸா கடைத் தொகுதியின் புதிய முகாமைத்துவம் இவ்வாறு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் முதன் முதலில் உருவாக்கப்பட்ட வர்த்தகக் கடைத் தொகுதிகளில் லிபர்ட்டி பிளாஸாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் முதனிலை வர்த்தகக் கட்டடத் தொகுதியாக லிபர்டி பிளாஸாவை மாற்றும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக புதிய முகாமைத்துவம் அறிவித்துள்ளது.

எனினும், நீண்ட காலமாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட வந்த தம்மை திடீரென வெளியேறச் செல்வது நியாயமில்லை என்று வர்த்தகர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நேற்றுக்காலை நடைபெற்ற அவசர கூட்டமொன்றில் கடை உரிமையாளர்களுக்கு, கட்டட முகாமைத்துவம் இந்த உத்தரவைப் பிறப்பித் துள்ளது.

இரண்டு வாரங்களுக்குள் கட்டடத் தொகுதியை விட்டு வெளியேற வேண்டும் என்று கடை உரிமையாளர்களிடம் கோரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
19 நவம்பர் 2011 சனிக்கிழமை

# கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

நாவற்குழி, நவ. 19

கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வல்லைப் பாலத்தின் கீழ் மீன்பிடியைப் பாதிக்கும் மண்பிட்டிகளின் ஏனைய பகுதி அகற்றப்படல் வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதுதொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி தெரிவித்தார்.

அச்சுவேலிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகக் கட்டடத்தை இராணுவத்தினரின் பாவனையிலிருந்து மீட்டுத்தருமாறு சங்கத்தின் அதிகாரியால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பணியகத்தை மிகவிரைவில் விடுவிப்பதாக 511 ஆவது படையணியின் தளபதி கூறினார்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலா சாலையின் பழைமையடைந்த கட்ட டங்களின் கூரை மழை காலத்தில் ஒழுகு வதால் ஆசிரிய மாணவர்களும், விரிவுரையாளர்களும் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டது.

உரும்பிராய் பிரதேச விவசாயிகள் மருதனார்மடம் சந்தையில் தமது விளைபொருள்களை சந்தைப்படுத்துவதில் கஸ்டங்களை எதிர்நோக்குவதாக விவசாய சம்மேளனப் பிரதிநிதி சுட்டிக்காட்டினர் இது தொடர்பான முறைப்பாட்டை எழுத்து மூலம் சமர்ப்பித்தால் வலிகாமம் தெற்கு பிரதேச சபையிடம் முன்வைத்து தீர்வு காண உதவ முடியுமெனக் கூறப்பட்டது.

கோப்பாய் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் மாணவர்களுக்கு போதிய கட்டட வசதியில்லையென்று கோட்டக் கல்வி அதிகாரியால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. புதிய கட்டடம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கூறினார்.

உரும்பிராய் வடக்கு இருளன் கிராமத்தை சேர்ந்தோர் வலுக்குறைந்த மின்சாரம் காரணமாக பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இந்தப் பகுதிக்கு தனியாக மின்மாற்றியைப் பொருத்தி வலுக்கூடிய மின்சாரத்தைப் பெற்றுத் தரவேண்டுமென கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



சாவகச்சேரி லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் நீரிழிவு விழிப்புணர்வு வார ஆரம்ப நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. லயன்ஸ் கழக வலயத் தலைவர் லயன்.தி.முருகதாசன் மங்கல விளக்கேற்றுகிறார். அருகில் மாவட்ட ஆளுநர் லயன் பிரியந்த பெர்னாண்டோ, உதவி ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ, மாவட்டத்தலைவர் லயன் எஸ்.எஸ் அருளானந்தம் ஆகியோர் நிற்கின்றனர். (வ-207)

# 30சற்றலைட் ரிசீவர்களுடன் ஒருவர் சிக்கினார்

இந்தியாவிலிருந்து சட்ட விரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட 30 சற்றலைட் ரிசீவர்களுடன் சந்தேக நபர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

சென்னையிலிருந்து அதிகாலை 3 மணியளவில் இலங்கை வந்த ஜெட் விமானத்தின் மூலமே குறித்த சந்தேக நபர் இலங்கை வந்ததாகவும் அவர் மீது சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள் அவருடைய கையில் இருந்த 3 பைகளையும் சோதனையிட்ட போது குறித்த 30 சற்றலைட் ரிசீவர்களும் கைப்பற்றப்பட்டதாக கட்டுநாயக்க விமான நில்ய பிரதிச் சுங்கப் பணிப்பாளர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை விமான நிலையப் பொலிஸாரும் சுங்க அதிகாரிகளும் மேலதிக விசாரணைக்குட்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கட்டாரிலிருந்து சிகரெட்டுகளைக் கடத்தியவர் கைது

கட்டாரிலிருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டு வந்த 30 ஆயிரத்து 600 சிகரெட்டுகள் அடங்கிய 153 சிகரெட் பெட்டிகளுடன் சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டாரிலிருந்து நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இலங்கை வந்த விமானத்திலே குறித்த சந்தேக நபர் இந்த சிகரெட்டுகளைக் கொண்டு வந்துள்ளார்.

இந்தச் சந்தேக நபரிடமிருந்து மீட்கப்பட்ட சிகரெட்டுகளின் பெறுமதி ரூபா 6 இலட்சத்து 12 ஆயிரம் என்று கட்டுநாயக்க விமான நிலைய பிரதி சுங்கப் பணிப்பாளர் ராஜ்மோகன் தெரிவித்தார். (வ)

# அரச ஊழியர்களின் கொடுப்பனவு பஜ்ஜெட்டில் அதிகரிக்கப்பட வேண்டும்

## ஜே.வி.பி.கோரிக்கை

கஷ்டங்களை எதிர்நோக்கி வரும் அரச ஊழியர்களுக்கு எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் குறைந்து 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வாவது வழங்கப்பட வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார். கடந்த காலங்களில் அரசால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கு பல நிவாரணங்களை வழங்குவதாக அரசு வாக்குறுதி அளித்தது. அவற்றில் எதனையும் அரசு நிறைவேற்றவில்லை என்றும் அரச சொத்துக்களை மிகவும் குறைந்த விலைக்கு தனியாருக்கு விற்கும் நடவடிக்கையில் அரசு குதித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (வ)


**வீடு வாடகைக்கு**

198,9/1,பொன்னப்பா லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்த வீடு வாடகைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம். 0777517617 K. தயாபரன்

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
சுத்தம் செய்யப்பட்டது 1Kg 450/= மட்டும்.
2 Kg ற்கு மேல் கொள்வனவு செய்தால் Kg 430/-
மேலும் கூடுதல் கொள்வனவுக்கு விசேட விலைக் கழிவு
விஜய நாதர், நாவற்பிட்டி வீதி, ஆவரங்கால். (10396)(6-7-8)

**காணி விற்பனை**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இருந்து கிட்டத்தட்ட 300 மீற்றர் தூரத்தில் மணியகாரன் வீதியில் கிணற்றுடன் கிட்டத்தட்ட 40 பனை மரத்துடன் கூடிய 9¾ பரப்பு வெறும் காணி வீடு, தொழிற்சாலை கட்டுவதற்கு ஏற்றது. உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே. 0774951983

**கண்ணீர்ப் பூக்கள்**

*சிவராணி ஜெயபாலன்*

கூட்டுறவுச் சங்க உறுப்பினர் சிவராணியினது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர்,
சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கம்.
(10576)
(1,6,7)

**வீடு விற்பனைக்கு**

சுன்னாகம் ஐயனார் கோயில் முன்பாக 3 ½ பரப்புக் காணியில் கிணற்றுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772887479, 0213219664

**பட்டதாரி நியமன ஒத்துமாறல் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்)**

மேற்படி நியமனம் வவுனியா நகரில் கிடைக்கப் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு ஒத்துமாற விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். T.P. 0773530407

**கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு**

சகல தடுப்பு மருந்துகளும் வைக்கப்பட்ட 40 நாள் ஊர்க் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு
தொடர்பு: 0217200616

ஜேர்மன் சுவிஸ் நாடுகளுக்கு செல்பவர்களுக்கான ஜேர்மன் மொழி வகுப்பு யாழ் நகரில் ஆரம்பம்
பிரபல ஆசிரியை
திருமதி சாந்தினி செல்வரட்ணம்
(COLOMBO IDEAL ACADEMY) TEL : 077 361 81 39
DEUTSCH
ஆரம்பம் 10.12.2011
வெளிவாரி பட்டப்படிப்புக்கள்
BA, B.BA, B.COM, BCA, Bsc(IT), MA, MBA, MSc,&MCA
Bachelors & Master PG Diploma Courses
M.Ed தொடர்புகட்கு: 077 991 42 60
பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது
NEW MEDIA COMPUTER COURSES
LAW ENTRANCE EXAM
APSC
Palaly road, Urumpirai
சிங்கள மொழி கற்பிக்க ஆசிரியர் தேவை


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது பாடசாலையின்
மதிப்புக்குரிய அதிபர்
**தம்பிராசா அம்பலவாணர்**
(B.A,Dip.in.Ed,SLPS 2 -I) அவர்கள்
சமாதான நீதிவானாக 16.11.2011
அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி
உயர்திரு.மா.கணேசராசா அவர்கள்
முன்னிலையில் சத்தியப்பிரமாணம்
செய்து கொண்டார். இந்த
நிகழ்வினையிட்டு நாம்
பெருமகிழ்ச்சி அடைவதுடன் மேலும்
பல உயர்வுகளைப் பெற்று வாழ
மனதார வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மீசாலை விக்கினேஸ்வரா ம.வி, மீசாலை.
(7949)3.6.7)

மரணமே உன் கூர் எங்கே?
பாதாளமே உன் ஜெயம் எங்கே?
1 கொரி: 15 : 55

**நன்றி கூறுகின்றோம்**

**போதகர் ப.ஜோண்சன்**

அவர்களின் மரணச் செய்திகேட்டு உடனேயே வந்து உதவிசெய்தவர்களுக்கும் கர்த்தருடைய கிருபையால் நல்லடக்க ஆராதனையில் கலந்துகொண்ட யாழ்.போதகர்கள், ஸ்தாபனங்களின் ஐக்கியம் மற்றும் அனைத்து திருச்சபை போதகர்களுக்கும் ஊழியர்களுக்கும் விசுவாசிகள், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜீவ பாதை மிசனறி சபை குடும்பத்தினர்
இல.10, கதிற்றல் வீதி, யாழ்ப்பாணம்.
(10573)(1,6,7)

**மூன்றாம் ஆண்டு நினைவலைகள்**

*செல்வி*
*மகேந்திரன் கௌரி*



அன்னை மடியில்
02.08.1989

ஆண்டவன் அடியில்
19.11.2008

மழலைப் பேச்சும் மங்காத புன்னகையும்
குழந்தைத் தனமும் உன் குறும்புகளும்
மறைந்து மூவாண்டுகள் - ஆனால்
மறக்க முடியவில்லை உன்னை
உன்பார்வை உன் பேச்சு உன் சிரிப்பு
இன்று எம்மை ஊமையாக்கியது - எம்
உணர்வுகளை ஊமையாக்கியது
உன் நினைவுகள்

கொடுக்குளாய் வீதி,
உடுத்துறை வடக்கு,
தாளையடி. (8014) (2-8-6-7)

குடும்பத்தினர்
தாய், தந்தை, சகோதரிகள்,
மைத்துனர், பெறாமகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் போருக்குத் தயாராகிறார்கள் என்பதை கண்காணிப்புக்குழு அறியாமல் போனது எப்படி?

## பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய கேள்வி

கொழும்பு, நவ.19

நேட்டோவிடம் இருந்தும், இந்தியாவின் 'றோ' அமைப்பிடம் இருந்தும் புலனாய்வுத் தகவல்களைப் பெற்றுக் கொண்ட இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு, விடுதலைப்புலிகள் போருக்குத் தயாராகிறார்கள் என்ற தகவல் தெரியாமல் போனது எப்படி? என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

'அமைதிக்கான அடமானங்கள்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள, 'இலங்கையில் தோற்றுப்போன நோர்வேயின் சமாதான முயற்சிகள்' தொடர்பான அறிக்கை குறித்துக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

'நேட்டோ' மற்றும் 'றோ' விடம் இருந்து இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு புலனாய்வுத் தகவல்களைப் பெற்றது என்பதை ஒஸ்லோ ஒப்புக்கொண்டுள்ளது.

இந்தநிலையில் சமாதானப் பேச்சுகள் நடந்து கொண்டிருந்த போதே விடுதலைப்புலிகள் போருக்குத் தயாராவது பற்றிய தகவல் அவர்களுக்குத் தெரியாமல் போயிருக்கமுடியாது.

விடுதலைப்புலிகள் போருக்குத் தயாராகி வருவது பற்றிய எமது மதிப்பீடுகளை வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகள் உறுதிப்படுத்திய நிலையில், அவர்கள் சமாதான முயற்சிகளை குருட்டுத்தனமாக வழிநடத்தியது நிலைமைகள் வேகமாக மோசமடைவதற்கு காரணமாகி விட்டது என்றும் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

றோ மட்டுமே தம்மை முறைசாரா வழிகளின் ஊடாக அணுகியதாகவும், ஆனாலும் அவர்களை தம்மால் முழுமையாக நம்ப முடியவில்லை என்றும், நேட்டோவின் புலனாய்வு அறிக்கைகளை மட்டுமே உறுதி செய்ய முடிந்தது என்றும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கூறினார் என மதிப்பீட்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

றோவின் தகவல்களை நம்பாது போனாலும், நோர்வேஜியர்கள் புதுடெல்லியில் றோ அதிகாரிகளுடன் உயர்மட்டச் சந்திப்புகளை நடத்தியுள்ளனர் என்பது உறுதியாகியுள்ளது.

இதற்கிடையே ரேடர் கண்காணிப்பை மேற்கொள்வதற்கு விடுதலைப்புலிகளும் இலங்கை அரசும், இந்தியாவும் எதிர்ப்பை வெளியிட்டன என்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு கூறியுள்ளது.

இவை குறித்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

நோர்வேயின் அறிக்கை சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட தோல்விகளை மட்டும் சுட்டுக் காட்டுகிறது. இருந்தபோதிலும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு புலனாய்வுத் தகவல்களை நேட்டோவிடம் இருந்தோ அல்லது பிராந்திய அல்லது பூகோள சக்தியிடம் இருந்தோ பெற்றிருக்கக்கூடும்.

விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகவே தோற்கடிக்க வேண்டியிருந்தது. தீவிரவாதப் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணமுடியும் என்று அனைத்துலக சமூகம் நம்பியது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

பேச்சுகளில் நிலையாகப் பங்கெடுக்க இலங்கை இராணுவத்துக்கு வாய்ப்பு மறுக்கப்பட்ட அதேவேளை, நோர்வேஜிய இராணுவ வல்லுநர்கள் படைச்செயற்பாடுகளை குறுக்கிக் கொள்ளும் இராணுவ நுட்பக் கூறுகளில் தொடர்புபட்டிருந்தனர்.

முழுமையான செயற்பாடுகள் தொடர்பாகவும், குறிப்பாக இராணுவ மற்றும் புலனாய்வு அம்சங்கள் குறித்து மீளாய்வு செய்யப்படவேண்டிய தேவையை நோர்வேயின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.- எனக் குறிப்பிட்டுள்ளார்.

(வ)

## இலங்கையில் சர்வதேசதர விவசாய விதை வங்கி

கொழும்பு, நவ.19

சார்க்வலய நாடுகளுக்கான சர்வதேச தரத்திலான விவசாய விதை வங்கி ஒன்றை இலங்கையில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் ஆலோசனைக்கு ஏற்ப அமைச்சரவை இதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளது.

மாலைதீவில் நடைபெற்ற சார்க் உச்சி மாநாட்டில் கைச்சாத்திடப்பட்ட நான்கு உடன்படிக்கைகளின் ஒன்றுக்கு அமைவாக இந்த விதை வங்கி நிறுவப்பட உள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாடு மற்றும் வலய நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு போன்றவற்றின் அடிப்படையில் வலயத்தில் நிலவும் பயிர் விதைகளுக்கான தட்டுப்பாட்டை இனங்கண்டு அவற்றைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த வங்கி அமைக்கப்படுகின்றது.

(வ)

# 38 இலங்கையர்கள் தமிழகத்தில் நிர்க்கதி

### 'தம்பதிவ' புனித யாத்திரைக்கு அழைத்துச் சென்றவர் பணத்தோடு மாயம்

கொழும்பு, நவ.19

இந்தியாவிலுள்ள பௌத்தர்களின் புனித ஸ்தலமான 'தம்பதிவ' வழிபாட்டுக்குச் சென்ற இலங்கையர்கள் 38 பேர் தமிழ்நாட்டில் நிர்க்கதியாக விடப்பட்டுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களை இந்தியாவிற்கு அழைத்துச்சென்ற ஏற்பாட்டாளர் அவர்களின் பணத்தை சுருட்டிக்கெண்டு தலைமறைவாகிவிட்டார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

நிர்க்கதியானவர்கள் தமிழ்நாடு மகாபோதி சங்கமத்திய நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மீகொட பிரதேச நிறுவனமொன்றின் உரிமையாளரே குறித்த இலங்கையர்களை இந்தியாவிற்கு அழைத்துச் சென்றுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

## பொல்பித்தகமவில் டெங்கு அபாயம்

குருநாகல்,நவ.19

குருநாகல் மாவட்டம் பொல்பித்திகம சுகாதார அதிகாரி பிரிவில் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என பிரதேச சுகாதாரசேவை அதிகாரி சமரக்கோன் பண்டார தெரிவித்தார்.எனவே, பொது மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரதேசத்தில் டெங்குநோய் பரவுவதைத் தடுப்பதற்கு துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதோடு, காய்ச்சலால் பீடிக்கப்படும் சகல நோயாளர்களையும் இரத்தப் பரிசோதனை செய்துகொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் முதன்முறையாக பார்வையற்றோருக்கான பத்திரிகை



கொழும்பு, நவ.19

இலங்கையில் முதன்முறையாகப் பார்வைப் புலனற்றோர் வாசிக்கக் கூடிய "பிரெய்லி" எழுத்துக்களிலிலான பத்திரிகை நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

'விஜய பிரெய்லி' எனும் இந்த பத்திரிகையின் வெளியீட்டு நிகழ்வு இரத்மலானையிலுள்ள விழிப்புலனற்றோருக்கான பாடசாலையில் நடைபெற்றது.

தமிழ்மிரர், டெய்லிமிரர், சண்டே டைம்ஸ், லங்கா தீப, விஜய், ஹாய், கோ உட்பட பத்திரிகைகளையும், இணையதளங்களையும் வெளியிடும் விஜய நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்டினால் மேற்படி பிரெய்லி பத்திரிகையும் வெளியிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(வ)

## மனைவியை வீதியில் விரட்டி விரட்டி அசிட் வீசிய கணவன்

கரவெனல்ல,நவ.19

ருவன்வெல்ல நகர மத்தியில் தனது மனைவியை விரட்டி விரட்டி அசிட் வீசிய நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கந்தத்தோட்ட பிரதேசவாசியான இந்தப் பெண் பிரிந்து வாழும் தன் கணவனான சந்தேகநபரிடமிருந்து ஜீவனாம்சம் கோரி ருவன்வெல்ல நீதிமன்றத் தில் வழக்கொன்றைத் தொடர்ந்திருந்தார். இதனால், மனைவி மீது கடுங்கோபத்துடன் இருந்துள்ளார். சம்பவ தினம் இந்தப் பெண் நீதிமன்றத்தில் ஆஜராகிவிட்டு நகருக்கு வந்தபோதே கணவனின் அசிட் வீச்சுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவத்தைக் கண்ட நகரவாசிகள் இருவரையும் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர். கணவன் கைதுசெய்யப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட பெண் கரவனெல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

(சி)

# பஸ் கட்டணம் 3.5 வீதத்தால் அதிகரிக்கப்படும்;- கெமுனு விஜேரத்ன

கொழும்பு, நவ. 19

டீசலின் விலை லீற்றருக்கு 8 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளதால் பஸ் கட்டணத்தை 3.5 வீதத்தால் அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன கடந்த புதன்கிழமை நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது தெரிவித்தார்.

இதன் பிரகாரம் 7 ரூபா முதல் 10 ரூபா வரையிலான கட்டணங்களில் மாற்றம் ஏற்படாது எனவும், 13 ரூபாவுக்கு மேற்படும் கட்டணங்கள் ஒரு ரூபாவில் இருந்து 20 ரூபாவரை அதிகரிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

டீசலுக்கான மானியம் வழங்கப்படமாட்டாது எனவும், அதற்குப் பதிலாக பஸ் கட்டணங்களை உயர்த்த ஒரு மாதகாலத்துக்குள் அனுமதி தருவார் எனவும் போக்குவரத்து அமைச்சர் எழுத்துமூல உறுதிமொழியை வழங்கியுள்ளார். ஒருமாத காலத்தில் சரியான தீர்வு கிடைக்காவிடில் மேலதிக அறிவித்தலின்றி வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும்.

டீசல் விலையை உயர்த்தியதால் ஏற்பட்ட நெருக்கடியை மக்கள் மீது சுமத்தாமல் இருப்பதற்காகவே நாங்கள் டீசலுக்கு மானிய விலையைத் தருமாறு அரசிடம் கோரிக்கை விடுத்தோம். எனினும், அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது.

2005 இல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக இருந்த போது நாடாளுமன்றத்தில் 2005 மே ஐந்தாம் திகதி நடந்த விசேட கலந்துரையாடலில் தனியார் பஸ்களுக்கு மானிய விலையில் டீசலை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளைப் பணித்தார்.

எனினும், அதிகாரிகள் இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. டீசலின் விலை உயர்த்தப்பட்டு 45 நாள்கள் ஆகிவிட்டன. பஸ்கட்டணத்தை உயர்த்த முடியாத காரணத்தால் பஸ் உரிமையாளர்களுக்கு பலத்த நட்டம் ஏற்பட்டுள்ளது.

குத்தகைக் கட்டணங்களை 4 சதவீதத்தால் குறைத்துத் தருமாறும் நாங்கள் கோரிக்கை விடுத்தோம். அதுவும் கவனிக்கப்படவில்லை. இலங்கையில் ஓடும் 85 தொடக்கம் 90 சதவீதம் வரையான பஸ்கள் குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் வாங்கப்பட்டுள்ளன.

தனியார் பஸ் கட்டணங்கள் உயர உயர பயணிகளின் எண்ணிக்கையும் குறையும் ஆபத்துள்ளது. எமது கோரிக்கைகளைப் புறக்கணிப்பதன் மூலம் அரசு தனியார் பஸ் சேவையைப் படிப்படியாக நாசம் செய்து வருகின்றது. இதனைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடை வாடகைக்கு

யாழ்.நகர சிறாம்பியடி வீதியில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு. ( சகல வசதிகளுடன் கூடிய மாடி)
தொடர்பு: 021 7200687 (இராஜேஸ்)

### நாய்க் குட்டிகள் விற்பனைக்கு

Pure Breed German Shepherd குட்டிகள், பொம்மேரியன் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம். (10583)(6-7-8)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து (புறொயிலர் 470/= மட்டும்) காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் பாம் சென்ரர், 19,முருகேசர் லேன், நல்லூர்.

### German, Swiss மொழிகள்

German, Swiss மொழிகள் நீங்களும் கற்க வேண்டுமா? அடுத்த வகுப்புகள் ஆரம்ப மாகிறது. Embassy யில் கேட்கப்படும் Certificate க்கு ஏற்றவாறு தமிழ் மொழி பெயர்ப்புடன் Audio Book விளக்கத்துடன் A1-A2 வகுப்புகள். 10, Palaly Road, Jaffna. 0771604823 (10602)(6-7-8)

## நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் நடத்தும்
# கலை பண்பாட்டு விழா -2011



இடம் : சிவசங்கரபண்டிதர் அரங்கு,
நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் முன்றில்,
நீர்வேலி

காலம் : **இன்று (19.11.2011)** சனிக்கிழமை பி.ப.01.30 மணி

**தலைவர் :** திரு.இ.குணநாதன்
(தலைவர், கலை பண்பாட்டு மன்றம், நீர்வேலி)

**பிரதம விருந்தினர்கள் :** திரு.இ.இளங்கோவன்
(செயலாளர், கல்வி,பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம்)
திருமதி கிருபாகரி இளங்கோவன்
(ஆசிரியர், கொக்குவில் மேற்கு சீ.சீ.த.க.பாடசாலை)

**சிறப்பு விருந்தினர்கள் :** திரு.ம.பிரதீபன் (பிரதேசசெயலர், வலிகாமம் கிழக்கு, கோப்பாய் )
திரு.சி.கௌரிசங்கர் (வடபிராந்திய முகாமையாளர், இலங்கை மத்தியவங்கி)
திரு.ச.குகதாஸ் ( கணக்காளர்,மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் )
திரு.ச.சதீஸ்வரன் (விவசாய உதவிப் பணிப்பாளர், கிளிநொச்சி )
செல்வி.அ.மிலாசினி (கலாசார உத்தியோகத்தர், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்)

### 'திருநீர்வை' மலர்வெளியீடும் 'அழகொளிரும் நீர்வேலி' இறுவட்டுவெளியீடும்

**முதற்பிரதி பெறுபவர்:** திரு.க.கிருபாகரன் (உரிமையாளர், கரன் ஜுவலர்ஸ், யாழ்ப்பாணம்)
**வெளியீட்டுரை :** பேராசிரியர் தி.வேல்நம்பி
(பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் யாழ்.பல்கலைக்கழகம்)
**ஏற்புரை:** திரு. ச.லலீசன் (பதிப்பாசிரியர், திருநீர்வை)

**சிறப்பு நிகழ்வுகள்**
★ வீதியோட்டம் (காலை) ★பண்பாட்டு ஊர்வலம் ★ கலை, நடன ஆற்றுகைகள்
★ நீர்வைக் குரிசில் விருது வழங்கல் ★ வசந்தன் கூத்து
★ சத்தியவான் சாவித்திரி இசை நாடகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம்
(சி/6050)(1.6.7)


## காட்டு யானைகள் அட்டகாசம் 4 வீடுகள் சேதம்

நிக்கவெரெட்டிய பிரதேசத்தில் நான்கு வீடுகளைச் சேதமாக்கிய காட்டு யானைகள் அங்கிருந்த நெல் மூடைகளையும் தின்றுவிட்டுச் சென்றுள்ளன என பிரதேச செயலாளர் அலுவலகத்தின் சமூக சேவைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வம்பட்டுவப் பிரதேசத்தில் மூன்று வீடுகளும், எலவக பிரதேசத்தில் ஒரு வீடும் யானைகளின் தாக்குதல்களால் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

கடந்த நாள்களில் ஊருக்குள் பிரவேசித்திருந்த காட்டு யானைகளை விரட்டிய போதிலும் அவை மீண்டும் கிராமங்களுக்குள்ளேயே அலைந்து திரிகின்றன.

இந்த யானைகள் பொது மக்களின் விவசாயத்துக்கும், வீடுகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. சில பிரதேசங்களில் பொதுமக்கள் பகல் வேளைகளிலும் பாதைகளில் செல்லப்பயப்படுகின்றனர் என அப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (வ-265)


## கண்ணீர் அஞ்சலி



*18.11.2011 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்த*
**ஞானப்பிரகாசம் சந்தியாப்பிள்ளை**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*நவாலி திருச்சபை வாலிபர்,*
*நவாலி Y.M.C.A வாலிபர்,*
*நவாலி நண்பர்கள்.*
(10587)(8,6-9)

## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
### சுன்னாகம்
### நிறுவுநர் தினமும் பரிசளிப்புவிழாவும்-2011

காலம் : 19.11.2011 சனிக்கிழமை காலை 8.30 மணி
இடம் : ஒறேற்றர் மண்டபம்
தலைவர் : கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் (அதிபர்)

**பிரதம விருந்தினர்**
*பேராசிரியர் P.புவனராஜன் அவர்கள்*
(தலைவர், லண்டன் பழைய மாணவர் சங்கம்)
**நிறுவுநர் நினைவுப் பேருரை**
**சிறப்பு விருந்தினர்**
N. *கருணைஆனந்தன்* அவர்கள்(J.P)
(கணக்காளர், கணக்கியல் ஆலோசகர்)
**ஆசியுரை**
K. *சிவாஜி* அவர்கள்
(முன்னாள் அதிபர், யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
**பரிசில் வழங்கல்**
*திருமதி ஞானரஞ்சினி புவனராஜன்* அவர்கள் (SLEAS)
(ஒறேற்றர் குடும்ப உறுப்பினர், ஓய்வு பெற்ற அதிபர் - கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரி)
**நன்றியுரை**
*த. தவராஜா அவர்கள்* (பிரதி அதிபர்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை 0212240230 (C/6049)(6-7-8)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

# வெளிவருகிறது !

## இணையங்களுக்கும் செக்



இப்போதைக்கு என்னதான் பதிவுகளை மேற்கொண்டு தடைகளைக் கொண்டு வந்தாலும் இணையங்களைத் தடை செய்வது என்பது மிகக் கடினம். அதுவும் அரசுக்கு எதிரான தகவல்களை வெளியிடும் வெளிநாட்டு இணையத்தளங்களைத் தடைசெய்வது சாத்தியமற்ற ஒரு விடயம். விக்கிலீக்ஸையோ அல்லது சனல்4 வையோ அமெரிக்காவினால் கூட தடை செய்ய முடியாது.



## திசை திருப்பப்படும் தேசிய மயம்

பொதுவாக தனிச் சொத்து எனப்படும் போது ஒரு மனிதனின் காணி, வீடு பாவனைப் பொருட்கள் என்பன கூட அவனின் உடமைகளாகக் கருதப்படுகின்றன. அவை உண்மையில் அவனுடைய உடமைகள் என்றாலும் கூட அரசியலில் தனிச்சொத்து என்பது விளைநிலம், தொழிற்சாலை, இயந்திரங்கள் போன்ற உற்பத்திசாதனங்களே கருதப்படுகின்றன. அவ்வகையில் மனித குலம் தோன்றிய காலம் தொட்டு இன்றுவரை தனிச்சொத்து என்ற வார்த்தையின் அர்த்தம் காலத்திற்கு காலம் மாறுபட்டு வந்திருக்கின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனுள்ள மரம் நடுகை



காட்சி-1

அது ஓர் அரச அலுவலகம். மரம் நடுகை நிகழ்வுக்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன.

அலுவலக உயரதிகாரி எங்கே மரம் நடுவது என்று நோட்டம் விட்டார்.

அவரின் முகக் குறிப்பறிந்த சிற்றூழியர் ஒருவர் ஐயா இந்த இடத்தில் தான் வழக்கமாக மரம் நடுகிறனாங்கள் என்றார். அவ் இடத்தில் அன்றும் மரம் நடப்பட்டது.

(குறிப்பு: நட்ட மரம் பராமரிக்கப்படா ததால் ஒரே இடத்தில் தான் வருடாந்தம் நடப்படுகிறது.)

காட்சி-2

அது ஒரு பாடசாலை, மர நடுகைக் காக ஆங்காங்கே குழிகள் தோண்டப் பட்டு அதிபர், ஆசிரியர்கள் புடைசூழ மாணவரைக் கொண்டு மரங்கள் நடப் படுகின்றன.அப்போது ஒரு மாணவன் அதிபரைப் பார்த்துக் கேட்கின்றான், ''சேர் போன வருஷமும் மரம் நட்ட னாங்கள் தானே நிறையப்பட்டுப் போயிற்று. பிறகேன் இந்த வருஷமும் மரங்களை நடவேண்டும் '' அதிபர் விடை கூற முடியாமல் யோசிக் கிறார்.

''அரசு மரங்களை நடத்தான் சென் னது பராமரிப்பதைப்பற்றி எதுவுமே சொல்லவில்லை'' என ஓர் ஆசிரியர் விடையளிக்க எல்லோரும் கொல் லென்று சிரித்தனர்.

காட்சி-3

அது ஒரு கிராமம். வறியமக்கள் பெரு மளவுக்கு வாழ்கின்றனர். ஓர் அரசசார் பற்ற நிறுவனம் வேலைத்திட்ட மெனக் கூறி மலைவேம்பு மரங்களை நட்டது. பனைமட்டைகளால் கூடுகள் கட்டப்பட் டன.

ஆறுமாதங்கள் தண்ணீர் ஊற்றப் பட்டது. திட்டக்கால எல்லை முடிந்த தாகக் கூறி நிறுவனம் போய் விட்டன. மரத்தின் பாதுகாப்புக்கான கூடு விறகாகி விட்டது. மரங்கள் மாடுகளின் ஒரு வினாடித் தீவனமாகி விட்டன.

ஆனால் திட்ட அறிக்கையின் படி மரநடுகை வெற்றி. விளைவு பூச்சியம்.

அரசாங்கம், அரசசார்பற்ற நிறு வனங் கள், பொது அமைப்புக்களின் மரம் நடுகையின் நிலை எவ்வாறு உள்ளன என்பதை தான் மேலுள்ள காட்சிகள் காட்டுகின்றன.

கடந்த வருடம் அரசு 11 நிமிடங் களில் 11 லட்சம் மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டம் நடைபெற்றது.

இதில் இவ் வருடம் தப்பிப் பிழைத்த மரங்கள் எத்தனை? மிகச் சிறிய வீதமா கத் தான் விடை வரும்.

குடியிருப்பு, தொழிற்சாலை, வணிக நிலைய, அலுவலகத் தேவைகளுக்காக அழிக்கப்பட்ட, அழிக்கப்பட்டு வரும் மரங்களின் எண்ணிக்கை கோடான கோடியைத் தாண்டும்.

யுத்தம் எமது பிரதேசங்களில் தின்று தீர்த்த மரங்களின் எண்ணிக்கையும் கணக்கிலடங்கா.

மீள் நடுகை என்பது தனியார் காணிகளில் நடுவது பெருமளவுக்கு வெற்றியாகத் தான் இருக்கிறது.

தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்கு படக்கென அடிக்கும் தானே.

பொது இடங்கள், அலுவலக வளா கங்களில் நடப்படும் பல லட்சம் மரங் களின் ஆயுள் அற்பமாகத் தான் உள் ளன.

விழா எடுப்பதற்காகவும், அரச கடமைக்காகவும் மட்டும் மரம் நடுவது தொடர்பாகச் சரியான மீளாய்வு செய் யப்படல் வேண்டும்.

சமூகத்தின் பயன்கருதிய மரம் நடுகை தான் அவசியமானது. காலநிலை மாற்றம் மிக வேகமாக நிகழுகின்றது. உலகெங்கும் உள்ள பிரச்சினை இது.

இயற்கை அனர்த்தமும் மனித வாழ்வியல் சம்பவங்களுடன் இணைந்த ஒன்றாகி விட்டது.

கால நிலை மாற்றத்தின் பிரதான காரணங்களில் ஒன்றாக மரங்களது அழிவையும் சுற்றுச் சூழல் அறிஞர்கள் கூறுகின்றனர். மரங்களை மீள உரு வாக்குதல் தொடர்பில் அவற்றின் அழிவு களுமின்றி மனித நடவடிக்கை கள் இடம் பெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.

இந்தியாவின் கர்நாடக மாநிலம் பசுமைப் பாதுகாப்புத் தொடர்பில் பயனுள்ள திட்டங்களைச் செய்வதாக சுற்றுச் சூழல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

அது போன்ற எமது பிரதேசத்துக்கும் சமூகத்துக்கும் உகந்த நடைமுறைகள் காலத்தின் தேவையாகவுள்ளன. ஏனெனில் இயற்கையை நாம் அழித்தால், இயற்கையால் நாம் அழிந்து விடுவோம். ✱

மருதன்

# புனிதமான உறவை பூப்போல் நேசியுங்கள்

மனதுக்குள் மறைந்திருக்கும் மனிதத்தைத் தட்டி எழும்பும் போது விரக்தியின் விளிம்பில் குற்றங் கள் குறைகள் நிகழ்வது சகஜம். அதனால் குடும்பம் உறவுகளில் பிரச்சி னைகள் ஏற்படுவதும் கோபதாபங்கள் மத்தியிலும் பாசவலைப் பின்னல் களால் மன்னிக்கப்படுவதும் குடும்ப வாழ்வியலில் இயற்கையான ஒன்று. ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் சுய கௌரவம், சுய சிந்தனை என்பது விட்டுக்கொடுப்புக்களுக்கு அப்பால் தலை தூக்கப்படும் போது ஏட்டிக்குப் போட்டியாக எதிர்வாதம் பேசுவதும், முரணான நடத்தைகளை வெளிக் கொணர்வதும் மானிட வர்க்கத்தில் புரையோடிக்கிடக்கும் விடயமாகும். இதற்கு நாளடைவில் தீர்வு கிடைக் கும். அவரவர்களே கோபதாபங்கள் மாறுகின்ற போது தத்தமது வாழ் வியலை சந்தோஷமாக சமைத்துக் கொள்வர். மறக்கவும், மன்னிக்கவும் தெரிந்த மனங்களைத்தான் மானிட வர்க்கத்துக்கு இறைவன் கொடுத்துள் ளான்.

குடும்பங்களில் பல்வேறு பிரச் சினைகளால் பிணக்குகள் ஏற்படு கின்றன. சந்தேகங்கள், புரிந்துணர் வின்மைகள் குறுகிய பார்வை, குறுகிய எண்ணங்கள், தூரநோக்கு சிந்தனை யற்ற தன்மை என இவற்றை அடுக்கிக் கொண்டு போகலாம். இவற்றுள் சந் தேகம் என்னும் தொனிப்பொருளில் பல குடும்பங்களில் பல பிரச்சினை கள் ஏற்படுகின்றன. இது தவறான விடயமல்ல. எனக்கு உரிய ஓர் உறவை அடுத்தவர் பங்குபோடக் கூடாது'' எனும் புனிதமான உறவின் உச்சக் கட்டத்தில்தான் இது ஏற்படும்.

ஒவ்வொரு தனிமனிதருக்கும் இருக் கும் தூர சிந்தனை, தொலை நோக்குப் பார்வை சமூக விழுமியங்களை கற்றுக் கொள்ளும் விகிதாசாரம் என்பவற்றைப் பொறுத்து இச் சந்தேகத் தன்மை விகிதாசாரம் மாறுபடும். இச் சந்தே கங்களை உரிமையுடன் கேட்பதும் தீர்ப்பதும் கட்டாயத் தேவையாகும்.

கட்டிய தாலிக்கும் அந்த உரிமை உண்டு. ஆனால்... அதை அடுத்த வருக்கும் விலை பேசி விற்கும் போது தான் குடும்ப உறவுகள் சின்னா பின்ன மாகின்றது. தாலி கட்டிய நாள் முதல் தம்பதிகளாக வாழ்ந்த வாழ்வியல் அடுத்தவருக்குப் புரியாது. அதன் ஏற்ற இறக்கம் என்ன? விட்டுக் கொடுப்புக் களின் விகிதாசாரங்கள் என்ன? புரிந்து ணர்வுடன் பூஜிக்கப்பட்ட நாள்களின் எண்ணிக்கை என்ன? இது எதுவுமே யாருக்கும் தெரியாது. உலகுக்கு விற்றுத்தான் உறவுப் பாலம் அமைக்க வேண்டுமானால் விபசாரியிடம் சென்று விரதத்தை முடித்து வாழலாம்.

குடும்ப உறவுகளுக்கு மத்தியஸ்தம் வகிப்பதற்கோ, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கோ யாருக்கும் தராதரம் இல்லை. அடுத்தவருக்கும் விற்கின்ற போது முரண்பாடுகள் மேலெழுந்து விடும். பழிவாங்கல்கள் அதிகரிக்கும். பின்பு மத்தியஸ்தமாக வருபவர் மறு வார்த்தை பேசுவதற்கு இடமில்லை.

ஒவ்வொருவரும் இதனைத் தெளி வாக சிந்திக்க வேண்டும். ஒவ்வொரு மனிதமும் எந்தெந்த நிலையில் இருக்கின்றது என்பதை தெரியாது வாழ்வதனால்தான் மானிட வர்க்கங் களின் மகிமைகள் இழக்கப்படுகின்றன. சந்தோஷங்கள் கஷ்டங்கள் துன்பங்கள் பட்டு பொருளாதாரத்தில் மீண்டெழுந்த குடும்பங்கள் வீண்விரயமாக்கப்படு கின்றன.

கட்டிய மனைவியால் அல்லது கண வனால் தன் கணவனை அல்லது மனை வியைக்கைக்குள் வைக்க முடிய வில்லை என்றால், பிரச்சினையை கதைத்துப் பேசி தீர்க்க முடியவில்லை என்றால் கடைத்தெருவில் நிற்பவனால் எப்படித் தீர்க்க முடியும். ஆண்கள் செய்வது சரியென்று இங்கு நியாயப்படுத்த வில்லை. பெண்கள் செய்வதைத் தவ றென்று சுட்டிக்காட்டவில்லை. நாலு சுவருக்குள் நடக்கின்ற பிரச்சினைகள் நாளடைவில் குடும்பங்களில் தீர்க்கப் படலாம். அதை நாடறிய விற்க முனை கின்றபோது நாலாபக்கமும் சிதறிப் போகின்றன. புரிந்துணர்வுகள் மன்னிப் புக்களுக்கு இடமின்றிப் போகின்றது. தயவு செய்து புனிதமான உறவுகளைப் பூப்போல் நேசியுங்கள்.

குடும்பப் பிரிவுகள் உச்ச நிலையை அடைகின்ற போது குடும்ப உறவுகள் நியாயத்தை தேடி பொலிஸ் நிலையங் களுக்குச் செல்கின்றன. சீராக சிந்தித் துப் பாருங்கள்.இது வேடிக்கையான விடயம். பொலிஸ் நிலையத்தில் தான் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்; நியா யங்கள் கிடைக்க வேண்டுமென்றால் அவ் வாறான குடும்ப வாழ்க்கை எதற்காக?

அதன் மூலம் ஒன்றிணைந்த வாழ்வு எதற்காக? புனிதமான புரிந்துணர்வுடன் கூடிய தெய்வீக தாம்பத்திய வாழ்க்கை எங்கே? பொலிஸ் நிலையம் எங்கே? சற்றுச் சிந்தித்துப் பொருங்கள். அந்நிய தேசத்தவனின் மத்தியஸ்தத்துக்காக வன்முறை வாசல் ஏற வைத்த உறவு களோடு வாழ்க்கை நடத்தலாம் என்ற சிந்தனை உண்மை மனிதாபிமான முள்ள மனங்களுக்கு உருவாகுமா? போட்டி உலகில் பாருளாதாரத்துக்காக துன்பப் பட்டு போராடிய நெஞ்சங்களுக்கு பொலிஸ் நிலையம் தான் பதில் சொல்லு மென்றால் பொலிஸ் நிலையத்தோடு அந்த வாழ்க்கை இரண்டாகட்டும் என்ற எண்ணம் தோன்றாதா?

தயவு செய்து பிரச்சினைகளுக்கு நீங்களே தீர்வு காணுங்கள். கணவன் பட்ட துன்பம் அவனோடு வாழ்ந்த மனை விக்குத் தான் தெரியும். மனைவி பட்ட துன்பம் அவளோடு வாழ்ந்த கணவ னுக்குத் தான் தெரியும். உங்கள் பிரச் சினைகளுக்கு நீங்களே தீர்வு காணுங்கள். உலகத்துக்கு தம்பட்டம் அடிக்க இது கட்டைப்பொம்மன் கதையல்ல. கண் ணீருக்குள் மூழ்கிய பல கஷ்டங் கள் துன்பங்களுக்கு முகிழ்ந்து எழுந்த மனித வாழ்வியல் முரண்பாடுகளுக்குத் தீர்வுகளை ஆரோக்கியமாகத் தேடுங்கள். முரண்பாடுகளை முற்ற வைத்து பிரச்சினை களை உருவாக்காதீர்கள். இதனால் பிஞ்சுகளின் வாழ்வியல் தான் நடுத் தெருவில் நடமாடும். தொலைந்தது திரும்பாது. பிரிந்தது இணையாது. ✱

ஆர்.கே.மேனன்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
19 நவம்பர் 2011 சனிக்கிழமை

# அதிஷ்டத்தை கணிப்பிடுங்கள் (2)

எழுத்துகளும் எண் மதிப்பும்

| ஆங்கில எழுத்துகள் | ஆதிக்கம் | எண் மதிப்பு |
|---|---|---|
| A,I,J,Q,Y | SUN (சூரியன்) | 1 |
| B,K,R | MOON (சந்திரன்) | 2 |
| C,G,L,S | JUBITER(குரு) | 3 |
| D,M,T | RAGU (ராகு) | 4 |
| E,H,N,X | MERCURY(புதன்) | 5 |
| U,V,W | VENUS(சுக்கிரன்) | 6 |
| O,Z | KETHU (கேது) | 7 |
| F,P | SATURN(சனி) | 8 |
| ..... | (MARS)(செவ்வாய்) | 9 |

9ம் எண்ணுக்கு என்று தனிப்பட்ட எண்மதிப்பு இல்லை. 9ம் எண்ணுக்குத் தனிப்பட்ட எழுத்துக்கள் இல்லை. எழுத்துக்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து எண்மதிப்பு 9 வருவதே செவ்வாய் ஆதிக்கம் செலுத்தும் எழுத்துக்கள் எனக்கொள்ளப்படும்.

உதாரணமாக தொழில் நிறுவனம் ஒன்றின் பெயர்.

AP,IP,JP,QP,YP,AF,MN, KO,GU,SU,VS,TN ஆகியவை

**பெயர் எண்ணைக் கணக்கிடும் முறை**

A P J A B D U L K A L A M
1 8 1 1 2 4 6 3 2 1 3 1 4

பெயரின் ஒவ்வொரு எழுத்தையும் தனித்தனியே எழுதி அதற்கு நேராக அவற்றின் தனிப்பட்ட எண்மதிப்பையும் எழுதி கூட்டும்போது கிடைக்கும் மொத்த எண்மதிப்பே பெயரின் பெயர் எண் ஆகும்.பெயருக்கு முன்னும் பின்னும் பயன்படுத்தும் DR,ER, மற்றும் கல்வி கற்றுப் பெற்ற படிப்புப் பட்டங்களையும் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

உதாரணம்

(MBBS,BE,BEMS,B.PHARM, BPT,BOT,BAMS,DCE..))

1+8+1+1+2+4+6+3+2+1+3+1+4=37. இதுவே மேற்கண்ட பெயரின் பெயரெண் ஆகும். பெயரில் முதலெழுத்தின் மதிப்பையும் சேர்த்துக் கூட்ட வேண்டும். தொழிலின் பெயரைக் கணக்கிடும் போது தொழிலின் முழுப் பெயரையும் எழுதிக் கணக்கிட வேண்டும்.

**தொழிலில் பெயர் எண்ணைக் கணக்கிடும் முறை**

RELIANCE CAPITAL.......
தொழில் நிறுவனமொன்றின் பெயர்
R E L I A N C E C A P I T A L
2 5 3 1 1 5 3 5 3 1 8 1 4 1 3 46

இதுவே மேற்கண்ட தொழில் நிறுவனத்தில் பெயரெண்ணாகும். தொழில் பெயரில் வரும் CO.,SONS.,LTD., LIMITED.,PVT., போன்ற எழுத்துக்களின் எண்மதிப்பையும் சேர்த்துக் கூட்ட வேண்டும்.

**பிறந்த திகதியைக் கணக்கிடும் முறை**



பிறந்த திகதியைக் கணக்கிடும்போது நள்ளிரவு 12 மணி முதல் தொடங்கி ஒரு நாளின் தொடக்கம் கணக்கிடப்படுகிறது. உதாரணமாக 10 ஆம் திகதி இரவு 12 மணி 2 நிமிடத்துக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கின்றது என்றால், 11 ஆம் திகதி என்றே கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். பிறந்த எண், மாத எண், வருட எண், விதி எண் கணக்கிடும் முறையை எளிதாக கீழ்கண்ட உதாரணத்தின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

உதாரணம்:

பிறந்த திகதி 23:10.1980

பிறப்பு எண்: 23=2+3=5 இதுவே பிறப்பு எண் ஆகும்.

மாத எண்:10=1+0=1 இதுவே மாத எண் ஆகும்.

வருட எண்:

1980=1+9+8+0= 18= 1+8+9 இதுவே வருட எண்ணாகும்.

விதி எண்: 2+3+1+0+1+9+8+0=24= 2+4=6 இதுவே விதி எண்ணாகும்.

பிறப்பு எண் என்பது பிறந்த திகதியில் வரும் திகதி எண்ணை மட்டும் தனியாகக்கூட்டி வரும் கூட்டுத் தொகை எண்ணாகும். மாத எண் என்பது மாத எண்ணில் வரும் எண்களை மட்டும் தனியாகக் கூட்டிவரும் எண்ணாகும். வருட எண் என்பது பிறந்த வருடத்தின் எண்களை மட்டும் தனியாகக் கூட்டி வரும் கூட்டுத்தொகை எண்ணாகும். விதி எண் என்பது திகதி, மாதம், வருடம் மூன்று எண்களையும் கூட்டி வரும் மொத்தக் கூட்டுத்தொகை எண்ணாகும். மேற்கண்ட பிறந்த திகதி உடைய நபருக்கு பிறப்பு எண் 5 ஆகவும், மாத எண் 1 ஆகவும், வருட எண்ண 9 ஆகவும், விதி எண் 6 ஆகவும் அமைந்துள்ளது. பிறந்த திகதி எண்ணைக் கொண்டு ஒரு மனிதனின் குணாதிசயத்தையும், மாத எண்ணைக் கொண்டு ஒரு மனிதனின் செயலாற்றலையும், வருட எண்ணைக்கொண்டு எதிர் வருங் காலத்தைப் பற்றியும், விதி அல்லது வாழ்க்கை எண்ணைக்கொண்டு முன்னேற்றத்தின் அளவையும் கணக்கிடலாம்.

**பெயர் மாற்றம்**

உலகில் பிறந்த அனைவருமே தங்கள் முழுப்பெயரையும் மாற்றம் செய்யத் தேவையில்லை. ஒரு சிலருக்குத்தான் பெயரை முழுமையாக மாற்றியமைக்க வேண்டியிருக்கும். பெயரில் சில திருத்தம் செய்தால் மட்டும் போதும். பரிபூரண அதிர்ஷ்டம் கிட்டும். ஒரு சில நபர்களுக்கு முழுப்பெயரையும் மாற்றினால் தான் அதிர்ஷ்டம் தரும். இவர்களுக்குப் பெயர் முழுவதுமே தீய சக்தி படைத்த எதிர்மறை எழுத்துக்களின் சேர்க்கையோடு அமைந்திருக்கும். நம் முன்னோர்கள் குழந்தைக்கு அடிக்கடி நோய்த் தொந்தரவுகள் வந்தால் உடனே பெயரை மாற்றி வைப்பார்கள். நாம் ஒரே சொல்லைத் திரும்பத் திரும்ப உச்சரிக்கும் போது அது முழு வலிமை பெற்று ஒரு அபூர்வ காந்த அலைகளை உண்டுபண்ணுகிறது. அவரவரது அதிர்ஷ்டப் பெயரை தினமும் எழுதியும், வாயால் உச்சரித்தும் வந்தால் அப்பெயர் நல்ல ஆற்றல் மிக்கதாக உருவெடுத்து அதிர்ஷ்டத்தை உருவாக்கித் தருகின்றது.

**எண் 1**
**(சூரியன்)**
**(ஆளும் வேந்தர்கள்)**

1ஆம் எண் என்பது சூரியனைக் குறிக்கின்றது. சூரியக் குடும்பத்தின் பால்வீதி மண்டலத்தில் இயங்கும் அனைத்துக் கோள்களும் சூரியனை மையமாகக்கொண்டே சுழற்சியை மேற்கொண்டுள்ளன. 1ஆம் எண் ஆக்கத்தில் பிறந்த 1,10,19,38 திகதிகளில் பிறந்தவர்கள் எந்த ஒரு மாதமாக இருந்தாலும் சூரிய ஆதிக்கத்தை கொண்டு இயங்குவார்கள்.

உலக ஜீவராசிகள் உயிர் வாழ சூரியனின் பங்களிப்பு எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததோ, அத்தகைய பங்களிப்பு இந்த சூரிய ஆதிக்கத்தால் சமதாயத்துக்குக் கிடைக்கும். எல்லா நாடுகளுக்கும், எல்லாக் காலத்திற்கும் மனித சமுதாயத்துக்கு இவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகவே இருக்கும். தங்களுடைய ஆளுமை குணத்தால் உலகிலுள்ள அனைத்து முக்கிய பொறுப்பு, தொழில் துறைகளில் தலைமை ஏற்று வழி நடத்துபவர்கள் இவர்கள் தான். உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் ஆட்சிபீட அரியாசனத்தில் அரசாட்சி செய்பவர்கள் இவர்கள்தான்.

மிகப் பிரகாசமான ஒளிரும் சூரியனைப் போலவே ஒளிர்விடும் மூளைப் பலம்மிக்கவர்கள். 1ஆம் எண்ணுக்கு உட்பட்டவர்கள் மிகவும் நேர்மையானவர்கள். எந்தச்சூழ்நிலையிலும் மற்றவர்களுக்குத் துரோகம் செய்யமாட்டார்கள்.

சுதந்திரமான உணர்ச்சிகளுக்குச் சொந்தக்காரர்கள் இவர்களே யாருக்கும் கட்டுப்பட்டு நடக்கமாட்டார்கள். தமது மனதிற்குள் எண்ணியதைச் சட்டென்று செய்துவிடுவார்கள். மற்றவர்களை எடை போட்ட பின்னர்தான் அவர்களுடன் பழகுவார்கள்.நேர்மையான வழியிலேயே பணம் சம்பாதிப்பார்கள். அரசியலில் நீங்காத இடம்பிடித்து எப்பேர்ப்பட்ட பொறுப்பிலும் சிறப்பாகப் பணியாற்றும் திறமையுடன் மின்னுவார்கள்.

தலைமை வகிக்கும் குணம் அதிகம் காணப்படும். மனதில் உள்ளது உள்ளபடி ஒழிவு மறைவின்றி உரைக்கும் குணமிருக்கும். இதனால் பலபேரின் எதிர்ப்புக்கு ஆளாவார்கள். வரலாறு படைப்பார்கள். இவர்கள் வெளிப்படுத்தும் அன்பு, கருணை, அதிகாரம், அடக்குமுறைகள் அனைத்தும் மிகவும் கடுமையான தாகவே இருக்கும்.

இவர்கள் யாருடைய நட்பையும் தேடி அலைய மாட்டார்கள். இவர்களின் திறமை, உதவும் குணம், அதிகாரமிக்க பதவிக்காகப் பலபேர் இவருடைய நட்புக்காகக் காத்து நிற்பார்கள். இவர்கள் தங்களுடைய பிறவிக்குணத்தால் யாருக்கும் தலைவணங்கியோ கட்டுப்பட்டோ நடக்க மாட்டார்கள். இவர்கள் யாருக்கும் அடிமையாக இருப்பதை விரும்ப மாட்டார்கள்.

(இன்னும் வரும்)

# எந்த வகையான வாழைப்பழம் இறைவனுக்கு நிவேதிக்கத்தக்கது?

தோடை, மாதுளை, அன்னாசி எனப் பழவகை பலவகை எம் மத்தியில் காணப்படுகின்ற போதிலும் மா, பலா, வாழை ஆகியவற்றையே ''முக்கனிகளாகத்'' தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

பலாவில் வகைகள் இல்லை எனினும் மாவிலும், வாழையிலும் பல வகைகள் காணப்படுகின்றன. மொந்தன், கதலி, கப்பல், இதரை, மருத்துவம், ஆனை, பன்றி எனப் பல வகைகள் வாழையில் காணப்படுகின்றன.

இவ்வாறு வாழையில் பல வகை இருக்கின்ற போதிலும் கதலிப் பழம். தான் இறைவனுக்கு நிவேதிக்கத்தக்கது என்றொரு ''கருத்து'' பரவலாக எம்மவரிடையே காணப்படுகின்றது.

எமது சமூகத்தில் நடைபெறும் மங்கல அமங்கல விழாக்கள் உட்படப் பெரும்பாலான விழாக்களில் வாழைப் பழம், வெற்றிலை, பாக்கு என்பன முதலிடத்தைப் பெறுகின்றன என்பதும் கவனத்துக்குரியது.

பொதுவாகக் கவனிக்கும் போது எந்த விழாக்கள் சடங்குகளிலும் கதலிப் பழத்தைத்தான் பயன்படுத்துகின்றதைக் காணலாம். இதரை போன்ற பழங்கள் குறைந்த விலையில் வேண்டியளவு பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையிலும், கத லிப்பழம் தட்டுப்பாடான அதிக விலை விற்கின்ற நிலையிலும் விழாக்கள் சடங்குகளிலே கதலிப்பழத்துக்குத் தான் முதலிடம் கிடைக்கின்றது.

பழக்கடைகளிலே வாழைப்பழம்



வாங்குவதற்கு முனையும் போது வாழைப்பழக் கடைக்காரர் ''கோயில் தேவைக்கா? கோயில் தேவைக்கெனின் கதலிப்பழம் தான் வாங்குங்கள்'' என்று ஆலோசனை கூறுவதுடன் நில்லாது கதலிப் பழச் சீப்பையும் வெட்டி எடுத்துத் தருகின்றனர்.

''ஏன் இதரைப் பழம் வைத்தால் ஆகாதோ?'' என்று கேட்டால் அவர் ''கோயிலில் ஐயா'' கதலிப்பழம் ''மஹா நிவேதனம் நிவேதயாமி'' என்று மந்திரம் சொல்லித்தானே நிவேதிக்கின்றார் என்று ஆதாரம் காட்டுகின்றார். ''அந்த மந்திரம் எழுதியவருக்குக் கதலிப் பழத்தை தான் தெரிந்திருக்கும். இல்லையேல் அந்த மந்திரம் எழுதிய நேரத்தில் இடத்தில் கதலிப்பழம் தான் இருந்திருக்கும். சில வேளை மற்றப் பழங்களுக்கு வட மொழியில் சொற்கள் இல்லாதிருந்திருக்கும் அல்லது தெரியாதி ருந்திருக்கும்.

அதனால் அந்த மந்திரம் எழுதியவர் பொதுவாகக் ''கதலிப் பழம்'' என்று எழுதிவிட்டிருப்பார். என்று நாங்கள் கூறினால், அதற்கு அவர் "கதலிப்பழம் தட்டுப் பாடான அதிக விலையில் விற்கின்ற காலத்திலும்- மற்ற இன வாழைப் பழங்கள் மலிந்த விலையில் வேண்டிய அளவு கிடைக்கின்ற நிலையிலும் கதலிப் பழத்தைத்தானே தேடித்தேடி வாங்குகின்றார்களே, பார்க்கவில்லையா?'' என்று கேட்டு எங்களை மடக்குகிறார்.

அவர் ''நீங்கள் எந்த வாழைப் பழத்தை நிவேதித்தாலும் ஐயர் அவற்றையும் 'கதலிப்பழம்' என்று கூறித்தான் சுவாமிக்கு நிவேதனம் செய்கின்றார்.'' என்று விளக்கம் தருகின்றார்.சைவசமய விதிமுறைகள், சாஸ்திரங்களில் ஆழ்ந்த ஞானம் உள்ள சைவப் பெரியோர்கள் இந்தச் ''சர்ச்சைக்கு'' விளக்கம் தந்து தீர்த்து வையுங்கள்.

எஸ்.முருகையா,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கை கேட்ட வரம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

காக்கை தன் இனத்தாரிடம் தான் வரம் பெற்று வந்ததைக் கூறச் சென்றது. ஆனால் காக்கைக் கூட்டங்கள் காகத்தை கண்டதும், யார்? இந்தப் புதிய பறவை நம் இனமில்லையே என்று நினைத்து காகத்திடம் ''நீ யார்? எதற்கு எங்கள் கூட்டத்துக்கு வருகிறாய்?'' எனக் கேட்டன. காகம் ''நானும் தங்கள் இனம்தான் கடவுளிடம் வரம் பெற்று வந்தேன். அதனால் இந்த உருவத்தில் இருக்கிறேன்'' என்று கூறியது. ஆனால் காக்கைக் கூட்டமோ ''குரல் மட்டும் காகம் போலுள்ளதால் உன்னைக் காகம் என்று ஒத்துக் கொள்ளமுடியாது. நீ யாரோ புதியவன் உன்னை எங்களுடன் சேர்க்க முடியாது; ஓடிவிடு'' என்று விரட்டின. மனம் வருந்திய காகம் கிளிக் கூட்டத்திடம் சென்றது.

தன்னை அவர்களுடன் சேர்த்துக் கொள்ளுமாறு கூறியது. கிளிகளோ நீயோ காக்கை இனம். உருவத்தில் மட்டுமே எங்களைப் போல் உள்ளாய்! உன்னை எங்களுடன் சேர்த்தால் வம்தான் மரியாதையாக இடத்தைக் காலி செய் என்று விரட்டின. இரண்டு பிரிவினரும் சேர்த்துக் கொள்ளாததால் காகம் வருந்தியது. அப்போது வேடன் ஒருவன் வித்தியாசமான பறவையாக இருக்கிறதே என காகத்தை பிடித்துக் கூண்டில் அடைத்தான். காகம் தன் செயலுக்கு வருந்தி அழுதது. மீண்டும் கடவுளிடம் முறையிட்டது.

''கடவுளே தவறு செய்து விட்டேன். என்னைக் காப்பாற்றுங்கள் என்று கதறியது. கருணை வடிவான கடவுள் காகம் முன் தோன்றினார். காகமே!



இறைவனின் படைப்பில் எல்லோரும் சமமே! ஒவ்வொருவருக்கும் ஓர் சிறப்பைப் படைத்தோம். தம் சிறப்பு என்ன என்பதை உணர்ந்து அதை மேம்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர பிறரிடம் அது உள்ளதே இது உள்ளதே என்று ஆசைப்பட்டு அவதிப்படக் கூடாது. உன் தவறான முடிவால் வேடனிடம் சிக்குண்டாயே!'' என்று அறிவுரை வழங்கினார். *(முற்றும்)*

# விடுகதைகளும் விடைகளும்

1.வித்தில்லாமல் விளைந்திடும் வெட்டாமலே சாயும் அது என்ன?

2.வெள்ளைச் சீமாட்டிக்குத் தலைமேலே விளங்கு எரியுது அது என்ன?

3. ஓசையிட்டபடி ஊரைத் சுமக்கும் அது என்ன?

4.இந்தப் பெட்டியை உடைத்துத்தான் திறக்க வேண்டும். மறுபடி மூட முடியாது அது என்ன?

5.ஈட்டிகள் பாதுகாப்பில் இளவரசியின் தலையில் அமர தப்பி வருவாள் அவள் யார்?

6.ஊரெங்கும் நிறைந்திருப்பான் உலகெங்கும் நிறைந்திருப்பான் அவன் யார்?

7.கால்படாத இடத்தில் கரு இல்லாத முட்டை அது என்ன?

8.காட்டில் ஒரு கரிப்பானை கவிழ்ந்து கிடக்கிறது அது என்ன?

9.கால் வாயில் தண்ணீர் போனால் கன்னிக் கோழி முட்டை இடும் இது என்ன?

10.இரவும் பகலும் விழிந்திருப்பான் எப்போதும் ஒளிந்தே இருப்பான் அவன் யார்?

**விடைகள்**

01.வாழை, 02.மெழுகுவர்த்தி, 03.ரயில், 04.தேங்காய், 05.ரோஜா, 06.காற்று, 07.காளான், 08.பனங்காய், 09.கத்தரிக்காய், 10.இதயம்.

கௌசிகா,
தரம் 9A,யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்

# உயிரினங்கள் பற்றிய சில தகவல்கள்

*1.நாக்கு இல்லாத பிராணி?*
முதலை

*2.சத்தம் போடாத விலங்கு?*
ஒட்டகச் சிவிங்கி

*3.ஒரு நத்தையின் வேகம்?*
ஒரு நாளைக்கு 16 மீற்றர்

*4.நீந்தத் தெரியாத மிருகம்?*
ஒட்டகம்

*5.சிறிய இதயம் கொண்ட மிருகம்?*
சிங்கம்

*6.கூடு கட்டிக் கொள்ளாத பறவை ?*
புறா

*7.யானை ஒரு நாளில் தூங்கும் நேரம்?*
இரண்டு மணித்தியாலம்

*8.மிக உயரமான பறவை?*
தீக்கோழி

*9.சுறா மீன்கள்?*
132 வகை

*10.அதிக சூட்டை தாங்காத மிருகம்?*
எருமை

சா.பபிதா,
தரம் 8A
யா/கோண்டாவில் இராம கிருஸ்ண மகா வித்தியாலயம்

# வண்ணத்துப் பூச்சியின் எழில் வண்ணங்கள்

இயற்கையின் எழில் படைப்புகளில் வண்ணத்துப்பூச்சி நல்லதொரு இடத்தைப் பிடிக்கிறது. இவற்றுக்கு பல்வேறு வர்ணஜால வண்ணங்கள் உண்டு.

வண்ணத்துப் பூச்சிகளின் பெயர்கள் சில வினோதமாகக் காணப்படுகின்றன. பாரிஸ்மயில், சொக்கலட் பன்சி, சிவப்பு ஹெலன், செஸ்நட், ஸ்றீக் செயிலர் எனப் பல்வகையானவை.

வண்ணத்துப்பூச்சி லெபிடொப் தெரா ஒழுங்கின் கீழ் 10 குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை மனிதனுக்கு ஆபத்தானதல்ல. ஆனால் இவற்றின் ஆரம்ப நிலை (கெட்டர்பில்லர்) பயிர் செடிகளை அழிக்க கூடியன.

வண்ணத்துப் பூச்சிக்கு ஒரு சோடி இறகுண்டு. இவை பல பருமனிலுள்ளன. சில இறகுகள் 12 அங்குலம் (30 செ.மீ) நீளமுடையன. வண்ணத்துப் பூச்சியில் ஆயிரக்கணக்கான இனங்கள் உண்டு. சுமார் 165000 வகைகள் இருக்கலாமென ஆய்வுகள் கூறுகின்றன. இவைகள் பகலில் உணவு தேடிச் செல்வன. இதன் உடல் சிறியதும் மென்மையானதும். இதற்குள்ள உணர்கொம்பு மூலம் மணத்தின் உணர்வை அறிவதுடன் பிற சத்தங்களையும் கேட்கின்றன.



பெண் வண்ணத்துப் பூச்சி இலைகளின் மேல் ஒன்றோ அல்லது கூட்டமாகவோ முட்டைகள் இடுகின்றன. முட்டை நேரம் வரும்போது உடைந்து புழுக்கூடாக வெளிவரும். இதற்கு தலை, தொண்டை, வயிறு ஆகிய பாகங்கள் உள்ளன. இந்த நிலையில் இறகுகள் கிடையாது. சில வாரங்களில் இவை ''பூப்பா'' நிலை அடைந்து மிகவும் பலமான கறிஸ்சலிஸ் தோல்களால் காப்பாற்றப்படுகின்றன. பின்பு இது உடைந்து அழகுமிக்க வண்ணத்துப் பூச்சியாக வெளிவரும். வண்ணத்துப் பூச்சியின் ஆயுள்காலம் நான்கு வாரம் முதல் ஒரு வருடம் சில இனங்கள் மேலாகவும் வாழும் தன்மை யுண்டு.

**சா.ஜிந்துஜா,**
கோண்டாவில்.



# நெருப்புக் கோழி முட்டை

நெருப்புக்கோழி முட்டைக்கு இங்கிலாந்தில் வரவேற்பு அதிகரித்துள்ளது. பறவைகளிலேயே நெருப்புக் கோழியின் முட்டைதான் மிகவும் பெரியது. ஒரு கோழி முட்டையைக் காட்டிலும் 24 மடங்கு பெரியது நெருப்புக்கோழி முட்டை. அரை அடி உயரம், ஒன்றரை அடி சுற்றளவு கொண்ட இந்த முட்டை சுமார் 2 கிலோ எடை கொண்டது.

இதன் விலை 19.95 பவுண்சுகள் அதாவது இலங்கை மதிப்பில் சுமார் 3,750 ரூபாய். இந்த முட்டையின் ஆம்லெட் இங்கிலாந்தில் மிகவும் பிரபலம். ஒரு நெருப்புக்கோழி முட்டையில் 15 பேருக்கு ஆம்லெட் தயாரிக்கலாம். கோழி, வாத்து முட்டையைக் காட்டிலும் இதற்கு ருசி அதிகம் என்பதால், குழந்தைகள் இதனை ஒரு பிடி பிடித்துவிடுகிறார்கள். ஆனால் ஒரு முட்டையை அவிப்பதற்கு ஒன்றரை மணி நேரம் ஆகும்.

இதனை டிரில்லிங் மிஷினால் துளைத்தால் கூட சிறிது நேரம் போராடிய பிறகுதான் உடைக்க முடியும். பீங்கான் கோப்பை போன்று இதன் ஓடு உறுதியாக இருக்கும். இந்த முட்டையை அவித்து விற்பதற்கு நிறுவனங்கள் இடையே போட்டா போட்டி ஏற்படுகிறது.



*யாழ்.பிரிட்டிஷ் வணிக முன்பள்ளி மாணவர்களின் ஆங்கில தின நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது கோப்பாய் பிரிவு வளாக மாணவர்கள் பாடல் இசைக்கின்றனர்.*
*(121)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிய விஷத்தை உறிஞ்சுகின்ற அபூர்வக் கல்

பொதுவாக ஒரு நபருக்கு அரவம் தீண்டிவிட்டது என்றால் அது ஆபத்தை விளைவிக்கும் ஒன்றாகவே கருதப்படுகின்றது. விஷப்பாம்பு கடித்து விட்டது என்று தெரிந்து கொண்டதும் கடிபட்டவருக்கு தன்னிச்சையாகவே வலி உண்டாகிவிடுகின்றது.

இதன் காரணமாக விஷம் குருதியில் வேகமாகவே ஏறிவிடுகின்றது.

ஒருவருக்கு நல்லபாம்பு கடித்து விட்டது என்று தெரிந்து கொண்டதும் விஷம் இரத்தத்தில் ஏறுவதற்கு முன் பாகவே தாமதிக்காது முதலுதவி அளித்துவிட்டு உடனடியாக அவரை அருகில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாகப் பாம்பால் கடியுண்டவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்க முடியாத சந்தர்ப்பத்தில் கடிபட்டவரை விஷகடி வைத்தியரிடம் காண்பிக்க வேண்டும். இலங்கையில் பின் தங்கிய கிராமங்களில் சில விஷகடி வைத்தியர்கள் தமது பணியை வெற்றிகரமாக மேற் கொண்டு வருகின்றனர் என்பது கண் கூடு. விஷகடி வைத்தியர்கள் இரத்தத்தில் கலந்துள்ள நஞ்சை இறக்குவதற்கு பல் வேறு வழிமுறைகளைக் கையாளுகின் றனர்.

பொதுவாக '' கண்கட்டு வித்தை'' பற்றி நாம் அறிவோம். அதே பாணியில் இலங்கை, இந்தியா, மொறிஷியஸ், பர்மா, மலேஷியா போன்ற நாடுகளில் '' கல்கட்டு வித்தைய '' ஒரு சில வைத்தியர்கள் மேற்கொண்டு கடிபட்டவரை நன்கு குணமாக்கிய பின்னர் வீடு செல்ல அனுமதிக்கின்றனர்.

பாம்புக்கடியினால் ஏற்பட்ட விஷத்தை சுமார் பதினைந்து விநாடிகளில் உறிஞ்சிவிடும் அந்தக் கல்லை ஆங்கிலத்தில் ''ஸ்னேக் ஸ்ரோன்'' என்று அழைக்கின்றனர். கறுப்பு நிறமான அந்தக் கல்லின் நீளம் சுமார் இரண்டு சென்ரி மீற்றராகும். கொடிய பாம்புகளின் விஷத்தை இறக்கும் இந்தக்



கல் மிகவும் வல்லமை பொருந்தியதொன்றாகும்.

விஷப்பாம்பினால் தீண்டப்பட்டவர்களுக்கு கல்கட்டி உயிர்பிழைக்க வைக்கும் பெருமைக்குரியவர்கள் அனேகமாகக் கிராமங்களில்தான் வாழ்கின்றனர் என்றும் கூறலாம்.

இனி கல்கட்டி வித்தை பற்றி சற்று ஆராய்வோம். உடலின் எந்த இடத்தில் பாம்பு கடித்திருக்கின்றதோ அந்த இடத்தைத் தவிர்த்து அதற்கு மேலாக இலேசாகக் கீறிவிட்டு அதில் இந்தக் கல்லை அழுத்திப் பிடிப்பதனால் கல் தசையோடு ஒட்டிக்கொள்ளும் அதேவேளை இரத்தத்தில் கலந்துள்ள பாம்பின் விஷத்தையும் வேகமாக உறிஞ்சிக் கொள்ளும் தன்மை கொண்டது. கல் கட்டிய பின் விறுவிறுவென்று ஏறிய விஷம் அதே வேகத்தில் இறங்கத் தொடங்கிவிடும். மயக்க நிலையில் உள்ளவர்கள் இந்தக் கல்லின் வலிமையினால் மயக்கம் தெளிந்து நன்றாகப் பேசவும் எழுந்து நடக்கக்கூடிய நிலைக்கும் வந்துவிடுவார்கள். இந்தக் கல் சிகிச்சைமுறை தோற்றுப் போனதே இல்லையென்று கிராமத் தலைவர்கள் கூறுகின்றனர்.

இந்த கல்லானது இயற்கையாக இந்த பூமியில் பரிணமித்துள்ள வஸ்துவல்ல. கொடிய விஷ மிறக்கும் அபூர்வ மூலிகைகளும் கரணங்களும் விசேடமான கறுப்பு மண்ணும் கலந்து தயாரிக்கப்படுகின்ற செயற்கைக் கல் என்பதனையும் அறிய முடிகின்றது. ஒரு கல்லின் மூலம் பத்து முதல் பதினைந்து பாம்புக் கடிக்கு உள்ளானவர்களுக்குச் சிகிச்சையளிக்கலாம். அதேவேளை இந்த கல்லில் ஏறிய விஷத்தை இறக்க வேண்டிய கடப்பாடும் வைத்தியர்களுக்கு ஏற்படுகின்றது.

அதற்காக இந்தக் கல்லை சுத்தமான பசும் பாலில் இருபத்து நான்கு மணித்தியாலங்கள் போட்டு வைத்தால் கல்லில் உள்ள கொடிய விஷம் படிப்படியாக பாலில் இறங்கிவிடும் அப்பொழுது அந்தப்பால் ஊதா நிறத்துக்கு மாறிவிடும் தன்மையுடையது. இக் கல் கட்டு வைத்தியம் செய்வது சில வேளைகளினால் ஆபத் தில் முடியய் வாய்ப்புகள் உள்ளன. இதுதவிர இதனைப் பூரண சிகிச்சை முறை என்றும் கூறவும் முடியாது. வேண்டுமானால் பாம்பினால் தீண்டப்பட்டவர் களுக்கான முதலுதவி எனவும் கொள்ளலாம்.

விஷப்பாம்புக் கடிக்கு அரச மருத்துவ மனைக்குச் செல்வதுதான் புத்திசாலித் தனம் என்பது வைத்திய நிபுணர்களின் கூற்றாகும்.

இந்தக் கூற்றை மக்கள் ஏற்றுக்கொண்டாலும் மருத்துவமனை இல்லாத பின்தங்கிய கிராம மக்களுக்கு விஷகடி வைத்தியரே அவ்வப்போது உயிர்ப் பிச்சை அளிக்கின்றனர் என்பது நிதர்சனம் ஆகும்.

■ தர்மா,

# பூக்களில் மிளிரும் மருத்துவம்



இயற்கையை இறைவன் மிகவும் ரம்மியமாகவே படைத்துள்ளான் என்பதை கவிஞர்களின் வர்ணனைகள் மூலம் அறிகின்றோம். அவற்றுள் மரம், செடி, கொடிகளில் பூக்கும் மலர்கள் அதி உன்னத இடத்தைப் பிடித்துள்ளமை கண்கூடு.

மரம், செடி, கொடிகளில் பூக்கும் மலர்களின் நிறம், அதன் மருத்துவக் குணம், சுகந்தம், கவர்ச்சியான தோற்றம் என்பன எம்மை பிரமிக்க வைக்கின்றன என்பது மறுப்பதற்கில்லை.

வீட்டுத் தோட்டங்கள், பூஞ்சோலைகள், பூங்காவனங்கள் என்பவற்றில் கோடான கோடி பூக்கள் மலர்கின்றன, இதனாலன்றோ '' எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா'' என்று இயற்கையைப் போற்றினர் நமது முன்னோர்கள். என்பது வெள்ளிடை மலை ''எத்தனை கோடி பூமலரும்'' என்றார் கவிஞர் கண்ணதாசன். பெண்களை மலர்களுக்கு ஒப்பிடுவது வழக்கமாகும்.

மலர்கள் புனிதமானவை, இறைவனுக்கு அர்ப்பணிக்கக் கூடியவை. மணமக்கள் கழுத்தில் மாலையாகப் பொலிவதும் மலர்கள்தான் என்று கூறலாம். தேனீக்களுக்கு இனிக்கும் தேனை வழங்கிவருவதும் மலர்களே. பல்வேறு வகையான பூக்களின் மருத்துவக் குணங்களை நாம் சித்த மருத்துவ நூல்களில் இருந்து அறிய முடிகின்றது. ஒவ்வொரு மலருக்கும் ஒவ்வொரு வகையான மருத்துவக் குணம் உண்டு. ஏலவே பூக்களின் மருத்துவக் குணம் பற்றி விரிவாக ஆராய்வது இங்கு உசிதமாகும்.

முதலில் நாம் தெரிவு செய்வது மருதாணிப் பூவாகும். மருதாணி என்ற சிறிய செடியில் கிடைப்பது மருதாணிப் பூ. மருதாணி இலையை மங்கையர் தங்கள் அழகை மேம்படுத்துவதற்காக கால்களிலும் கைகளிலும் அரைத்துப் பூசுவார்கள். மரு தாணிப் பூவுக்கும் மருதோன்றி இலைக்கு உள்ளதைப் போன்று உடல் உஷ்ணத்தைத் தணிக்கும் தன்மை உண்டு. மருதாணிப் பூவை படுக்கைக்குச் செல்லும்முன் தலையில் வைத்துக் கொண்டால் அல்லது தலைக்கு அடியில் தலையணை மீது வைத்துக் கொண்டால் நன்றாகத் தூக்கம் வரும். குடும்பக் கவலை தீர்க்க முடியாத பிரச்சினைகள் உள்ளவர்கள், அலைச்சல் உள்ளவர்கள் இந்தப் பூவைத் தலையில் சூடிக் கொண்டால் அனைத்தும் அகன்றுவிடும். ''ஹிஸ்றீரியா, நோயுள்ள பெண்கள் இந்தப் பூவைப் பயன்படுத்தினால் நல்ல பலன் உண்டு. மருதாணிப்பூவுடன் எலுமிச்சை பழச்சாறு சேர்த்துத் தலையில் வைத்து ஸ்நானம் செய்தால் உடல் உஷ்ணம் குறைவதுடன் தலையில் உள்ள பொடுகும் போய்விடும்.

அடுத்து கமகமவென்று நறுமணத்தை அள்ளி வீசிக்கொண்டிருக்கும் மல்லிகைப் பூவை பார்ப்போம். மல்லிகைப் பூவை விரும்பாத பெண்களே இல்லையெனலாம். மல்லிகையிலும் பல ரகங்கள் உள்ளன. அவற்றை அடுக்கு மல்லி, ஒற்றை மல்லி, ஊசி மல்லி, குண்டுமல்லி, நித்தியமல்லி, காட்டுமல்லி என வகுக்கலாம். மல்லிகைப்பூ தலைவலியைப் போக்கும், களைப்பைப் போக்கும். அதேவேளை மோக இச்சையும் அதி கரிக்கும் வல்லமை கொண்டது. இதனாலன்றோ திருமணம் முடிந்து முதல் இரவன்று கட்டிலில் மல்லிகைப் பூக்களைக் கொண்டு அலங்காரம் மேற்கொள்கின்றனர். மேலும் குழந்தைப் பாக்கியம் இல்லாத தம்பதியினர் தொடர்ந்து மல்லிகைத் தோட்டத்தில் உலாவினால் நல்ல பலன் ஏற்பட வாய்ப்புண்டு. மல்லிகைப் பூவின் மணத்தை ''காதல் மணம்'' என்று கூடக் கூறுவர்.

மன்மதன்- ரதி ஆகியோர் மல்லிகைத் தோட்டத்தில்தான் வசித்தார்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. மல்லிகைப் பூவிலிருந்து தைலம் எடுக்கப்பட்டு வாசனைத் திரவியங்களில் கலந்து பயன்படுத்துவது வழக்கமாக உள்ளது.

அடுத்து மலர்களின் ராஜா என்று அழைக்கப்படுகின்ற ரோஜா மலரின் தாற்பரியங்களைப் பார்ப்போம்.

இதமான பலவித வர்ணங்களில் காட்சி தருகின்ற ரோஜாப் பூவைப் பறிப்பதற்கு மிகுந்த அவதானம் தேவை. இதற்கு ரோஜாச் செடிகளில் பரிணமித்துள்ள முட்களே காரணமாகும். ரோஜாவைப் பச்சையாகவும், காயவைத்தும் பயன்படுத்தலாம். ரோஜா இதழ்களை ... சாப்பிட்டால் ... குணமாகும். (தொடரும்)

■ அருணா ,

## இராட்சத பூ

இந்த உலகில் பரிணமித்துள்ள மலர்... அழகிய தோற்றத்தை உடையவை என்பது... வகையில் தோற்றத்தில் மிகப்பெரிய பூவொ... காணப்படுகின்றது. இதன் விஞ்ஞானப் பெ...

முற்றாக மலர்ந்துள்ள நிலையில் இந்தப்... விட்டத்துக்கு சமனானது எனக் கண்டறியப்... இரண்டு கிலோக்கிராமாகும். எனவே ராப்ல... கருதப்படுகின்றது.

இந்தத் தாவரத்தின் குடும்பத்தில் இருப... ஓர் ஒட்டுண்ணி வர்க்கத்தைச் சேர்ந்தது. ... திசுக்குள்ளேயிருந்து தேவையான அளவு உ... பூவானது பட்டிப்பூவின் சாயலை உடைய...

அத்துடன் இந்த மலரானது இதைவிட ... அநேகமாக மலேயாப்பகுதிகளில் வளர்கின்... பூவொன்று சூரியனை நோக்கிப் பூக்கின்ற... மலரில் காயம் ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட ...

மேலும் இந்த இராட்சதப் பூவிலிருந்து ... வந்து இந்தப் பூவில் அமர்ந்து கொள்கின்ற... இதனால் மகரந்தச் சேர்க்கை (POLLUT... செய்வதில்லை என்பது நிதர்சனம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவனருளின்றி அவனடி தாழ்தல் அரிது




(சென்றவாரத் தொடர்ச்சி)

காசியில் தண்டம், பிரயாகையில் முண்டம் கயையில் பிண்டம் என்ற பழமொழிப்படி பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்குச் சிறப்புமிக்க கயாவை அடைந்து பங்குனி நதிக்கரையில் எமது மூதாதயர்களுக்கு சிரார்த்தம் முதலிய பிதிர்க்கடன்களை மிகவும் பக்திபூர்வமாக நிறை வேற்றினோம்.

கயா விந்திய மலைச்சாரலுக்கு வடக்கே மகதநாட்டிலே சம்பகம் என்ற வனத்திலே அமைந்த திருத்தலமாகும். நாம் சென்றவேளை(ஜூன் மாதம்) பங்குனி நதி வரண்டு காணப்பட்டது. இதனால் அந்நதியில் தோண்டப்பட்ட சிறிய குழியிலிருந்து பெறப்பட்ட நீரின் மூலமே சிரார்த்த பிண்டத்துக்குத் தேவையான நிவேதனத்தைத் தயார் செய்தோம். கயாவில் எமது மூதாதையருக்கு மட்டுமல்லாமல் யாருக்கும் பிண்டம் இட்டு அவர்களுடைய நற்கதிக்காகப் பிரார்த்தனை செய்யலாம்.

இங்குள்ள அக்ஷயவருடம் என்று சொல்லப்படுகின்ற ஆலமரத்தின் நிழலில்தான் முதன் முதலில் இராமரும் சீதாப்பிராட்டியாரும் தசரதனுக்குச் சிரார்த்தம் செய்தார்கள் என்பதை இராமாயண காவியங்கள் மூலம் அறிவோம்.

பிண்டமிடுவதற்காக இந்த ஆலமரம் இருக்கின்ற இடத்தை அடையும்போதே எமக்குத் தெரியாமலே ஏதோ ஓர் அதிர்வலைகள் எம்மை ஆட்கொள்கின்றன.

அங்கே சங்கல்பம் செய்து நமது கையாலேயே விஷ்ணு பாதத்தில் இந்தப் பிண்டங்களை மனம், உடல் எல்லாம் ஒன்றுசேர எமது மூதாதையர்கள் பெயரில் ஒவ்வொன்றாகப் போடுகின்றோம். இவ்வாறு மொத்தம் 64 பிண்டங்கள் இடுகின்றோம். இதில் தாயாருக்காக மட்டும் 16 பிண்டங்களை இட்டோம். இதன்மூலம் நாம் அடைந்த மனத்திருப்தியை வாயினால் வர்ணிக்க முடியாது. எம்மை அறியாமலே நாம் பூரண மனத்திருப்தியடைந்து ஆனந்தக்கண்ணீர் சொரிந்தோம்.

இப்பிண்ட சிரார்த்தத்தின் பூர்த்தியில் எமது மூதாதையரின் நினைவாக நாம் மிகவும் விரும்பி உண்ணும் ஒரு காய், ஒரு பழம், ஓர் இலையை எமது வாழ்நாளில் இனிமேல் சாப்பிடுவதில்லை எனச்சங்கல்பம் செய்து பிரார்த்தித்து விரதம் பூண்டு அதனை அங்கிருந்த எமது புரோகிதரின் கைகளில் இட்டதும் அவர்கள் எமது விரதத்தை ஏற்றுக்கொள்வதாக மந்திர பூர்வமாகக் கூறினார்.

கயாவில் செய்கின்ற இச்சிரார்த்தம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். எமது வாழ்நாளில் ஒரு தடவையாவது இச்சிரார்த்தம் செய்ய எமக்கு அனுக்கிரகம் செய்த அவனை இறைஞ்சி வழிபட்டு அங்கிருந்து புறப்பட்டோம். (கயையில் பிண்ட சிரார்த்தம் செய்யச் செல்பவர்கள் முன்கூட்டியே தாம் யார் யாருக்கு பிண் டம்போடப் போகின்றோம் என்ற பட்டியலைத் தயாரித்துக் கொண்டு செல்வது நன்று)

பின் புத்தகயாவுக்குச் சென்று புத்த பெருமானையும் புத்த பெருமான் ஞானம் பெற்ற போதி மரத்தையும் தரிசனம் செய்து வழிபட்டோம்.

போதி மரத்தின் அருகில் அசோக மன்னனால் அமைக்கப்பட்ட புத்த பெருமான் அமைதி ரூபமாகக் காட்சி தரும் மகாபோதி ஆலயத்தையும் தரி சித்து, போதி மரத்தின் கீழ் இருந்து சில் நிமிடங்கள் தியானம் செய்தோம்.

பின் அங்கிருந்து புறப்பட்டு உத்தரப்பிரதேசத்தில் அமைந்துள்ள வாரணாசி என்று அழைக்கப்படும் காசியை அடைந்தோம்.

(தொடரும்)

# நினைவுக்குரிய நிகழ்வுகள்

**ஆர்.ஆர்.நல்லையா வீதி**

இவ்வீதி யாழ்.மத்தியில் அவரது வீட்டிற்கு அருகில் அமைந்துள்ளது. பிரபல வழக்கறிஞரான இவர் நெடுங் காலமாக யாழ்.நகரசபை அங்கத்தவாகவும், தலைவராகவும் விளங்கினார். தற்போதைய பொதுநூல் நிலையத்தின் முன்னோடியான தனியாரால் நடத்தப்பட்ட நிலையத்தை 1935 இல் யாழ்.மாநகரசபைக்குக் கையளித்தபோது அதை நகரபிதாவாகப் பொறுப்பேற்ற பெருமை இவருக்குண்டு.யாழ்.இந்துக்கல்லூரி அதிகார சபை அங்கத்தவராகவும், பல வருடங்கள் அதைச் சார்ந்த பல கல்லூரிகளை நேரடியாக நிர்வகிக்கும் பொறுப்பாளராக சிறந்த கல்விப்பணியாற்றினார். அவரின் தன்னலமற்ற, கல்வி மற்றும் மக்கள் பணியை மக்கள் இந்தவீதி மூலம் என்றும் நினைவில் நிறுத்துவர்.

**சிவகுருநாதர் வீதி**

இது வண்ணார்பண்ணையில் கஸ்தூரியார் வீதியையும் பிறவுண் வீதியையும் இணைக்கின்றது. பிறவுண் சின்னத்தம்பி பரம்பரையிலான இ.சிவகுருநாதர், பிரபல வழக்கறிஞராகவும் யாழ்.நகரசபை அங்கத்தவராகவும் விளங்கினார். சைவபரிபாலன சபை, யாழ்.இந்துக்கல்லூரி அதிகார சபை ஆகியவற்றுடன் நெடுங்காலமாக இணைந்து பரோபகாரமற்ற அமைதி முறையில் சேவையாற்றிய பெரியார் நாணயம் கண்ணியத்துக்கும் பெயர் போனவர் இந்த தம்பதியினரே யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் தற்போதைய வளாகத்துக்குரிய நிலத்தை அன்பளித்தனர். இவர்கள் நினைவாகவே விசாலாட்சி மண்டபமும், சிவகுருநாதர் வீதியும் விளங்குகின்றன.

**அபூபக்கர் வீதி**

யாழ்.முஸ்லிம் பகுதியில் அமைந்துள்ள இந்த வீதி பிரபல வழக்கறிஞரான அபூபக்கர் நினைவாக உள்ளது. முஸ்லிம் மக்களிடையே தோன்றிய முன்னணி வழக்கறிஞரான இவர் சகல மக்களினதும் நம்பிக்கைக்கும் நன்மதிப்புக்கும் ஆளாகி விளங்கினார். இவரது மகன் கொழும்பு சாகிராக் கல்லூரிப் புகழ்பூத்த அதிபர் ஏ.எம்.ஏ அசீஸ் என்பதும், மருமகன் வழக்கறிஞரும் யாழ்.மாநகர சபை முதல் முஸ்லிம் நகர பிதாவாக விளங்கியதும் எம்.எம்.சுல்த்தான் நினைவுக்குரியனவாகும்.

**உருத்திரா மாவத்தை**

கொழும்பில் வெள்ளவத்தையில் இந்த வீதி அமைந்துள்ளது. வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட ரி.உருத்திரா, கொழும்பு வர்த்தகத்துறையில் பிரபலமாகி கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் அந்நா ளில் அமைந்துள்ள புகழ்பூத்த சைவ உணவகமான ''ஆனந்த பவானின்'' உரிமையாளருமாவார். இவர் பல வருடங்கள் கொழும்பு மாநகர சபை அங்கத்தவராக விளங்கி 1953-1954 இல் நகரபிதாவாக அன்றைய காலத்தில் இலங்கை வந்த பிரிட்டிஷ் மகாஇராணியார் இரண்டாவது எலிசபெத் அம்மையாரை கொழும்பு கப்பல் துறைமுகத்தில் செங்கம்பள வரவேற்பு அளித்த தலை நகரின் முதல் பிரசை என்ற பெருமைக் குரியவரானார். அவரின் ஞாபகார்த்தமான உருத்திரா மாவத்தையிலேயே சைவமங்கையர் கழகம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**வைத்திய கலாநிதி குமரன் இரத்தினம் வீதி**

இந்த வீதி கொழும்பு மத்தியில் Stane Island இக்கு அண்மித்ததாகவுள்ளது. அங்குள்ள பிரபல பழைமை வாய்ந்த தனியார் மருத்துவமனைதான் "Dr Rutnams Hospital" இதன் நிறுவநர் W.Rutnam ஆவார். இவரின் மகன் Dr குமரன் இரத்தினம் அவர்களின் மனிதாபிமான சேவைகாரணமாக கொழும்பு மாநகரசபை அங்கத்தவராகி 1950 இல் நகர பிதாவாக விளங்கினார். யாழ்.இந்துக் கல்லூரிப் புகழ்பூத்த அதிபர் ஏரம்பு குமாரசாவாவின் மூத்த மருமகனாவார். அன்னாரின் இரண்டாவது மருமகன் பொறியியல் பேராசியரியர் செல்வநாயகம் என்பதும் மூன்றாவது மருமகள் புகழ்பூத்த இடதுசாரிக் குடும்பத்தைச் சேர்ந்த வரும் பின்பு இந்தியாவில் இலங்கைத் தூதுவராக விளங்கிய மங்கள முனசிங்க என்பதும் குறிப்பிடத்தக்கது.Dr குமரன் இரத்தினமவர்களின் சேவையின் நினைவாகவே இந்த வீதி விளங்குகின்றது.

**B.A தம்பி ஒழுங்கை**

வண்ணார்பண்ணை ஓட்டுமடம் வீதியையும் பிரப்பங்குளம் வீதியையும் இணைப்பதே இந்த ஒழுங்கை, பிறவுண் சின்னத்தம்பியின் சகோதரரான கதிரவேற்பிள்ளை என்பவரையே ''பி.ஏ.தம்பி'' என அழைத்தனர். இவரும் சுற்றத்தவர்களும் இந்த இடத்திலேயே வசித்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து B.A பட்டம் பெற்ற முதல் வரானபடியால் B.A தம்பி என அழைத்தனர். (மற்றையோர் இந்தியா சென்று பெற்றனர். இவர் "பதினாறும்" பெற்று வாழ்பவர் என்றதற்கமைவாக பதினாறு பிள்ளைகளுக்கு தகப்பனாகி விளங்கிப் பெருமை பெற்றார். இவரின் ஞாபகமாகவே ''B.A தம்பி ஒழுங்கை'' எனப் பெயர் பெற்றது.

**பொன்னப்பா ஒழுங்கை**

B.A தம்பி ஒழுங்கையையும் ஓட்டுமடம்- மானிப்பாய் வீதியையும் இணைப்பதாகும். இங்கு வாழ்ந்த பொன்னப்பா பரியாரியார் முப்பதுகளிலும் நாற்பதுகளிலும் சிறந்து விளங்கிய சிறுபிள்ளை வைத்தியராவார். அவரது சிறந்த வைத்திய முறையை யாரும் தொடரவில்லை. அவரின் ஞாபகமாகவே பொன்னையா ஒழுங்கை அமைந்துள்ளது.

வி.சிவசுப்பிரமணியம்

ள்ள மலர்களில் தாமரை, சூரியகாந்தி போன்றவை பருமனான
வ என்பது கண்கூடு. ஆனால் இவற்றையெல்லாம் மிஞ்சும்
ரிய பூவொன்றும் அயனமண்டல நாடுகளில்
ஞானப் பெயர் 'ராப்லீசியா' (RAFFLESIA) ஆகும்.
ல் இந்தப் பூவின் விட்டம் (DIAMETER) சைக்கிள ரயரின்
ண்டறியப்பட்டுள்ளது. இதன் எடை இருபது முதல் இருபத்து
வே ராப்லீசியா உலகிலேயே மிகப்பெரிய பூவெனக்



தில் இருபத்து இரண்டு வகைகள் உண்டு. அதேவேளை இது
சார்ந்தது. ஊட்ட உயிர் (HOST) தாவரத்தின்
அளவு உணவை உறிஞ்சி வாழும் தன்மையுடையது. இந்தப்
டையு
தைவிட ஆயிரம் மடங்கு பெரிதாகக் காணப்படும்.இவை
வளர்கின்றன. மலரும் காலங்களில் மிகப் பருமனான
பூக்கின்றது. சார்ந்தர்ப்பச் சூழ்நிலையின் காரணமாக இந்த
கப்பட்ட பகுதியில் இருந்து பால் சுரக்கும்.

லிருந்து நறுமணத்துக்குப் பதிலாக புலால் உணவின் மணமே வீசும். இதனால் ஈக்கள் கூட்டம் கூட்டமாகப் பறந்து
ாள்கின்றன.
POLLUTION)ஏற்பட நிறைய வாய்ப்புக்கள் உண்டாகின்றன. இந்தப் பூவின் தாற்பாரியத்தை மக்கள் அசட்டை
ஆகும்.

செங்கலடி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உதடு சிவக்க...

தன்னுடைய உதடு அழகாக, சிவப்பாக இல்லையே என்ற ஏக்கம் பல பெண்களுக்கும் இருக்கும். மகிழ்ச்சி, துக்கம், சோகம் என அனைத்தையும் வெளிப்படுத்துவதில் கண்களுக்கு எவ்வளவு முக்கிய பங்கு உண்டோ, அதுபோல்தான் உதடுகளும்.

சாதாரணமாக மேக்கப் இல்லாமல், லிப்ஸ்டிக் மட்டும் போட்டு கொண்டாலே போதும், முகம் பளிச்சென இருக்கும். பழங்காலங்களில் லிப்ஸ்டிக் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன், பெண்கள் மருதாணியை அரைத்து உதடுகளில் பூசிக் கொள்வார்கள். வெயில் மற்றும் மழை காலங்களில், அந்தந்த சூழ்நிலைகேற்ப உதடுகளை முறையாக பராமரித்து வந்தாலே போதும், உங்கள் உதடுகளும் அழகாக இருக்கும்.

உதடுகளில் ஏற்படும் பொதுவான பிரச்னைகள்:

கொழுப்புச் சத்து குறையும் போது, உதடுகள் சுருங்கி வெடிப்பு தன்மையை அடைகின்றன. விட்டமின்கள் குறைபாட்டினால், உதடுகளின் ஓரத்தில் புண்கள் வரலாம். இதற்கு உணவில் கீரைகள், பச்சை காய்கறிகள் மற்றும் பழங்களை அதிகளவில் சேர்த்து கொள்ள வேண்டும். மேலும், நிறைய தண்ணீரும் குடிக்க வேண்டும்.

வாய்ப் பகுதியை சுற்றி உதடுகளின் ஓரத்தில் உள்ள புண்கள் மற்றும் கொப்புளங்கள் மறைய, விட்டமின், சத்துகள் நிறைந்த, சன்ஸ்கிரீன் லோஷனை தடவி வரலாம்.

கறுத்த உதடு சிவப்பாக செய்ய வேண்டியவை:

அதிக குளிர் மற்றும் வெப்பத்தை தாங்க முடியாமல், சிலருக்கு உதடுகளில் பிளவுகள் ஏற்பட்டு காய்ந்து விடும். மேலும் சிலருக்கு உதடுகள் கறுத்தும், வெடிப்புகளுடனும் காணப்படும். இவற்றிற்கான சிகிச்சை முறைகள்:

பாலேட்டுடன் நெல்லிக்காய் சாறு கலந்து, உதடுகளில் தடவி வந்தால், கறுமை மறைந்து சிவந்த நிறம் உண்டாகும்.

வெண்ணெயுடன் ஆரஞ்சு பழச் சாறு கலந்து, உதடுகளில் தடவி வந்தால், வெடிப்புகள் சரியாகி உதடுகள் மென்மையாகும்.

# அழகு குறிப்புகள்

★ சந்தனம், முல்தானிமட்டி கலந்த, 'பேஸ் பாக்' உபயோகித்து வர, முகம் பொலிவாகவும், மிருதுவாகவும் மாறும்.

★ கடலைமாவுடன் சிறிது மஞ்சள் தூள், எலுமிச்சை சாறு, ஒரு டேபிள் ஸ்பூன் பால் கலந்து முகத்தில் தடவி, காய்ந்தவுடன் மிதமான சுடுநீரில் கழுவ, முகம் மிருதுவாகும்.

★ ஒலிவ் எண்ணெயுடன் சர்க்கரை கலந்து உள்ளங்கைகளில் தேய்த்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்ய உள்ளங்கைகளின் கடினத் தன்மை மறைந்து மிருதுவாக மாறும்.

★ பச்சை உருளைக்கிழங்கின் சாற்றை முகத்தில் தடவி வர சூரியக் கதிர்களால் ஏற்படும் கருமை நிறம் மாறும்.

★ 2 ஸ்பூன் முள்ளங்கி சாற்றுடன் 2 ஸ்பூன் மோர் சேர்த்து, முகத்தில் தடவி, ஒரு மணிநேரம் கழித்து, சுடுநீரில் முகத்தை கழுவ வேண்டும். இதை தினசரி செய்து வர, வெப்பத்தால் முகத்தில் ஏற்படும் தவிட்டு நிறமுள்ள புள்ளி மறையும்.

★ பூசணிக்காயை சிறு துண்டுகளாக்கி அதை கண்களை சுற்றி வைக்க கண்களைச் சுற்றி ஏற்படும் கருவளையம் மறையும்.

★ பப்பாளி பழத்தை அரைத்து, முகத்தில் தொடர்ந்து தடவி வர முகப்பரு, கரும்புள்ளி ஆகியவை மறையும்.

★ புளித்த மோரை முகத்தில் 15 நிமிடம் தடவி, மிதமான சுடுநீரில் கழுவ முகம் பொலிவு பெறும். இதை தொடர்ந்து 15 நாட்களுக்கு செய்து வர நல்ல பலன் கிடைக்கும்.

★ முழங்கை கருப்பாகவும், சொர சொரப்பாகவும் இருந்தால், தேங்காய் எண்ணெயுடன் எலுமிச்சை சாறு கலந்து தடவி வர மிருதுவாக மாறும்.

★ தேன் மற்றும் எலுமிச்சை சாறு கலந்த கலவையை உதட்டின் மீது தொடர்ந்து தடவி வந்தால், தரம் குறைந்த லிப்ஸ்டிக் பயன்படுத்துவதால் ஏற்படும் கருமை நிறம் மறையும்.

★ தயிருடன் கடலை மாவு கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்வ தால் முகத்தில் ஏற்படும் சுருக்கம் மறையும்.

★ முட்டை கோஸ் சாறு, சிறிது ஈஸ்ட், ஒரு டேபிள் ஸ்பூன் தேன் மூன்றையும் கலந்து, 20 நிமிடம் முகத்தில் தடவி, மிதமான சுடு தண்ணீரில் முகத்தை கழுவ வேண்டும். இதனால், முகச் சுருக்கம் மறைந்து, முகம் பொலிவுடன் இருக்கும்.

★ முகம் மிருதுவாகவும், ரோஸ் நிறத்துடனும் இருக்க ரோஜாப் பூ இதழ்களை அரைத்து, அதோடு பால் , பச்சை பயிறு மாவு, மற்றும் ரோஸ் வாட்டர் கலந்து முகம் மற்றும் கழுத்தில் தடவி வர சருமம் பளபளக்கும்.

# லிப்ஸ்டிக் போட்டு கொள்வது எப்படி?

சிலருக்கு தங்கள் நிறத்துக்கு ஏற்ற லிப்ஸ்டிக் தேர்ந்தெடுப்பது மற்றும் அதை போட்டு கொள்வது எப்படி என்று தெரிவதில்லை.

## அவர்களுக்கான டிப்ஸ்

★ கறுப்பாக இருப்பவர்கள் மிகவும் லைட்டாகவோ அல்லது டார்க்காகவோ இல்லாமல், பொதுவான கலரில் லிப்ஸ்டிக் பயன்படுத்தலாம்.

★மாநிறமாக இருப்பவர்கள் இயற்கையான கலரில் லிப்ஸ்டிக் போட்டு கொண்டால், அழகாக இருக்கும்.

★சிவப்பாக இருப்பவர்களுக்கு எல்லா கலர் லிப்ஸ்டிக்கும் பொருத்தமாக இருக்கும்.

★வெயில் காலங்களில் இரண்டு கலர்களை சேர்த்து லிப்ஸ்டிக் போட்டு கொண்டால், எடுப்பாக இருக்கும்.

★லிப்ஸ்டிக்குக்கு ஏற்ற வகையில் லிப் லைனர் மற்றும் பென்சிலை தேர்ந்தெடுக்க வேண்டும். லைனர் போட்ட பிறகு, லிப் பிரஷ் பயன்படுத்தி லிப்ஸ்டிக்கை போட்டு கொண்டால், திட்டு திட்டாக இல்லாமல், ஒரே சீராக அழகாக இருக்கும்.

★லிப் லைனர் பயன்படுத்தும் போது, பெரிய உதடு உள்ளவர்கள், உதடுக்கு உள்ளே வரைந்தால், உதடுகள் சிறியதாக தெரியும்.

★உதடுகள் பெரிதாக தெரிய வேண்டுமெனில், முதலில் தேவையான நிறத்தில் லிப்ஸ்டிக் போட்டு கொள்ள வேண்டும். பிறகு வெள்ளை நிற லிப்ஸ்டிக்கை உதட்டின் நடுவில் தடவினால், உதடுகள் பெரிதாக பளிச்சென்று தெரியும்.

★உடையின் நிறத்துக்கு ஏற்ற லிப்ஸ்டிக் போட்டு கொண்டால், எடுப்பாக அழகாக இருக்கும்.

# நகங்களைப் பாதுகாக்க..



தரமான நெயில் பொலிஷ்களை மட்டுமே உபயோகிக்க வேண்டும். அப்போது தான் நகத்திற்கு எவ்விதபாதிப்பும் வராது. நெயில் பொலீஷ் வாங்கும் போது உங்கள் நிறத்திற்கு ஏற்ற கலராக பார்த்து தேர்ந்தெடுங்கள்.

சிலருக்கு நகம் கடினத்தன்மையுடன் இருப்பதால், நகத்தை வெட்டுவதற்கு கஷ்டமாக இருக்கும். அப்ப டிப்பட்டவர்கள் குளித்தவுடன் நகம் வெட்டினால், நகம் ஈரத் தன்மையுடன் இருப்பதால், எளிதாக வெட்ட வரும். அதே போல், தேங்காய் எண்ணெய் தடவி சிறிது நேரம் கழித்து வெட்டினாலும் எளிதாக வெட்டலாம். நகங்கள் அடிக்கடி உடைந்து போகிறவர்கள், சிறிதளவு பேபி ஒயிலில் நகங்களை மூழ்கும் படி வைத்தால், நகங்கள் உறுதியாகும்.

# அடர்த்தியான தலைமுடி வேண்டுமா?!!

1.வாரம் ஒருமுறை தலைக்கு குளிக்கும் ஒரு மணி நேரத்திற்கு முன்பாக, தலையின் வேர் முதல் நுனி வரை சுத்தமான வெண்ணெயை தடவி மசாஜ் செய்யவும். பின்பு சீயக்காய் தேய்த்து குளிக்கவும்.



2.தலையின் முட்டையின் வெள்ளையை மட்டும் தனியாக எடுத்து, அதனை தலைக்கு தடவி பின் 30நிமிடம் கழித்து அதேபோல் கழுவவும்.

3.ஒவ்வொரு வாரமும்,தலைக்கு குளிக்கும் முதல் நாள் இரவே தலையில் தேங்காய் எண்ணெயையும் ஒலிவ் எண்ணெயையும் தடவி மசாச் செய்து கொள்ளவும்.

கண்டிப்பாக ஒரு மாதமாவது தொடர்ந்து செய்ய வேண்டும்.

பலன் கிடைக்கும்!!!!!!!!!!!!

# கண் இமைகள் மற்றும் புருவம் அழகு



கண் இமைகள் மற்றும் புருவம் அழகாகவும் அடர்த்தியாகவும் இருக்க தினமும் இரவு கண் இமைகளிலும் புருவத்திலும் விளக்கெண்ணை தடவி வரவும். இவ்வாறு செய்து வர,கண்கள் அழகு பெறும்.

உடல் சூட்டை தணிக்கும். இதனை நான் தினமும் செய்து வருகிறேன், அதனால் என் இமைகள் அடர்த்தியாக உள்ளது. நீங்களும் செய்து பாருங்கள்!பலன் பெறுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வம்



ஒரு செல்வந்த அரசன் பல இடங்களை நீண்ட காலம் ஆண்டு கொண்டிருந்தான்.

திடீரென்று அவனுக்கும் சில எதிரிகள் தோன்றினார்கள். அவர்களெல்லாம் ஒன்றுசேர்ந்து இவனைத் தோற்கடித்து விட்டார்கள். தோற்றுப்போனதும் இவனுக்குப் பயம் ஏற்பட்டது. எங்கே எதிரிகள் தன்னைக் கொண்டுவிடுவார்களோ என்று வெளியில் வந்தால் தனக்கு ஆபத்து என்று பயந்து யாருக்கும் தெரியாமல் ஒரு குகைக்குள் போய் பதுங்கியிருந்தான்.

நிலைமையை பாருங்கள் முதல்நாள் அரண்மனையில் அதிகாரம் செய்து கொண்டிருந்தவன் மறுநாள் குகையில் பயந்துபோய் பதுங்கியிருக்கிறான்.

இரவு வந்ததும் பசி அவனது வயிற்றைக் கிள்ளியது. பிச்சையெடுத்துச் சாப்பிட வேண்டிய நிலை. பிச்சையெடுப்பதற்குப் பாத்திரம் வேண்டுமே என்ன செய்வது. அங்கேயும் இங்கேயும் பார்க்கிறான். ஒரு மூலையில் யாரோ விட்டுப்போன ஓர் உடைந்த ஓடு இருந்தது அதை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். இருட்டிலே வழி தெரியவில்லை. ஏதோ ஒரு யூகத்தில் காலை மெதுவாக எடுத்துவைத்து நடந்து போய்க்கொண்டிருக்கிறான்.

வழியில் ஒரு கறுப்பு நாய் படுத்துக்கிடந்தது. இருட்டிலே அது இவன் கண்ணுக்குச் சரியாகத் தெரியவில்லை. தவறிப்போய் காலை வைத்துவிட்டான் அதன் மேல். நாய் சும்மா இருக்குமா? துள்ளி எழுந்து கடித்து விட்டது. காலையும் பார்க்கிறான். காலத்தையும் நினைத்துப் பார்க்கிறான்.

அரண்மனையிலே "வீரக்கழல் அணிந்த காலை உடைய மன்னா!" என்று புலவர்கள் புகழ்வார்கள். ஆனால் அந்தக்கால் இன்று நாய்கடித்த காலாகிவிட்டதே என்று நினைக்கிறான்.

அது மட்டுமா? முன்னர் பொற்கிண்ணத்தில்தான் சாப்பிடுவான். ஆனால் இப்போது உடைந்துபோன ஓட்டைக் கையில் வைத்துக்கொண்டு நிற்கிறான். முன்பெல்லாம் அரசருக்குரிய காணிக்கை என்று சொல்லி இவன் காலடியில் கொட்டுவார்கள். அப்போது அவன் அந்தச் மக்களுடைய முகத்தைத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டான். மிகவும் கர்வமாக உட்கார்ந்திருப்பான். அத்தகைய மனிதர் இன்றைக்கு எல்லோர் கண்ணிலும் தெரியும்படியாக பிச்சையெடுத்துக் கொண்டிருக்கிறான்.

அப்போது காணிக்கைகளைத் தன் கையாலே வாங்குவது தனக்கு கௌரவக்குறைச்சல் என்று நினைத்து தன்னுடைய சேவகர்களை விட்டுத்தான் வாங்குவான். இப்போது அவன் தன் கையாலேயே பிச்சை வாங்குகிறான். அந்த மனிதன் முதல் நாள் அரசன். மறுநாள் பிச்சைக் காரன். எவ்வளவு வித்தியாசம்.

செல்வமே இப்படி ஒரு வித்தியாசம் ஏற்படுவதற்கு காரணம். அப்படிப்பட்ட செல்வம் வாழ்க்கையை நடத்துவதற்கு எமக்குத் தேவைதான். ஆனால் அதையே நாம் முக்கியமாக அடைய வேண்டிய பயனாக நினைக்கிறோம். அதுதான் வேடிக்கை. இதை நம்மாழ்வார் அழகான ஒரு பாசுரத்தில் கூறுகிறார்.

"ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெருநாடு காண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்
திருநாரணன்தான் காலம்பெறச் சிந்தித்து உய்ம்மினோ!"

ஒரு பெரிய பணக்காரர் ஒரு துறவியிடம் போய் என்னிடம் நிறையப் பணம் இருக்கிறது. இருந்தாலும் நிம்மதியாக இருக்க முடியவில்லை என்ன காரணம்? என்று கேட்டார்.

அந்தத் துறவி இதற்கு நேரடியாகப் பதில் கூறவில்லை. பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு குழந்தையைக் கூப்பிட்டார்.

ஓடிவந்து நின்ற அந்தக் குழந்தையின் கையில் ஓர் அப்பிள் பழத்தை கொடுத்தார் துறவி. அதைவாங்கிய குழந்தை சிரித்தது. இன்னொரு பழத்தையும் எடுத்துக் கொடுத்தார். மறுகையால் அதையும் வாங்கிவிட்டு குழந்தை சிரித்தது. மூன்றாவது அப்பிளை எடுத்துக் கொடுத்தார். இரண்டு பழத்தையும் நெஞ்சில் அணைத்துக் கொண்டு மூன்றாவது பழத்தை வாங்க முயற்சி செய்தது. ஆனால் அது நழுவி கீழே வீழ்ந்து உருண்டு ஓடியது. ஏற்கனவே இருந்ததும் விழுந்துவிட்டது.

இப்போது அந்தக் குழந்தை அழ ஆரம்பித்துவிட்டது. இப்போது அந்தத் துறவி பணக்காரரிடம் கூறினார்.

"குழந்தையைக் கவனித்தீர்களா? இரண்டு அப்பிள்கள் போதுமென்று அது நினைத்திருந்தால் இப்ப அது அழ வேண்டிய அவசியம் வந்திருக்குமா?" என்றார். அதுவுமே அளவுக்கு மிஞ்சினால் துன்பந்தான். இந்தக் [illegible] இதையெல்லாம் யார்தான் காதில் [illegible]

கே.[illegible]

# வாசகர் திருமுகம்

## அதிகாரிகளின் அசமந்தப் போக்கு

வலி.கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட உரும்பிராய் கிழக்கு சிவன் வீதியின் முதலாம் வீதி பிரதான பாடசாலைகள், வைத்தியசாலைகள், சந்தைகள், ஆலயங்கள், பலாலி வீதி என்பவற்றைச் சென்றடை கின்ற பிரதான போக்குவரத்துப் பாதையாகக் காணப்படுகின்றது.

இந்த வீதியானது கடந்த 40 வருடங்களுக்கு மேலாக எதுவித புனரமைப்பும் மேற்கொள்ளாது குன்றும் குழியுமாக போக்குவரத்துக்குப் பெரிதும் சிரமமாகக் காணப்படுகின்றது. இந்த வீதி புனரமைப்புத் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு பல முறை முறையிட்டதன் பயனாக இந்த வீதியின் ஒரு பகுதியை திருத்துவதற்கான நிதி ஒதுக்கப்பட்டு திருத்த வேலைக்கான முன் ஏற்பாடுகள் நடைபெறும் வேளையில் தனி நபர் ஒருவர் பிரதேசசபை அனுமதி பெறப்படாது போக்குவரத்துக்கு இடையூறாக மதில் கட்டும் வேளையில் அது விடயம் சம்பந்தமாக பிரதேச பொது மக்களால் பிரதேசசபை அதிகாரிகளுக்கு உரிய நேரத்தில் அறிவிக்கப் பட்டது. அதிகாரிகளின் அசமந்தப் போக்கினைத் தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படாமையால் மதில் அமைக்கப்பட் டுள்ளது.

இது விடயமாக உரிய அதிகாரிகளால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளாது காலம் நகர்த்தப் படுகின்றது. எனவே இதுவரை வீதி புனரமைப்பு வேலைகளும் நிறுத்தப்பட்டு போக்குவரத்து மிகவும் சிரமமாகவுள்ளது. இது தொடர்பாக பிரதேச மக்களுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்காது சாக்குப் போக்குச் சொல்லி வலி.கிழக்குப் பிரதேச சபையினர் காலத்தை ஏன் நகர்த்துகின் றார்கள்? என பொதுமக் களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

நாயகன்.

## வட்டு- மூளாய் வீதி சீர் பெறுமா?

வட்டுக்கோட்டை மூளாய் வீதி மாவடிச் சந்தியில் இருந்து மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சந்திவரையான பகுதியாகும். இந்த வீதி மிகவும் நல்ல நிலையில் தற்போது இருக் கின்றது. ஆனால் இந்த வீதியில் சில பகுதி கள் இடையிடையே சிறு சிறு இடங்களில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இந்த இடையிடையே சிறு சிறு இடங்களில் காணப் படும் குழிகளில் தற்போது பெய்யும் மழை வெள்ளங் கள் தேங்கி நிற்கிறது. அது மட்டுமன்றி பெரும் பகுதி சீராக உள்ள இந்த வீதி அந்தக் குழிகள் பெரி தாகி போக்குவரத்து செய்ய முடியா மலும் மேலும் பழுதடைந்த ஒரு வீதியாகவும் வரும் வாய்ப்பு அதிக மாக உள்ளது.

அத்துடன் அந்த வீதியில் உள்ள ஸ்ரீ கணேசா வாசிகசாலைக்கு அண்மையில் உள்ள பெரிய கிடங்குகளால் விபத்துக்கள் ஏற்படும் எனவும் அச்சப்பட வேண்டியுள்ளது. இந்த வீதியை நல்ல நிலையில் வைத்திருக்கவும் விபத்துக்கள் ஏற்படாமலும் இருக்க இந்த வீதியில் உள்ள குழிகளைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

சி.ஸ்ரீஜீவா,
வட்டுக்கோட்டை.

## இலக்கியங்களே நேற்றைய சமுதாயத்தின் கண்ணாடிகள்

காலத்தின் போக்கையும் மாற்றத்தையும் அறியாதவர்கள் அறுபது வருடம் என்ன ஆயிரம் வருடம் வாழ்ந்தாலும் அவர்களின் வாழ்வு அர்த்தமற்றது என்ற வாசகத்துக்கு அமைவாக இன்றைய வாழ்வின் உண்மைகளையும் நேற்றைய வாழ்வின் கசப்பான எண்ணங்களையும் எம்மால் மறக்க முடியாமல் நினைவில் வைத்துக் கொள்வதற்கான ஓர் உன்னதமான, அனைத்து சமுதாயத்தாலும் ஏற்றுக் கொள்வதற்கான ஆயுதங்களே இலக்கியங்கள் எனலாம்.

சமூக வாழ்வியலைப் பிரதிபலித்துக் காட்டும் காலத்தின் கண்ணாடிகளே இலக்கியங் கள் எனலாம். எமது உரிமைகளை, எம்மால் பெற்றுக்கொள்வதற்கான ஆயுதமாகவும், எதிர்காலத்தில் எமது இனத்துக்கு எம்மால் வழங்கப்படுகின்ற நிலையான சொத்தாகவும் நாம் இலக்கியங்களைக் கருதுகின்றோம். ஆனால் எம்மால் ஒரு வாசகராகக் கூட ஆக முடியாமல் உள்ளது. இயந்திரமாக மாறிக்கொண்டிருக் கும் இந்த உலகில் எம்மால் நிலைத்து நிற்க முடியா மல் தொலைகிறோம்.

எம்மில் எத்தனை பேருக்கு எமது இனத் தின் அத்திபாரம் புரியும், இது தவறு அல் லவா? "மயிர் நீப்பின் வாழா கவரிமான் அன் னார் உயிர்நீப்பார் மானம் வரின்" என்ற குறள் பாக்கு இணங்க தமது உடலில் ஒரு மயிரே னும் இழந்தால் உயிரை விடும் கவரிமான் போன்று, மானத்தை இழந்தால் உயிரை விடும் எமது முன்னோர்கள் அல்லவா தமிழர்கள். எம்மில் எத்தனை பேர் கவரி மான்கள் என்பது முக்கியமல்ல,

இலக்கியங்கள் வாழ்வைப் பிரதிபலிப் பதே. தமிழர் வரலாற்றில் சங்க காலம் என்ற ஒன்று உள்ளது என்பது தெரியுமா? கி.மு. முதலாம் நூற்றாண்டு முதல் மூன்றாம் நூற்றாண்டு வரையான காலம் அல்லவா அது. அங்கு தனது மகன் இறந்த செய்தி அறிந் தால் தாயார் முதுகில் அம்பு பாய்ந்ததா, நெஞ் சில் அம்பு பாய்ந்ததா என்று தான் கேட் பாளாம். நெஞ்சில் அம்பு பாய்ந்தது என்பதை அறிந்தாலே தனது பிள்ளையின் உடலை தாயார் வாங்குவாராம். அத்தகைய வீரம் விளைத்தவர்களே தமிழர்கள். எம்மில் எத்தனை பேர் அவ்வாறு வாழ ஆசைப்பட்டோம்?

இவ்வாறாக இலக்கியங்களே எமது முன்னைய வாழ்வை எமக்குப் பிரதிபலிக் கின்றன. இவ்வாறான இலக்கியங்கள் எமது எதிர்காலத்துக்கு இன்றியமையாத ஒன்று என்பதை நாம் புரிந்து செயலாற்ற வேண்டும் என்பதே எனது வாதம்.

ரீ.சு.போஷன்,
யாழ். பல்கலைக்கழகம்.

## தீர்வு கிடைக்குமா எமக்கு?

முரசு மோட்டை கிராம மக்களுக்கு "உலக உணவுத் திட்டத்தின்" ஆதரவோடு கண்டாவளைப் பிரதேச செயலகத்தால் நிவாரணம் வழங்குவதாகக் கூறி ஒரு மாதத் துக்கு மேல் உணவுக்கான வேலை செய்விக் கப்பட்டது. இதற்காக இது வரையிலும் எந்த விதமான நிவாரணமோ, உதவியோ வழங்கப் படவில்லை. நாம் அன்றாட கூலி வேலையை யும் விட்டு இந்த வேலைக்குச் சென்றும் எந்த விதமான பயனும் இன்றிப் பாதிக்கப்பட்டு இருக்கின்றோம். எமக்கான தீர்வை உரியவர் களின் கவனத்துக்குக் கொண்டு வந்து பெற்றுத் தருமாறு வேண்டி நிற்கின்றோம்.

22 பேர் ஒப்பமிடப்பட்டுள்ளது.

## வீடுகளில் முடங்கும் சிறுவர்கள்

உடுவில் ஆலடிப் பிரதேசத்தில் அதிகள வான பாடசாலை வயதுச்சிறுவர்கள் பாடசாலைக் குச் செல்லாமல் வீடுகளில் முடக்கப்பட்டுள் ளார்கள்.

இந்தப் பிரதேசப் பிள்ளைகள் அதிகமாக உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், உடு வில் மான்ஸ் வித்தியாலயம், சங்குவேலி அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் பிள்ளைகளின் வரவொழுங் கீனம் தொடர்பாக பாடசாலை சமூகமோ? பெற்றோரோ கவனம் எடுப்பதில்லை.

இது தொடர்பாக கட்டாயக் கல்வி உத்தி யோகத்தர்கள் கூடிய கவனம் எடுத்து, ஆலடிப் பிரதேசத்தில் பாடசாலை செல்லாத மாணவர் கள் மீது தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்வது டன், பெற்றோர்களுக்கும் அறிவுரை வழங்கு மாறும் கேட்டுக் கொள்கிறேன்.

நலன்விரும்பி,
உடுவில்.

## இவர்களும் நடவடிக்கை எடுக்க தயங்குவதேன்?

வடமராட்சி வலயத்தில் உள்ள கரவெட்டிக் கோட்டத்தின் கீழ் உள்ள மகா வித்தியாலயம் ஒன்றின் அதிபர் ஒருவரால் அபிவிருத்தி நிதி என்று சொல்லிக் கொண்டு கண்மூடித்தனமாக அறவிடும் நடவடிக்கை பற்றி வடமாகாணக் கல்விச் செயலாளர், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகிய இருவருக்கும் அறிவிக்கப்பட்டது.

அவர்களில் ஒருவர் கூட இது பற்றி இன்னமும் அக்கறை கொள்ளவில்லை. அந்த அதிபர் நிதிக்காக மாணவர்களுக்கு தண்டனை கொடுக்க இறங்கியுள்ளார். இலவசக் கல்வி என்றும் பெற்றோரிடம் எதுவித நிதியும் அறவிடக்கூடாது என்றும் அரசு அறிவிக்க இந்த அதிபர் செய்வது சரியா? அதைக் கேட்டுக் கொண்டு அதி காரிகள் பேசாதிருப்பதேன்? இந்த நட வடிக்கை நியாயமானதா?

ம.சிவராசா,
கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து, எதிலும் எளிமையாக நடந்து கொள்வீர்கள். உறவினர் ஒருவர் மீது இனம்புரியாத கோபம் கொள்ளலாம். வெளி வட்டாரத் தொடர்புகள் விரிவடையும். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கி விட்டு அவதிப்படலாம். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றத்தைச் சந்திக்கலாம். வெறுப்பு உண்டாகும்.



**இடபம்:**
போராட்டம் இல்லாமல் எந்த வேலையையும் சுலபமாக முடிக்கும் நாள். மாமன், மைத்துனர்களிடம் சில உதவிகள் கேட்கலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உங்களைப் பயன்படுத்தி மற்றவர்கள் ஆதாயம் பெறலாம். நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று நல்லவிதமாக நடந்து விடலாம். கலகலப்பான அனுபவம் உண்டு.



**மிதுனம்:**
குடும்ப உறுப்பினர்களின் கோபத்தைத் தூண்டி, அதில் சந்தோஷம் காண்பீர்கள். பிள்ளைகள் விருப்பங்களை எப்பாடுபட்டாவது நிறைவேற்று வீர்கள். உறவினர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். நேரம் காலம் பார்க்காமல் சிலரிடம் வீண் பேச்சுக்கள் பேசிக் கொண்டிருப்பீர்கள்.



**கடகம்:**
சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். நண்பர்களின் உதவியோடு உங்களின் காரியம் ஒன்றை முடிப்பீர்கள். தெய்வ அருளால் சில வேலைகள் நடந்ததாக மற்றவர்களிடம் கூறி மகிழ்வீர்கள். திறமைக்கு சவால் விடும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கும். உங்களிடம் கடன் வாங்கிய ஒருவர் அதைத் திருப்பக் கொடுக்கலாம்.



**சிங்கம்:**
நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த காரியம் சுமூகமாக முடிவுக்கு வரும். கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு பின்னர் சரியாகும். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிட்டும். பெண்கள் கடும் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். நீண்ட நாள்களாக தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தவரை நேரில் சந்திக்கலாம்.



**கன்னி:**
பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். நண்பர்கள் வட்டம் விரிவடையும். உறவினர் ஒருவரைச் சந்தித்து உங்களின் குடும்ப விடயங்களைப் பற்றி பேசி மகிழ்வீர்கள். எண்ணக் கனவு ஒன்று நனவாகும் வாய்ப்பு உருவாகும். அயலாரின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். விருப்பமான உணவைச் சாப்பிடுவீர்கள்.



**துலாம்:**
பிரியமான உறவினர்கள் அல்லது நண்பர்களுக்காகச் செலவு செய்யலாம். எந்த வேலையையும் பறரை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்வீர்கள். சிலரிடம் புத்திசாலித்தனமாகப் பேசி அவர்களை உங்கள் வழிக்குக் கொண்டு வருவீர்கள். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். மனைவி வழியில் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம்.



**விருச்சிகம்:**
பண விவகாரங்களில் சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் போகலாம். நேற்று நடந்த சம்பவம் ஒன்றைப் பற்றி குடும்ப உறுப்பினர்களிடம் அல்லது நண்பர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். ஒரு விடயம் குறித்து பெரிய அளவில் மனக்கோட்டை கட்டி அது கலைந்து போகலாம். உங்களின் அனுபவத்தை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள்.



**தனுசு:**
எதிலும் கவனக் குறைவைத் தவிர்க்க வேண்டிய நாள். கோபதாபங்களால் குடும்ப உறுப்பினர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். பெரிய மனிதர்கள் சிலரைச் சந்திக்க மேற்கொண்டு அது முடியாமல் போகலாம். வீண் பழிகள் வராமல் இருக்க அடுத்தவர் விவகாரங்களில் தலையிட வேண்டாம். தந்தை வழியில் எதிர்பாராத செலவுகள் நேரும்.



**மகரம்:**
மனதில் நிம்மதி, சந்தோஷம் குடிகொள்ளும் நாள். நண்பர்களுடன் சேர்ந்து கூட்டாக வெளியிடங்களுக்கு அல்லது வெளியூர்களுக்குச் செல்லலாம். குடும்ப உறுப்பினர்களுக்காக ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். கௌரவத்திற்காக சில செலவுகளைச் செய்வீர்கள்.



**கும்பம்:**
சோம்பல், அசதி நீங்கி புத்துணர்ச்சி பெறுவீர்கள். இரண்டு, மூன்று நாள்களாக பிற்போட்ட வேலை ஒன்றை இன்று வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். உறவினர்களிடம் கடனாக வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுப்பீர்கள். சில வேலைகளுக்காக பதற்றம், பரபரப்புடன் செயற்பட நேரிடலாம். பழகிய சிலர் மூலம் பணவரவைப் பெறலாம்.



**மீனம்:**
குழந்தைகள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். விரதம், வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சிறிய தவறு ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். உங்களுக்கு வேண்டிய ஒரு வருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்பீர்கள். உடல் அசதி, சோர்வு ஆள் கொள்ளும். சிலவேலைகளை செய்ய மறந்து அதனால், அவதிப்படலாம்.

# புத்தகசாலை

## நூல் : சங்க இலக்கிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

### வெளியீடு : வவுனியா தோணிக் கல் விஸ்வநாதர் ஆலய பரிபாலன சபை



சங்ககாலம் என்பது கி.பி முதலாம் நூற்றாண்டு தொடக்கம் மூன்றாம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியை உள்ளடக்கியது. சங்ககால இலக்கியப் போக்கை எடுத்துக்காட்டாக பதினெண் மேல்க்கணக்கு இலக்கியங்களும் பதினெண் கீழ்க்கணக்கு இலக்கியங்களும் விளங்குகின்றன.

பதினெண் மேற்கணக்கில் பத்துப்பாட்டு எட்டுத் தொகை நூல்களும் கீழ்க்கணக்கு நூல்களில் பதினெட்டு நூல்களும் இடம் பெறுகின்றன. நாலடியார் நாண்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது கார்நாற்பது களவெளிநாற்பது திரிகடுகம் ஆசாரக்கோவை சிறுபஞ்சமூலம் திருக்குறள் ஏலாதி, முதுமொழிக்காஞ்சி நான்மடிக்கடிகை பழமொழி நானூறு போன்ற 18 நூல்கள் அமைந்து விடுகின்றன. அந்த வகையில் அறத்தைப் பாடும் நாண்மணிக்கடிகை ஆசிரியர் விளம்பிநாகனார் மிகவும் இறுக்கமான சங்ககால தமிழ் மொழி மரபுக்கேற்ப சொல் நடையில் அமைக்கப்பட்ட இந்த நூல் வாசிப்போர் இலகுவில் பொருள் கொள்ள முடியாத மொழி நடையில் அமைந்துள்ளது. இந்த வகையில் பூதஞ்சேந்தனாரால் எழுதப்பட்ட இனியவை நாற்பதும் இந்த வகையில் அமைகின்றன.

தற்போதைய உயர்தரப் பாடத்திட்டத்தில் தமிழ் இலக்கிய வரலாறு என்னும் பாடப் பிரிவிலும் பதினெண் கீழ்க் கணக்கு இலக்கியங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. தற்போது பல்கலைக்கழகங்களில் வெளிவாரி, உள்வாரிப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மணவர்களுக்கு இந்த நூல்கள் அவசியமான ஒன்று. அது மட்டுமல்லாமல் சங்ககால தமிழ் மக்களின் ஒழுக்கநெறியையும் பண்பாட்டு விழுமியங்களையும் அறிந்து கொள்ள வேண்டிய தேவை இயல்பாக உள்ளதால் இதன் இலகு மொழிவடிவமும் உரை மூலமும் அவசியமான தேவைப்பாடாக உள்ளது.

இதனை உணர்ந்து கொண்ட சைவசித்தாந்த வித்தகரும் கலைமாணியும் தற்போது வவுனியாவில் வசிப்பவருமாகிய கதிர் சரவணபவன் அதற்கான நூலை சங்க இலக்கிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்ற பெயரில் எழுதி வெளியிட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

மிகவும் இலகுவான மொழிநடையில் மாணவர்கள் பயிலக் கூடிய வகையில் பதப் பிரிப்பு பொருளுரை விளக்கம் என்பவற்றை தாங்கி இந்த நூல் வெளிவந்துள்ளது.

## நூல் : ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் கடவுள் சுவாமிகள்

### வெளியீடு : உடுவில் கடவுள் சந்நிதி ஆச்சிரமம்



சிவானந்த வாரிதி சிவத்திரு வ.குமாரசாமி ஐயரால் ஆக்கப்பெற்ற ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் மௌன குரு கடவுள் சுவாமிகள் எனும் நூல் வெளிவந்துள்ளது.

சந்நிதி முருகன் முன் தகரமடத்தில் ஞானதீட்சை பூண்டு முத்தியடைந்த முருகுப்பிள்ளை சுவாமிகள் எனும் இயற்பெயர் கொண்ட மௌனகுரு கடவுள் சுவாமிகள் எனும் சித்தர் பற்றியதாக வெளிவந்துள்ளது.

கடவுள் சுவாமிகள் பற்றி தாம் கண்ட அற்புத அனுபவங்களைப் பற்றியும் பல்வேறு அடியவர்கள் பகிர்ந்துள்ளத்தோடு நூலாசிரியர் சுவாமிகள் பற்றிய தகவல்களைப் பல்வேறு கோணங்களில் இன்றைய தலைமுறையினர் சித்தர்தம் பெருமையை அறியக் கூடியதாக விளக்கியுள்ளார். சுவாமிகளின் குருவான சின்னத்தம்பி சுவாமிக்கிருந்த 93 சீடர்கள் பற்றியும் சுவாமிகளின் பிரதான சீடரான மலரம்பையார் கடவுள் சுவாமிகளின் பெயராலே ஆச்சிரமம் அமைத்து செய்யும் காரியங்கள் சித்தர்களுக்கு [illegible] அமைகின்றன. சமாதி பீட வழிபாடுகள் என்பவற்றைத் தாங்கியதாக வெளிவந்துள்ளது.

செல்வி.நாகேஸ்வரி

## நூல்: முல்லை அரும்புகள்




ஈழத்தின் இலக்கியத் துறையின் ஆரம்பமும் அதன் வரலாறும் தொன்மையானது. இந்த இலக்கியத் துறையில் பல எழுத்தாளர்கள் தமது பணியை செவ்வனே செய்திருக்கிறார்கள். தற்போதும் பல புதிய எழுத்தாளர்களின் வரவின் ஊடாக ஈழத்து தமிழ் இலக்கியத்துறை மெருகூட்டப்பட்டு புதிய திசையில் பயணமாகிக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில் இதன் வளர்ச்சியில் பெண் எழுத்தாளர்களின் வகிபங்கு காத்திரமானது. கவிதை, சிறுகதை, நாவல் போன்ற இலக்கியத் துறைகளில் இவர்கள் அளப்பரிய பணியை ஆற்றியுள்ளனர். ஆற்றியும் வருகின்றனர்.

ஈழத்துத் தமிழ் சிறுகதை வளர்ச்சி 1940 ஆண்டு காலப்பகுதியில் துளிர்விட்டது. இதன் மூலம் ஈழத்து இலக்கிய வளர்ச்சி சிறுகதைகள் மூலமாக மேலும் மேலும் வளர்ச்சியடையத் தொடங்கியது.

அந்த வகையில் 1950 இற்கு பிற்பட்ட காலப்பகுதியில் முதலாவது பெண் சிறுகதை எழுத்தாளரான பவானி ஆழ்வாப்பிள்ளை சிறுகதைத் துறையில் பிரவேசித்தார். இதன் பின் பல சிறுகதை எழுத்தாளர்கள். இந்தத் துறைக்கு வலுச் சேர்த்தனர். அந்த வகையில் பெண் எழுத்தாளர்களாகிய சிதம்பரபத்தினி குந்தவை, லோகேஸ்வரி சிவப்பிரகாசம், தாட்சாயினி குமுதினி போன்ற பல எழுத்தாளர்கள் சிறுகதைத் துறையை அலங்கரித்தனர்.

அந்த வகையில் தற்போதய பெண் எழுத்தாளராகிய திருமதி தவபாக்கியம் கிருஸ்ணராஜா குறிப்பிடத்தக்கவர் உரும்பிராயில் வசிக்கும் இவரால் அண்மையில் வெளியிடப்பட்ட ''முல்லை அரும்புகள்'' சிறுகதைத் துறைக்கு உரமூட்டியுள்ளது. சுமர் 17 சிறுகதைகளை உள்ளடக்கி இந்த சிறுகதை நூல் கடந்த ஆண்டு வெளிவந்துள்ளது. உணர்வுகள், சோடி சேர்வோம்?, யூதாசு, திடீர் நிலப்பிரபுகள், கிளிபறந்து விட்டது போன்ற தலைப்புகளில் அமைந்த சிறுகதைகள் இந்த நூலுக்கு அழகு சேர்க்கின்றன.

## நூல்: ஆனந்தம்

### வெளியீடு:யா/இராமநாதன் கல்லூரி




இராமநாதன் கல்லூரியில் 18 ஆண்டுகள் அதிபராக சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ள திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரத்தின் மணிவிழா மலராக ''ஆனந்தம்'' எனும் நூலை இராமநாதன் கல்லூரியின் மணிவிழாக் குழுவினர் வெளியிட்டுள்ளனர். சேவைக் காலத்தில் அவரின் சாதனைகள் பற்றிய கல்லூரியினுடைய சமூகத்தின் மனப் பதிவுகள் அதிபர் பற்றிய மாணவிகளின் எண்ணப் பதிவுகளை தாங்கிய கவிதைகள் அதிபர் கால முக்கிய நிகழ்வுகள் பொறித்த படங்கள் என்பவற்றோடு தனித்து தனி மனிதர் பெருமை பேசும் நூல் அல்லாமல் எல்லாத் தரப்பட்ட கல்விச் சமூகங்களின் கைகளிலும் தழுவக் கூடிய பல்வேறு அறிஞர்களின் அறிவியல் ஆக்கங்களை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. இராமநாதேஸ்வரரின் திருவூஞ்சலை தாங்கியதாகவும் மலராசிரியர் பண்டிதை வி.கணேசபிள்ளை சிறந்த முறையில் நூலை வடிவமைத்துள்ளார்.

ஜெகதீஸ்வரி நாகலிங்கம்

புத்தகசாலைப் பகுதிக்கு இரண்டு புத்தகங்கள் அனுப்பி வைத்தால் அவை தொடர்பான விவரம் இப்பகுதியில் பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் சர்வாதிகாரப் போக்கே காரணம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன்



நாட்டில் வணிகச்சூழலைப் பாதுகாப்பதற்கு ஜனநாய கத்தை உறுதி செய்தல், தன்னிச்சையான போக்குகளைக் கைவிடல், இனப்பிரச்சினைக்கு சிறந்த தீர்வை வழங்குதல் என்பவற்றை அரசு செய்ய வேண்டும்.

அதுமாத்திரமின்றி, குடும்ப ஆட்சி முறைமை, சர்வாதிகாரப்போக்கு என்பன பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்குக் காரணங்களாக அமைந்துள்ளன.

அத்துடன், வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இராணுவமயமாக்கல் போக்கை அரசு நிறுத்தவேண்டும்.

இவற்றைச் செய்யாமல் அரசு தான்தோன்றித்தனமாக எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் சுவீகரிப்புச் சட்டத்தை அமுலில் கொண்டு வந்தது. இதனாலேயே இலங்கை பங்குச்சந்தை உட்பட நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார மும் சீர்குலைந்துள்ளது. எனவே, இந்த சுவீகரிப்புச் சட்டத்தை அரசு ரத்துச்செய்ய வேண்டும்.

- இப்படிக் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

# உண்மைத்தன்மையைக் கூறமுடியாது

## எல்லாவெல மேதானந்த தேரர்



சட்டம் அமுல்படுத்த முன்னரே 'நட்டம், நட்டம்' என்று கூக்குரலிடுவதில் அர்த்தமில்லை.

எவ்வித ஆதாரங்களும் இன்றி தரவுகளை சிலர் வெளியிட்டு வருகிறார்கள். இதிலுள்ள உண்மைத்தன்மை இன்னதென்று உறுதிபடக் கூறமுடியாது.

அதேவேளை, இந்தச் சட்டத்தை, நாட்டை அபிவிருத்தி செய்வதற்கே முன்வைத்திருக்கிறது அரசு.

இந்தச் சட்டமூலம் நாட் டைத் திண்டாட வைப்பதற்கோ, பொருளாதாரத்தை சீர்குலையச் செய்வதற்கோ அல்ல. இதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, சட்டத்தை அமுல்படுத்தியதன் பின்னர் இலாபமா, நட்டமா எனக் கூறுங்கள்.

- இப்படிக் கூறினார் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர்.

# சுவீகரிப்புச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும்

## அகிலவிராஜ் காரியவசம்



நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை சுவீகரிக்கும் சட்டத்தை அரசு உடனடியாக ரத்துச் செய்யவேண்டும். இல்லையேல், கொழும்பு பங்குச் சந்தை தொடர்ந்து நட்டத்தை எதிர்கொள்வதைத் தடுத்து நிறுத்தமுடியாது.

இலங்கையில் முதலிடுவதற்கு எனக்கு நெருக்கமான வெளிநாட்டவர் ஒருவர் தயாராகியிருந்தார். இந்த சுவீகரிப்புச்சட்டம் நடைமுறைக்கு வந் ததை அடுத்து, அதனால் பங்குச்சந்தை சரிந்ததைக் கேள்வி யுற்ற அவர் இலங்கையில் முதலிடும் தீர்மானத்தை மாற்றிக் கொண்டார்.

இவர் மட்டுமல்ல, நாளாந்தம் இவ்வாறான வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலிட பின்வாங்குகின்றனர்.

- இப்படிக் கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. அகிலவிராஜ் காரியவசம்.

# கொழும்பு பங்குச்சந்தை வீழ்ச்சிக்கு காரணம் அரசின் சுவீகரிப்புச் சட்டமா?

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள, "நட்டத்திலியங்கும் கம்பனிகளை அரசுடைமையாக்கும் சட்டத்தால் கொழும்பு பங்குச்சந்தை உட்பட இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதாரமும் வரலாறு காணாத வீழ்ச்சி கண்டுள்ளது" என ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியும், பொருளாதார நிபுணருமான ஹர்ஷடி சில்வா தெரிவித்திருந்தார். இதன் உண்மைநிலை தொடர்பாக அரசியல்வாதிகளிடம் நாம் கருத்துக்கேட்டோம்.

# அரசின் குறுக்குவழி எதிர்பார்ப்பு

## ஜயந்த கெட்டகொட



பொதுநலவாய விளையாட் டுப் போட்டிகளை நடத்துவதற்குத் தேவைப்படுகின்ற செலவுக்கான நிதியைத் திரட்டிக்கொள்ளும் நோக்கிலேயே அரசு நட்டத்தில் இயங்கும் கம்பனிகளை சுவீகரித்து நிதியைக் கைப்பற்ற முயற்சித்தது.

எனினும், நாட்டுமக்களின் அதிர்ஷ்டமோ என்னவோ, அரசின் குறுக்குச் சிந்தனையுடனான எதிர்பார்ப்பு சுக்குநூறாகியது.

அந்த எதிர்பார்ப்பை ஈடுசெய்வதற்கே சுவீகரிப்புச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவந்தது அரசு.

அரசின் இந்த அவசர நிலையால் இன்று பங்குச்சந்தை பல கோடி ரூபாவால் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் இன்னும் நடைமுறையில் இருக்கும் என்றால் இலங்கையின் பொருளாதாரத்தைக் கரைத்துவிடும். - இப்படிக் கூறினார் ஜே.வி.பியின் எம்.பி ஜயந்த கெட்டகொட



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சண்முகம் பரம்சோதி

*(முன்னாள் உரிமையாளர் - சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)*

பிறப்பு:
1934.06.20

இறப்பு:
2010.11.29

ஆயிரம் பௌர்ணமி கண்டீர்கள்
எமதருமை தந்தையே
அது போதும் என்றோ நீத்தீர்
எமையும் இவ்வுலகையும்
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்

இருபாலை வீதி, பழனி கோயிலடி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (10605)(1,6,9)

என்றும் உங்கள் நினைவுடன்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
ப.அம்பிகைபாகன் (சோதி ஸ்ரோர்ஸ்)

# மரண அறிவித்தல்

## இளையதம்பி செல்லப்பா



புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற் றுறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி செல்லப்பா 17.11.2011 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - சின்னாச்சி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, பொன்னுத்துரை அன்னம்மா மற்றும் கணபதிப்பிள்ளை, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவபாக்கியம், கந்தசாமி (ஜேர்மனி) காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் கௌரி அம்மா, நடராசா (இந்தியா), லோகேஸ்வரி ( சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் துரைராசா, மோகனராணி, காலஞ்சென்றவர்களான சுசிலாதேவி, குழந்தைவேலு மற்றும் அருட்செல்வம் ( சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பார்வதி, ஐயாத்துரை, முருகேசு மற்றும் தில்லையம்பலம், கண்ணம்மா ஆகியோரின் மைத்துனரும், குமரன், சுபாகரன்(ஜேர்மனி), சுகந்தன் (கணக்காளர், LBCL யாழ்ப்பாணம்), சுதேசன் (வைத்தியர் கிளிநொச்சி), சுகதா (உதவி முகாமையாளர் SKM யாழ்ப்பாணம்), சுசிந்திரன் (வைத்தியர் - சிலாபம்), சுசிகரன் (இணைப்பாளர் வடமாகாணம் AOD), சதிஸ் , துஸ்யந்தினி, கவிதா (கனடா), மயூரன், அஜந்தா (சுவிஸ்), கீர்த்தனா (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான சுதர்சன், தட்சாயினி, பிரதிஸ், அரூசுனா ஆகியோரின் பேரனும் கிஷந், துஷந், கம்சிகா , ஜேர்சிகா , கிருஸ்ரிகா, ரவிவர்மன் காலஞ்சென்ற அபிசன் ஆகியோரின் பூட்டன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2011) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10 மணிக்கு அவாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புளியங்கூடல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை. (10601)(3,6,7)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி பரஞ்சோதி தேவகுஞ்சரி

காரைநகர், களபூமி, சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் யாழ்.ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ் சோதி தேவகுஞ்சரி கடந்த 16.11.2011 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி - செந்தில்நாயகி தம்பதியரின் அன்பு மகளும், பரஞ்சோதியின் [வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்] அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், செந்தூரன், சிவதர்ஷனி [சிங்கப்பூர்], சாளினி ஆகியோரின் அன்புத் தாயும், காண்டீபனின்[பொறியிலாளர்-சிங்கப்பூர்] அன்பு மாமியும், காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் தனலக் சுமி தம்பதியரின் சம்பந்தியும், அருணகிரிநாதர் [ASK அன் கொம்பனி- கம்பளை], இராஜகுமாரி, கமலகண்ணன் [கண்ணன் ஸ்ரோர்ஸ் - கம்பளை], சாந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கருணாநிதி [சூரியன் களஞ்சியம்], சிவசோதி [கந்தன் களஞ்சியம் -கிளிநொச்சி], கற்பகநாதன் [சிறிமாதவன் -யாழ்ப்பாணம்], கணேசன் [ராசு களஞ்சியம் - யாழ்ப்பாணம்], பாக்கியவதி, தவமணி, கோகிலாவதி, சிவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் யோகேஸ்வரி, பரமேஸ்வரி, சரோஜினிதேவி, இராஜேஸ்வரி, பாலசிங்கம், சிவானந்தம், இராஜேந்திரம் [குகன் ஸ்ரோர்ஸ்-பண்டாரவளை], சிவபாதம், சொர்னாதேவி, சிவயோகன் [கம்பளை], சுரேந்திரன் [கிருஷ்ணா ஜுவலறி- யாழ்], நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை [20.11.2011] ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

354/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியாவில் அரசசார்பற்ற நிறுவனங்கள் பணியை நிறுத்தியதால் தொழிலாளர்கள் பாதிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு மலையக மக்கள் முன்னணி கோரிக்கை

நுவரெலியா, நவம்பர்.19

நுவரெலியா மாவட்டத்தின் பல தோட்டங்களில் இயங்கி வந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் நிறுத் தப்பட்டுள்ளமை குறித்து தோட்டத் தொழிலாளர்கள் தமக்கு தெரிவித்திருக்கின்றனர் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவியும், சமூக அபிவிருத்தி சமூக அநீதி ஒழிப்புக்கான ஜனாதிபதி ஆலோசகருமான திருமதி சாந்தினிதேவி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அரச சார்பற்ற நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒருநிகழ்வில் உணவு நச்சுத்தன்மையடைந்ததால் பலர் பாதிக்கப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து சில அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன என்று தோட்டப்புற மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

மேற்படி அரசசார்பற்ற நிறுவனங்கள் தொழிற்சங்கப் பாகுபாடுகள் இல்லாமல் சகலருக்கும் சமமாகச் சேவையாற்றி வந்தன. இவ்வாறான நிறுவனங்கள் ஊடாக முன்பள்ளிக் கட்டடங்கள், இலவச வைத்திய முகாம், பிள்ளை பராமரிப்பு நிலைய அபிவிருத்தி அறிவூட்டல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், மலசலகூடம், குடிதண்ணீர் வசதிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள், பரீட்சை வழிகாட்டல்களை வழங்குதல், தையல் கலை போன்ற திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

தற்போது இந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருப்பதால் பல வேலைத் திட்டங்கள் இடையில் முடக்கப்பட்டுள்ளன. அபிவிருத்தி வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தொழிலாளர்கள் எமக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளினால், மக்களுக்கான வேலைத் திட்டங்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார் அவர். (வ)

# மலையகத்தில் நாளை சிறுவர் தின நிகழ்வுகள்

இலங்கையில் பல சிறுவர் மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டுள்ள நிறுவனங்கள் ஒன்றிணைந்து அமைத்துள்ள கிரேன் எனப்படும்சிறுவர் உரிமை பரிந்துரை வலையமைப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை சிறுவர் உரிமை தினமாகவும், கிரேன் அமைப்பின் தினமாகவும் கொண்டாட முடிவு செய்துள்ளது. இதையொட்டி பிரிடோ நிறு வனத்தால் பெருந்தோட்டப் பகுதிகளில் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் உரிமைகள் சமவாயத்தை 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி அங்கீகரித்தது. அதன்படி இந்த வரடத்தோடு இந்தச்சமவாயம் அங்கீகரிக்கப்பட்டு 22 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன.

இலங்கை உட்பட சில நாடுகளில் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி சிறுவர் தினமாகக் கொண்டாடப்பட்டாலும் உண்மையான சிறுவர் தினம் நவம்பர் 20 ஆம் திகதியாகும். இதன் காரணமாக இந்தத்தினத்தைச் சிறுவர் உரிமை தினமாகவும், கிரான் அமைப்பின் தினமாகவும் கொண்டாட வேண்டும் என்ற ஆலோசனையை பிரிடோ நிறுவனம் கிரான் அமைப்பிடம் முன்வைத்தது. (வ)



ஜனாதிபதியின் பிறந்தநாளை முன்னிட்டு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா தலைமையில் நேற்றுக் காலை மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையில் இரத்ததானமுகாம் நடைபெற்றது.

# புதூர்–வலையிறவு கிராம மக்கள் குடியிருப்பு வசதிகளின்றி அவதி

வெல்லாவெளி, நவ. 19

மட்டக்களப்பு மாநகர சபைக் குட்பட்ட புதூர் - வலையிறவு கிராம மக்கள் உரிய குடியிருப்பு வசதிகளின்றி பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

தமது குடியிருப்புகளில் கூரைகள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன எனவும் மழை காலம் ஆரம்பித்துள்ளமையால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என வும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாம் எதுவித அடிப்படை வசதிகளுமற்றுக் காணப்படும் நிலையில், இதுவரையில் எவராலும் இதற்கான மாற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லையென அந்த மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (வ)

# மஹிந்தவின் பிறந்ததினத்தை ஒட்டி வீடுகள் கையளிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு சமூர்த்தி திரிய பியஸ வேலைத்திட்டத்தின் கீழ் ஓட்டமாவடிப் பிரதேச செயலக பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் நேற்று முன்தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

சமூர்த்தி திரிய பியஸ வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 4 வீடுகளும், சமூர்த்தி வீடமைப்பு சீட்டிழுப்பின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு வீடுகளுமாக மொத்தம் ஆறு வீடுகள் இதன்போது மக்களிடம் கையளிக்கப்பட்டன. சமூர்த்தி மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.இஸ்ஹாக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஓட்டமாவடிப் பிரதேச செயலாளர் எம்.சீ.எம்.அன்சார், ஓட்டமாவடி பிரதேச சபைத் தவிசாளர் கே.பி.எஸ்.ஹமீட், பிரதேச சபை உறுப்பினர்கள், சமூர்த்தி வலய முகாமையாளர் எம்.எஸ்.அப்துல் ஹை, சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# அம்பாறையில் 3 கடை உடைக்கப்பட்டு திருட்டு

அம்பாறை நகரப்பகுதியில் இரண்டு மதுபானசாலைகள் உட்பட மூன்று கடைகள் கடந்த புதன்கிழமை நள்ளிரவு உடைக்கப்பட்டு ஒரு இலட்சத்து 55 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக அம்பாறை நகரப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

கல்முனை பிரதான வீதியில் உள்ள மதுபானசாலைகள் இரண்டிலும் பலசரக்குக் கடை ஒன்றிலும் உரிமையாளர்கள் வழமை போல் பூட்டிவிட்டுச் சென்றதாகவும் நேற்றுமுன்தினம் காலை வந்து பார்த்தபோது கதவுகள் உடைக்கப்பட்டு மதுபானசாலையொன்றில் வைக்கப்பட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் பலசரக்குக் கடையில் இருந்த 5 ஆயிரம் ரூபாவும் திருடப்பட்டிருந்தன என்று முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளன-என்றனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சாடியில் கஞ்சா: வளர்த்தவர் கைது

பதுளை, நவ.19

பதுளை புவக்கொடமுல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் பூஞ்சாடிக்குள் மூன்று கஞ்சா செடிகளை வளர்த்திருந்தார் என்ற சந்தேகத்தின்பேரில் நபரொருவரை பதுளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுமார் மூன்றரை அடி உயரம் வளர்ந்திருந்த இந்த கஞ்சா செடிகளை பூக்களுக்கு மத்தியில் இவர் இரகசியமாக வளர்த்து வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பதுளை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையிலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பதுளை பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

(வ)

# மண்முனை இயந்திரப் பாதை சேதம் மக்கள் பயணிப்பதில் சிரமம்

மட்டக்களப்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் நிருவகிக்கப்பட்டு வரும் மண்முனை ஆற்றைக் கடப்பதற்கான இயந்திரப் பாதைகளில் ஒன்று கடந்த ஒரு மாதகாலமாகப் பழுதடைந்துள்ளமையால் அந்த ஆற்றின் ஊடாகப் பயணிக்கும் பெருமளவான பயணிகள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

இரண்டு இயந்திரப் பாதைகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிலையில் ஒரு பாதையின் அடிப்பகுதியில் துவாரம் ஏற்பட்டதால் மறுகரையில் நீர் ஏறிய நிலையில் உள்ளது.



இதனால் ஒருபாதையையே போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. காலை, பகல், மாலை உள்ளிட்ட அனைத்து வேளைகளிலும் நெரிசல் ஏற்படுகிறது. அத்துடன் பெருந்திரளானோர் பல மணிநேரம் காத்து நின்று பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படுகிறது.

மண்முனையில் இருந்து படுவான்கரையின் கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு, தாந்தாமலை, உள்ளிட்ட பல இடங்களுக்கும் செல்லும் அரச உத்தியோகத்தர்கள், வங்கி ஊழியர்கள், ஆசிரியர்கள் என்று பெருந் எண்ணிக்கையானோர் இந்தப் பாதைப் பிரச்சினையினால் பாதிக்கப் படுவதுடன், மக்களும் தமது பயணங்களைச் சரியானமுறையில் மேற்கொள்ள முடியாத நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர். (வ)

# பாடசாலை அனுமதியில் 30 லட்சம் ரூ.மோசடி முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் கைது

கண்டி, நவ.19

கண்டி மற்றும் நீர்கொழும்பு பகுதிகளில் அமைந்துள்ள பிரபல பாடசாலைகளில் மாணவர்களுக்கு அனுமதி பெற்றுத் தருவதாகக் கூறி பொதுமக்களிடமிருந்து சுமார் முப்பது லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்தார் எனக் கூறப்படும் முன் னாள் பொலிஸ் அலுவலர் ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நபருக்கு உதவியளித்தனர் எனத் தெரிவிக்கப்படும் பெண்கள் இரு வரும் மத்திய மாகாண பொலிஸ் நடவடிக்கைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் கடற்படையின் முன்னாள் உத்தியோகத்தரின் மனைவி என்றும், மற்றையவர் விசேட அதி ரடிப் படை சார்ஜண்ட்டின் மனைவி என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விரு பெண்களும் மேற்படி மோசடி விவகாரத்தில் நேரடியாக ஈடுபட்டனர் என்றும் பொலிஸார் கூறினர்.

வீரவில பகுதியைச் சேர்ந்த பிரதான சந்தேக நபர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தபோது வேலையை விட்டு இடை விலகிச் சென்றவர் என்று விசாரணையில் தெரியவந்தது.

இந்தச் சந்தேகநபருக்கு எதிராகப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும், இவை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இச்சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டபோது அவரிடமிருந்து சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ளன. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள வர்த்தகர்கள் நலனைப் பாதுகாப்பதில் எதிர்க்கட்சிகளுக்கு சர்வதேச எம்.பிக்கள் ஆதரவு

## உறுதி வழங்கினர் என்கிறார் ரணில்

கொழும்பு, நவ. 19

சிங்கள வர்த்தகர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் எதிர்க் கட்சியினருக்கு ஆதரவு வழங்க சர்வதேச ஜனநாயக ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கம் ஆகியன உறுதியளித்துள்ளன என்று நேற்றுமுன்தினம் நாடு திரும்பிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நட்டத்தில் இயங்கும் கம்பனிகளை அரசுடைமையாக்கும் சட்டம் தொடர்பில் பிரதமர் டேவிட் கெமரோன் மற்றும் பொதுநலவாய தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர் - என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

1977 இற்கு முந்தைய அரசு, இலங்கை வர்த்தகர்களின் சொத்துகளை தேசிய



மயப்படுத்தியிருக்காவிட்டால் அவர்கள் உலகில் முன்னணித் தொழிலதிபர்களாகியிருப்பர் எனவும் ரணில் தெரிவித்தார்.

எனவே, தயாகமகே, ஹரி ஜயவர்தன உட்பட உள்ளூர் வர்த்தகர்களின் நலன்களைப் பாதுகாப்பது அவசியம் என்றும் ரணில் விக்கிரமசிங்க கூறினார். (வ)

# அவிசாவளை டிப்போவுக்குள் பதுங்கியிருந்த 8 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட ஒருவர் கைது

கொழும்பு, நவ. 19

அவிசாவளை பொலிஸ் வலயத்தில் நடந்த பல்வேறு களவு, கொள்ளை, மோசடி ஆகியவை தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் எட்டு பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்த சந்தேகநபரொருவர் அவிசாவளை பஸ் டிப்போவுக்குள் பதுங்கிருந்தபோது கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சமயம் இவரிடம் கைக்குண்டு ஒன்று இருந்ததாகவும், தீவிர விசாரணைகளின் பின்னர் இவர் திருடியிருந்த நகைகள், மடிகணினி உட்பட பல பொருள்கள் மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவிசாவளை பிராந்தியத்தில் இவரைப் பற்றிய பீதி மக்களிடையே நிலவி வந்தது எனவும், அதற்காக விசேடமாக நியமிக்கப்பட்ட பொலிஸ் குழு தீவிர தேடுதலுக்குப் பின்னர் இவரைக் கைது செய்தது எனவும் தெரியவருகின்றது.

சீத்தாவக்கபுர பொலிஸ் அத்தியட்சகர் அத்துல வீரசிங்கவின் பணிப்பின் கீழ் அவிசாவளை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி அஷோக்க குமார தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன. (வ-04)

# ஆஸியில் தற்கொலை செய்த இளைஞனை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை

இலங்கையைச் சேர்ந்த 26 வயதான தயாரட்ன ஜயசேகர எனும் இளைஞன் ஆஸ்திரேலியாவின் சிட்னியிலுள்ள விலாவூட் குடிவரவுத் தடுப்பு முகாமில் ஒக்ரோபர் 26ஆம் திகதி தற்கொலை தற்கொலை செய்த இவரை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை அவரை அடையாளம் காட்ட யாரும் முன்வரவில்லை. அத்துடன் இவர் தொடர்பிலான விவரங்களும் தெரியவில்லை.

குறித்த நபர் தான் தமிழர் எனக் கூறிக்கொண்டு சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவிற்குள் நுழைந்து அகதி விசா கோரியவர்எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தொடர்பான தகவல் அல்லது ஜயசேகரவின் குடும்பத்தவர்கள் குறித்த தகவல் தெரிந்தவர்கள் இலங்கை வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் பிரிவுடன் தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமோ தொடர்பு கொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர்.

இவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் -

கொன்சியூலர் பிரிவு, வெளிவிவகார அமைச்சு, இல.14, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்த, கொழும்பு - 1 என்ற முகவரி யுடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# பாதாள குழுவிலுள்ள ராணுவத்தினர் 500 பேரை கைது செய்ய நடவடிக்கை

பாதாள உலகக் குழுக்களில் அங்கம் வகிக்கும் 500 ராணுவ உத்தியோகத்தர்களைக் கைது செய்ய விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் ராணுவத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதில் சுமார் 500 இற்கும் அதிகமான படையினர் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுக்களில் அங்கம் வகிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

கொலை, கொள்ளை உள்ளிட்ட பெரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 25 பேர் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்பு ஆராச்சி தெரிவித்துள்ளார்.

தப்பிச் சென்றுள்ள 60,000 படைவீரர்களில் 55000 பேரை சட்ட ரீதியாக இராணுவ சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (வ)

# மரண அறிவித்தல்



**மு.க.கனகரெத்தினம்** (நயினாதீவு)

(முன்னாள் உரிமையாளர், தேவா ஸ்ரோர்ஸ் கொழும்பு, R.A பெர்னாண்டோ கொழும்பு, சோபிகா ஹோட்டல், யாழ்ப்பாணம்.)

நயினாதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது கந்தர்மடத்தில் வசித்து வந்தவருமாகிய மு.க.கனகரெத்தினம் 16.11.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - சின்னம்மா தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - ராமசிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பாலாம்பிகையின் அன்புக் கணவரும் கேசவராணி, சித்தானந்தன், (தேவா ஸ்ரோர்ஸ், கொழும்பு), பரமானந்தன் (கனடா), தேவானந்தன் (இளைப்பாறிய கணக்காளர், தேசிய வீடமைப்பு திணைக்களம்), சிவானந்தன் ( லண்டன்), தயானந்தன் (லண்டன்), கிருபானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவானந்தா (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் ) மற்றும் வாசுகி (இந்தியா), ஜெயசிறி (இளைப் பாறிய ஆசிரியை -கனடா), வாசுகி (இளைப்பாறிய லிகிதர், தேசிய வீடமைப்புத் திணைக்களம்), நாளாயினி (லண்டன்), றஜனி( லண்டன்), முகுந்தினி (கனடா) ஆகியோரின் மாமனாரும். காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, சிவகாமி, சங்கரப்பிள்ளை, தையல் அம்மை, பொன்னம்பலம் (அஜந்தா ஹோட்டல் கொழும்பு) ஆகியோரின் சகோதரரும். காலஞ்சென்றவர்களான சின்னையா, விசுவலிங்கம் மற்றும் சவுந்தரம், காலஞ்சென்றவர்களான சின்னையா, கமலாம்பிகை, பாலசுந்தரம், சுந்தரமூர்த்தி பொன்னம்பலம் (இளைப்பாறிய அதிபர்) மற்றும் பவானி, அன்னபூரணி (கனடா) ஆகியோரின் மைத்துனரும்,காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளை மற்றும் விசாலாட்சி, காலஞ்சென்ற நாகமுத்து மற்றும் நாகரெத்தினம், காலஞ்சென்றவர்களான குழந்தைவேல், தங்கேஸ்வரன் ஆகியோரின் சகலனும், ராதிகா, ராஜீவ், தார்மிகா, ஆதன், காலஞ்சென்ற சோபியா மற்றும் சலக்ஷனா, சுகன்யா, துஷ்யா, மிராச், சுரேன், மிதிலன், துளசிகா, சர்சியா, அன்புஷா, மகேன், தனுஷா , விஷ்ணுஷா, துர்க்கா, ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*198/10, திருவள்ளுவர் சாலை,*
*அரசடி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
பிள்ளைகள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

(10542) (3,6,7)

# நீங்கா நினைவில் 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

*மண் மகிழ : 19.01.1977*
*விண் நெகிழ : 19.10.2011*



திருமதி
**கோகிலதாஸ் ஜிமாலினி சகாயறூபி (விஜி)**

விஜி....
இப்படித்தான் அமையும் உன் வாழ்வென
அப்படியே வாழ்ந்து வந்தீர் போலும்...
ஆலம் விழுதுகள் போல் உறவு ஆயிரம்
வந்துமென்ன வேரென நீ இருந்தாய்
அதில் நாம் வீழ்ந்து விடாதிருந்தோம்.
ஆருயிர் கணவரிடம் அன்பைச் சொரிந்து
மழலைக் குழந்தைகளிடம் கனிவு காட்டி
பெற்றோர் அயலவர் உறவுகள் மீது
பாசம் காட்டி அன்பைச் சொரிந்து
உன் சிரித்த முகத்தினை ஒவ்வொரு
நாளும் கண்ட எம் உள்ளங்கள் இன்று கனக்கிறது.
உன் வரவினை எதிர்பார்த்து காத்திருந்த எமக்கு
கடைசியில் கேட்டது உன் இறுதி மூச்சு அம்மா
எம் வேதனையை யார் அறிவார்?
உன்னைப் போல் தெய்வம் ஒன்றே அறியும்

விஜி....
ஒவ்வொரு நாளும் உன் சிரித்த முகத்தினை
பார்த்து பார்த்து பூத்த எம் கண்கள் இன்று
இருளாகி போய்விட்டதம்மா. இனி உன் சிரித்த
முகத்தினை நாம் எப்போது காண்போம்?
இப்படித்தான் உன் வாழ்வென.
எம்மை விட்டு பிரிந்து தூரம் சென்றாயோ....
அறிவுக்கு எட்டியது.....
மனதுக்கு புரிய மறுக்கிறது....
ஆண்டவருக்குள் அமைதியாகின்றோம்.

இவரின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் கூறியோருக்கும். வெளிநாடு,உள்நாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும், கடித மூலம் எமக்கு ஆறுதல் கூறியோருக்கும், துண்டுப் பிரசுரங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதி வரை எமது துன்பத்தில துணை நின்று,உதவிகள் புரிந்த அனைவரையும் நன்றியுடன் நினைக்கின்றோம். இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (19.11.2011) சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து எமதில்லத்தில் இடம்பெறும் மதிய போசன விருந்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: கணவர் J.விஜயன்
அந்தோனியார் வீதி,
நெல்லியடி,கரவெட்டி.

(10522) (1,6,7)

உன் பிரிவால் துயருறும் :
கணவர்,பிள்ளைகள், அம்மா, அப்பா, சகோதர சகோதரிகள், மாமி, மைத்துனிமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா பெண்ணாக இருந்தும்கூட தாய்மாரைக் கண்ணீர் சிந்த வைக்கிறார்

## எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்த் கண்டனம்

சென்னை, நவ. 19

முதல்வர் ஜெயலலிதா ஒரு பெண்ணாக இருந்துகொண்டு தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்குப் பதிலாக கண்ணீர் சிந்த வைத்துள்ளாரே- என்று தே.மு.தி.க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான விஜயகாந்த் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

மக்களின் அன்றாட செலவினங்களான பால் மற்றும் பஸ் கட்டண உயர்வை அ.தி.மு.க. அரசு வரலாறு காணாத வகையில் உயர்த்தி அறிவித்திருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

அ.தி.மு.க. அரசை தலைமை தாங்கும் முதலமைச்சரும் ஒரு பெண். அவர் தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்குப் பதில், பால் விலையை ஒரு லீற்றருக்கு 6.25 ரூபா உயர்த்தி இருப்பது வேதனை அளிக்கிறது.

பால் உற்பத்தியாளர்களுக்குக் கூடுதல் விலை கொடுப்பதை தே.மு.தி.க. ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அதே நேரத்தில் லீற்றருக்கு ரூபா 2 உயர்த்தி கொடுத்துவிட்டு, மக்களிடம்



இருந்து ரூபா 6.25 வசூலித்துக்கொள்வது என்ன நியாயம்? பால் கொள்முதலுக்கு உயர்த்தி வழங்கக்கூடிய 2 ரூபாவை அரசு மானியமாக வழங்கலாம்.

நடுத்தர மற்றும் ஏழை; எளிய, பாமர மக்கள் போக்குவரத்திற்கு அரச பஸ்களைத் தான் நம்பியிருக்கிறார்கள். சுமார் 75 சதவீதம் கட்டண உயர்வை அறிவித்திருப்பது அதிர்ச்சி அளிக்கக்கூடியது ஆகும்.

மின்வெட்டு காரணமாக தொழிற்சாலைகள் எல்லாம் முடங்கிக்கிடக்கின்ற வேளையில் மின்சார ஆணையத்திற்கு மின் கட்டணத்தை உயர்த்த அரசு பரிந்துரைத்து இருப்பதும் கண்டிக்கத்தக்கது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூடங்குளம் அணு உலை பாதுகாப்பானது

### டாக்டர் முத்துநாயகர்

திருநெல்வேலி, நவ.19

கூடங்குளம் அணுமின் உலை உலகிலேயே மிகவும் பாதுகாப்பானது என்று மத்திய குழுத் தலைவர் டாக்டர் முத்துநாயகர் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் நிருபர்களிடம் பேசிய அவர், கூடங்குளம் அணுமின் உலை நவீன வி.வி.இ.ஆர்., 1000 பிரிவைச் சேர்ந்தது. இது போன்று உலகம் முழுவதிலும் 20 அணு உலைகள் கடந்த 20 ஆண்டுகளாக எவ்வித பிரச்சினையும் இன்றி செயற்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார்.

(வ)

## சுஷ்மாவுக்கு பிடியாணை

மத்திய பிரதேசத்தை சேர்ந்த துவாரகா ஜாட் என்பவர் சுஷ்மா சுவராஜுக்கு நடந்த பாராட்டு விழாவில் தேசியக் கொடியை அவமதித்ததான வழக்கில் சுஷ்மா சுவராஜுக்கு பிடியாணை பிறப்பித்து நீதிபதி உத்தரவிட்டார்.

சுஷ்மா சுவராஜ், மத்திய பிரதேச முதல்வர் சவுகான், அப்போதைய மாவட்டச் செயலர், வட்டாரத் தலைவர் ஆகியோர் மீது தேசிய அவமதிப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு நீதிவான் ஜாபர் இக்பால் முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது சுஷ்மா சுவராஜ், முதலமைச்சார் சவுகான், கலெக்டர், வட்டாரத் தலைவர் ஆகியோருக்கு எதிராக பிணையில் வர முடியாத ஆணை பிறப்பித்து அதிரடி உத்தரவு பிறப்பித்தார்.



நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரையொட்டி டில்லியில் நடந்த அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்ட சபாநாயகர் மீராகுமாரை கட்டியணைத்து வரவேற்கும் லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ்.

## மம்தா முன்னிலையில் நக்ஸல் தம்பதி சரண்

பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட நக்ஸல் தம்பதியினர், மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தாவின் அழைப்பை ஏற்று பொலிஸாரிடம் நேற்று வியாழக்கிழமை சரணடைந்தனர்.

தேடப்பட்ட முக்கிய மாவோயிஸ்டுகளான ஜாகிரி பாஸ்கி மற்றும் அவரது கணவர் ராஜாராம் சொரென் ஆகியோர் நான்கு வயது மகனுடன் தலைமைச் செயலகத்தில் பொலிஸ் உயர் அதிகாரி ஓ.பி.குப்தா முன்னிலையில் சரணடைந்தனர். முதல்வர் மம்தாவின் அழைப்பை ஏற்று நாங்கள் சரணடைந்தோம் என்று அந்தத் தம்பதியினர் தெரிவித்தனர். மேற்கு வங்கத்தில் நக்ஸலைட்டுகள் அம்மாநில சட்டப்பேரவையில் சரணடைவது இதுதான் முதன் முறையாகும். பொலிஸார் அவர்களை மம்தாவின் முன் நிறுத்தினர்.

## கூடங்குளம் 2ஆம் கட்ட பேச்சில் திருப்தியில்லை

### மாநிலக்குழு தெரிவிப்பு

கூடங்குளம், நவ.19

கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக மத்தியக் குழுவுடன் 2ஆம் கட்டமாக நடத்திய பேச்சில் திருப்தியில்லை என்று மாநிலக் குழுவில் உள்ள பிரதிநிதிகள் இருவர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள அணுமின் நிலையத்தை மூடக் கோரி அந்தப் பகுதி மக்கள் கடந்த 3 மாதங்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அணுமின் நிலையப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. கூடங்குளம் அணுமின் நிலையப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் தொடர்பாக பொது மக்களின் அச்சத்தைப் போக்க நாகர் கோவில் நூருல் இஸ்லாம் பல்கலைக்கழகத் துணை வேந்தர் முத்துநாயகம் தலைமையில் அணுசக்தி, சுற்றுச்சூழல், கதிரியக்க நிபுணர்கள் அடங்கிய 15 பேர் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்தது.

இந்தக் குழுவுடன் பேச்சு நடத்த நெல்லை மாவட்ட செயலர் செல்வராஜ், எஸ்.பி. விஜயேந்திர பிதாரி, போராட்டக் குழு சார்பில் புஷ்பராயன், ஜேசுராஜ், யாக்கோபுரம் தங்கராஜ் ஆகியோர் கொண்ட குழுவை மாநில அரசும் அமைத்தது. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் நேற்று முன்தினம் மத்திய குழுவினர் 3ஆவது நாளாக ஆய்வு மேற்கொண்டனர். இந்த நிலையில் மத்திய, மாநிலக் குழுவினர் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று 2ஆம் கட்டமாக பேச்சு நடத்தினர்.

இந்த பேச்சின்போது தாங்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு மத்தியக் குழுவினர் சரிவர பதிலளிக்கவில்லை என மாநிலக் குழுவில் இடம்பெற்றுள்ள பிரதிநிதிகள் இருவர் தெரிவித்தனர்.

# ஒபாமாவுடன் மன்மோகன் சிங் சந்திப்பு அணு ஒப்பந்தம் குறித்து ஆலோசனை

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை இந்தோனேசியாவின் பாலித் தீவில் சந்தித்துப் பேசினார். அப்போது அணுசக்தி ஒப்பந்தத்தை அமுல்படுத்துவது குறித்து இருவரும் விவாதித்தனர்.

இந்தோனேசியாவில் உள்ள பாலியில் இந்தியா, ஆசியான் மாநாடு, கிழக்காசிய நாடுகள் மாநாடு நடந்து வருகின்றன. இந்த மாநாடுகளில் பங்கேற்கச் சென்றுள்ள பிரதமர் மன்மோகன் சிங் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வை நேற்றுக்காலை சந்தித்துப் பேசினார். சுமார் ஒரு மணி நேரம் அவர்கள் பல்வேறு விடயங்கள் குறித்துப் பேசினார்கள். அணு ஒப்பந்தம், அமெரிக்கா அளித்த கல்வி, பொருளாதார ஒத்துழைப்பு, பேரிடர் மேலாண்மை, கடல் சார் பாதுகாப்பு, தீவிரவாதம் உட்பட பல விடயங்களை ஒபாமாவும் மன்மோகன் சிங்



கும் பகிர்ந்து கொண்டனர்.

கூட்டம் முடிந்ததும் பிரதமர் மன்மோகன் சிங் பேட்டியளித்த போது கூறுகையில்:

கடந்த ஓராண்டில் நாம் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றத்தை உண்டாக்கியுள்ளோம். முதலீடு, வர்த்தகம், உயர் கல்வி, அணுசக்தி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் இரு நாடுகளுக்கிடையே உறவு வலுப்பெற்றுள்ளது. நாங்கள் ஒருங்கிணைந்து செயலாற்றுவதில் எங்களுக்குள் எந்தச் சிக்கலும் இல்லை என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பயணங்கள் மூலம் நாம் பல வழிகளில் வலுப்பெற்றுள்ளோம்.

அணு ஒப்பந்தமாகட்டும், மனிதாபிமான அடிப்படையிலான நிவாரண உதவிகளாகட்டும், கடல் சார் பாதுகாப்பு விடயங்களாகட்டும், இப்படி எல்லா விடயங்களும் எங்களை ஒருங்கிணைத்துள்ளன.

இதன் மூலம் போரில் இருந்து உலகை விடுவித்து சாதனை படைத்துள்ளோம். அமெரிக்கா உட்பட எல்லா நாடுகளுடன் நல்லுறவு தொடரும்.

இந்தியாவின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு மற்ற நாடுகளின் கோரிக்கைகள் ஆய்வு செய்யப்படும். சட்டத்துக்கு உட்பட்டே அந்நிய நாடுகளின் குறைகள் களையப்படும். அமெரிக்க நிறுவனங்களின் [illegible] என்றார் மன்மோகன் சிங்.

## காவிரி நதிக்கரை விநாயகருக்கு ஆடு பூசை செய்த அதிசயம்

ஈரோடு,நவ.19



ஈரோடு காவிரிக் கரையில் உள்ள மரத்தடி விநாயகர் கோயிலில், நேற்று முன்தினம் ஆடு செய்த பூசையால், பரபரப்பு ஏற்பட்டது. கார்த்திகை மாதம் முதல் நாளான நேற்று முந்தி னம் அதிகாலை தொடக்கம் ஈரோடு, கருங்கல் பாளையம் காவிரியாற்றில், ஏராளமான ஐயப்ப பக்தர்கள் குவிந்தனர். காவிரியில் நீராடி, ஆற்றங்கரையில் உள்ள ஐயப்பன் கோவிலில் மாலையணிந்து, விரதத்தை ஆரம்பித்தனர்.

காவிரி ஆற்றங்கரையில் உள்ள மரத்தடியில், விநாயகர் மற்றும் நாகர் சிலைகள் ஏராளமாக உள்ளன. பக்தர்கள் சிலர், தங்களது பழைய துளசி மணி மாலையை இங்கு வைத்து விட்டு, புதிய மாலையை அணிந்து கொண்டனர். விரதத்தை ஆரம்பித்த பக்தர்கள் சிலர், இந்த விநாயகரை வணங்கிச் சென்றனர். அந்தப் பகுதியில் நின்றிருந்த ஆட்டுக் கிடாய், இதையே பார்த்துக் கொண்டிருந்தது. திடீரென விநாயகர் சிலை அமைந்துள்ள மேடை மீது ஏறியது. மேடையின் மீது கிடந்த துளசி மணி மாலைகள் ஒவ்வொன்றாகக் கவ்வி எடுத்து, அருகே இருந்த நாகர் சிலைகள் மீது அணிவித்தது. அவை, சிலைகளில் இருந்து நழுவி கீழே விழுந்தன.

அதன் பின், அருகிலிருந்த துளசி இதழ்களைக் கௌவி எடுத்து, அவற்றையும் சிலை மீது போட்டது. இதைப் பார்த்த பக்தர்கள் சிலர், விநாயகர் கோயில் அருகே, ஆர்வமாக ஓடி வந்தனர். மிரண்டு போன ஆடு, மேடையில் இருந்து கீழிறங்கிச் சென்று விட்டது என்று கூறுப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA,SRILANKA.

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

### VAVUNIYA CAMPUS OF THE UNIVERSITY OF JAFFNA

***FACULTY OF BUSINESS STUDIES***

***Department of Finance and Accountancy***

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary)

***Department of Economics and Management***

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary)

**Note:**

1. Preference will be given to those who have Special Degree in Economics with Econometrics courses.
2. Preference will be given to those who have Special Degree in Management with specialization in Marketing.

***FACULTY OF APPLIED SCIENCE***

Senior Professor/Professor in Information and Communication Technology

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Information and Communication Technology

### SALARY AND OTHER BENEFITS

| *Post* | *Salary scale* |
|---|---|
| Senior Professor | Rs.57,755 – 11x900 – 67,655/- p.m. |
| Professor | Rs.50,905 – 13x850 – 61,955/- p.m. |
| Senior Lecturer Grade I | Rs. 42,650 – 7x800 – 48,250/-p.m. |
| Senior Lecturer Grade II | Rs. 37,650 – 11x700 – 45,350/-p.m. |
| Lecturer (Probationary) | Rs. 26,900 – 10x585 – 32,750/-p.m. |

**Note:**

In addition to the above salary, the following allowances will also be paid:

(i) Academic allowance
(ii) Research allowance 25% of the basic salary
(iii) Special allowance 5% of the basic salary
(iv) Cost of living allowance of Rs. 5,850/- p.m.

**Statutory benefits:**

(i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr. II and above.
(ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
(iii) Gratuity payments
(iv) Employees' Trust Fund benefits.
(v) Free Medical Services.

**Closing date:**

**Post of Senior Professor/Professor - 17.02.2012**
**Other posts - 31.12.2011**

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the Vice-Chancellor with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and scheme of recruitment for each position may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the downloaded application forms through the University website should be attached a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna.

Those who wish to apply for more than one post should apply in separate forms.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA** (C/8057)(1-6)

## ஆலய தீர்த்தக் கேணியில் மூழ்கி மாணவர்கள் இருவர் பலி

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுநகரில் விநாயகர் ஆலய தீர்த்தக் கேணியில் குளிக்கச் சென்ற இரு மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். அத்துடன் மேலும் ஒருவர் காப்பாற்றப்பட்ட நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் மட்டக்களப்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயயத்தில் நிகழ்ந்துள்ளது.

சம்பவத்தில் விஜயதுரை சுதர்சன்(14), சிவானந்தராசா ருபேசன் (9) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். ரவிக்குமார் சுஜன் (14) சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மரணமானவர்களது சடலங்கள் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் பிரேத பரிசோதனை, மரண விசாரணைகளுக்காக வைக்கப்பட்டுள்ளன. (10)

## நாய்களுக்கு கருத்தடை

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடைச் சத்திர சிகிச்சை கடந்த 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைமுதல் வழங்கப்பட்டு வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை நாவாந்துறைப் பிரதேச வளர்ப்பு நாய்களுக்கு ஆறுகால் மடம் ச.ச. நிலையம், கண்ணாபுரம் ச.ச. நிலையம், சென். நீக்கிலஸ் ச.ச. நிலையம் ஆகிய இடங்களிலும், நாளை ஞாயிற்றுக்கிழமை அரியாலைப் பிரதேச வளர்ப்பு நாய்களுக்கு புங்கன்குளம் ச.ச. நிலையம், காந்தி ச.ச. நிலையம் ஆகிய இடங்களிலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை கொழும்புத்துறைப் பிரதேச வளர்ப்பு நாய்களுக்கு சுவாமியார் வீதி சிகிச்சை நிலையம், பாசையூர் சிகிச்சை நிலையம் ஆகிய இடங்களிலும் காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை, கருத்தடை சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

# மரண அறிவித்தல்கள்

## ஞானப்பிரகாசம் சந்தியாப்பிள்ளை (காந்தி)



(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர், AVANT -Gard(Security Service)

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நவாலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் சந்தியாப்பிள்ளை (காந்தி) நேற்று (18.11.2011) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்.

அன்னார் செல்வராசாத்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு.திருமதி ஞானப்பிரகாசம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், திரு.திருமதி நாகையா தம்பதியரின் மூத்த மருமகனும், காபிரியேல் அருளம்மா , ஆரோக்கியநாதன் (கனடா) ஆகியோரின் சகோதரரும், அன்ட்றூ (கொழும்பு), அனிற்றா( ஜேர்மனி), பெனிற்றா (திருகோணமலை), பசில்( கொழும்பு), சாள்ஸ் (கொழும்பு), டிலான்(டேடன்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வக்சலா, மாரியோ, நிஜாம்டீன், செல்வி, மேசி, துஸ்யந்தி (ஆசிரியை யா/பண்ணாகம் மெய்கண்டான், ம.வி) ஆகியோரின் பாசமிகு மாமனும் இவாஞ்சலின், ஜக்சன், சர்மிலா, அபிக்கா, Floriyan, டில்ஷான், ஷாமிலா, அபிஷேக் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (2011.11.19) சனிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நவாலி திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவாலி கிழக்கு,*
*மானிப்பாய்.* (10601)(3,6,9)

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

## அருணாசலம் வசந்தராஜன்

உருத்திரபுரம், சிவநகரைப் பிறப்பிடமாகவும் டென் மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் வசந்தராஜன் 08.11.2011 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான அருணாசலம்- கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் ரஞ்சனியின் பாசமிகு கணவரும், சிந்துஜா, சிந்துஜன், சஞ்சை ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜமுனா காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் வனஜா, நந்தகுமார், அஞ்சனாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (19.11.2011) சனிக்கிழமை டென்மார்க்கில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மா டுவில்,
சாவகச்சேரி. (10588)(6-7-8)

தகவல்:
பெரிய தாயாரும் பிள்ளைகளும்
சிறிய தாயாரும் பிள்ளைகளும்
மாமன்மாரும்.

## கந்தையா இராசையா (K.R.S. ஸ்தாபகர்)



துரை வீதி, கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் விநாயகர் அரிசி ஆலையின் உரிமையாளரும், K.R.S. நிறுவனத்தின் ஸ்தாபகரும், இல.35/2, எலியாஸ் வீதி, கொழும்பு-5 ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா இராசையா 16.11.2011 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா -செல்லாச்சி தம்பதியரின் அருமை மகனும், இளையதம்பி- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், பூமணி, சிவலோகநாதன் (Rasan Rice Mill, K.R.S. Food Products, K.R.Sivaloganathan & Co.), சச்சிதானந்தம் (கனடா), இராணி, இலக்சுமிதேவி, கையிலாயபிள்ளை (சிறீ-International Marketing Center, Hitech Marketing, K.R.S. Trades Center), சிவஞானசுந்தரம் (சிவா-International Marketing Center, K.R.Sivaloganathan & Co.), விக்கினேஸ்வரன் (லண்டன்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சபா, சண்முகேஸ்வரன் (இளைப்பாறிய வெளிநாட்டு தொலைத்தொடர்பு அத்தியட்சகர்), மற்றும் Dr.மகாதேவன் (யாழ். போதனா வைத்தியசாலை), தேவராஜா (பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்), இராஜதேவி, ஹேமலதா (கனடா), பாமதி, அமுதா, சசிந்தா (லண்டன்), கலாநிதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2011) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் (இல.35/2, எலியாஸ் வீதி, கொழும்பு-5) காலை 8 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் தகனக்கிரியைக்காக பூதவுடல் மு.ப. 10 மணியளவில் பொறளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.35/2, எலியாஸ் வீதி,*
*கொழும்பு-5.* (C/5846)(6-5)

*தகவல்: சிறீ*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானிய அணு ஆயுதக் கட்டமைப்பை தகர்த்து அழிக்க அமெரிக்கா முஸ்தீபு

தெஹ்ரான், நவ.19

ஈரானின் அணு ஆயுதக் கட்டமைப்புகள் உள்ளிட்ட முக்கிய இடங்களைத் தகர்ப்பதற்காக அமெரிக்கா பங்கர்களை அழிக்கும் குண்டுகளை வாங்க ஆயத்தப்படுத்தி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மிக அபாயகரமான இந்தக் குண்டுகள் அதல பாதாளத்தில் அமைக்கப்பட்டுள்ள, மிகுந்த பாதுகாப்புடன் கூடிய, எந்த வகையான ரகசிய இடங்களையும் கூடத் தரைமட்டமாக்கி விடும் தன்மை படைத்தவை. இந்த வகைக் குண்டுகளை அமெரிக்கா தனது அதி நவீன ஆ-2 குண்டு வீச்சு விமானத்தில் பொருத்தக் கூடிய வகையில் ஆயத்தப் படுத்திவருவதாகவும் கூறப்படுகின்றது.

ஆரம்பத்தில் இஸ்ரேல்தான் இந்த வேலைகளைச் செய்ய உள்ளதாகத் தகவல்கள் வெளியாகின. ஈரான் அணு ஆயுதத் திட்டங்களை ஆரம்பநிலையிலேயே அழித்துவிட இஸ்ரேல் திட்டமிட்டிருப்பதாகவும், தாக்குதலை நடத்தி ஈரானை நிலைகுலையச் செய்ய அது முயல்வதாகவும் தகவல்கள் கூறின.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ரஷ்யா , ஈரான் மீது யாராவது தாக்குதல் தொடுத்தால் கடும் விளைவுகள் ஏற்படும் என்று ரஷ்யா எச்சரித்திருந்தது. இந்த நிலையில்தான் அமெரிக்கா, பங்கர் அழிப்பு குண்டுகளை தயார் படுத்தும் தகவல் வெளியாகியுள்ளது. இந்தக் குண்டுகளை வாங்குவதற்காக போயிங் நிறுவனத்துடன் அமெரிக்க விமானப்படை ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதுகுறித்து பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி கூறுகையில், பங்கர்கள் அழிப்பு குண்டுகள் வாங்கப்படுவது உண்மைதான். ஆனால் எந்த நாட்டையும் குறி வைத்து அதை நாங்கள் வாங்கவில்லை. எங்களது திறமையை மேலும் வலுப்படுத்திக் கொள்ளவே இதை நாங்கள் செய்கிறோம். ஓர் எதிரியை அழிக்க, எதிரியின் ஆயுத பலத்தை அழிக்க இந்த வகைக் குண்டுகள் அவசியம். குறிப்பாக எதிரிகளை அழிக்க இந்த வகைக் குண்டுகள் நமக்குத் தேவை என்றார் அவர். (ந)

# இந்தியா, சீனா போன்ற வளரும் நாடுகள் எமது நாட்டின் மீது தாக்குதல் நடத்தலாம்

## அமெரிக்க பாதுகாப்புச் செயலர் எச்சரிக்கை

வாஷிங்டன்,நவ.19

இந்தியா, சீனா போன்ற வளரும் நாடுகள் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தலாம் என அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லீயோன் பென்னடா தெரிவித்துள்ளார்.

தனியார் நிறுவனம் நடத்திய பொது நிகழ்ச்சியில் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர், தொடர்ந்து பேசுகையில்:

சீனாவின் இராணுவ பலம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருவதுடன் தொலைவிலுள்ள இலக்குகளை விரைவில் தாக்கக் கூடிய ஏவுகணைகளும் உள்ளதாக கூறினார்.

வெளியுறவுச் செயலாளரின் இந்தக் கருத்தை அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவும் வழிமொழிந்துள்ளார்.

ஆனால் அதிபர் மற்றும் வெளியுறவுச் செயலாளரின் கருத்துக்கு பென்டகன் செய்தியாளர் மறுப்புத் தெரிவித்துள்ளார். இந்தியா மற்றும் சீன நாடுகளுக்கிடையே சமரச உறவு இதுவரை பாதுகாக்கப் படுகின்றன என்று கூறிய அவர், அப்படியிருக்கும் போது எப்படி போர் அபாயம் விடுக்கப்படும் எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்காவின் இந்தக் கருத்துக்கு சீனா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. ஆனால் இதுவரை இந்தியாவிடமிருந்து எந்த ஓர் எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை. உலக நாடுகளில் அமைதியை விரும்பும் இந்தியா மீதான அமெரிக்காவின் கருத்து சர்ச்சை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. (ந)

# குவைத்தில் போராட்டத்தை ஒடுக்க மன்னர் உத்தரவு

குவைத்தில் பிரதமர் ஷேக் நாசர் முகமதுவை ராஜினாமாச் செய்யக் கோரி நடத்தப்படும் போராட்டத்தை கடும் நடவடிக்கை மூலம் ஒடுக்க மன்னர் உத்தர விட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் போராட்டக்காரர்கள், எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே மன்னர் ஷேக் சபா அல் அகமத் அல் சபா ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து போராட்டத்தை ஒடுக்குமாறு உத்தர விட்டுள்ளார். (ந)



ஆசியன் எனப்படும் தென்கிழக்கு ஆசிய உச்சி மாநாடு இந்தோனேஷிய நாட்டின் பாலி மாகாணத்தில் தொடங்கியது. இதில் கலந்து கொள்ள வந்த தாய்லாந்துப் பிரதமர் யங்கிலி ஷினவந்தராவை (இடது), அந்நாட்டு அதிபர் சுசிலோபாங்க் யூதோயுன் வரவேற்றார்.

# ஆசிய, பசிபிக் பகுதிகளில் இராணுவத் தளங்கள் நீடிக்கும்

## ஒபாமா திட்டவட்டமாகக் கூறுகிறார்

ஆசிய, பசிபிக் பகுதிகளில் அமெரிக்க ராணுவத் தளங்கள் நீடிக்கும் என்று அதிபர் ஒபாமா நேற்று முன்தினம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

2 நாள் பயணமாக ஆஸ்திரேலியா சென்றிருந்த அமெரிக்க அதிபர் ஒபாமா ஆஸ்திரேலிய நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் பேசியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: பசிபிக் கடற்பகுதி யில் சக்திமிக்க படையாக அமெரிக்க ராணுவம் உள்ளது. அமெரிக்க பொருளாதார நிலையை முன் னேற்ற எவ்வளவு சிக்கன நடவடிக்கைகள் எடுக் கப்பட்டாலும் ஆசிய, பசிபிக் பகுதியில் அமெரிக்க ராணுவத் தளங்கள் நீடிக்கும். இங்கு தொடர்ந்து அமெரிக்கா ஆதிக்கம் இருக்கும். ஆஸ்திரேலிய வடக்கு கடல் பகுதியில் போர் விமானங்கள், கப்பல்களுடன் ராணுவத்தளம் அமைக்கப்படும். ஆசிய, பசிபிக் பாது காப்பை அமெரிக்கா எப்போதும் விட்டுக் கொடுக் காது. அதில் சந்தேகமே இல்லை என்றார். (ந)

# சூரிய குடும்பத்தில் வேற்றுக்கிரக வாசிகள்

## விஞ்ஞானிகள் தெரிவிப்பு



சூரிய குடும்பத்தில் வேற்றுக் கிரகவாசிகள் அலைந்து திரிவதாகவும், அவர்களை நெருங்கிப் பார்க்க முடியவில்லை என்றும் இந்திய வம்சாவழி விஞ்ஞானி உள்ளிட்ட சில விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த விஞ்ஞானிகள் மேலும் தெரிவிக்கையில்:

எங்களது ஆழமான விண்வெளி ஆராய்ச்சியில், இது நிரூபிக்கப்பட்டுள்ளது.நாசாவின் பயோனீர் மற்றும் வொயா ஜெர் விண்வெளி ஓடங்களைக் கொண்டு மிகவும் ஆழமாக ஆராய்ந்தால், இது புலப்படும் என்று கூறுகின்றனர்.

இவர்களின் இந்தக் கருத்தை ஒக்டா என்ற விண்வெளிக்கான அமைப்பு ஏற்றுக்கொண்டு, அதன் இணையத்தளத்திலும் வெளியிட்டுள்ளது.

வேற்றுக் கிரகவாசிகள் இருப்பதை உறுதிப்படுத்திய 'ரொக் எத்திக்ஸ் இன்ஸ்டியூட்' ஆராய்ச்சியாளர் ஜேக்கப் ஹக் மிஸ்ரா, புவி மற்றும் சுற்றுச்சூழல் சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர் ரவிக்குமார் ஆகியோர் கூறுகையில்;

வேற்றுக் கிரகவாசிகளின் விண்வெளி ஓடம், நமது சூரிய குடும்பத்தைச் சுற்றி வருவதைக் காண முடிகிறது.

ஆனால், அதன் புறப்பகு தியை நெருங்கிச் சென்று பார்க்க முடியவில்லை. இன்னும் ஆழமாகச் சென்று, நுணுக்கமான முறையில் ஆராய்ச்சி செய் தால், வேற்றுக் கிரகவாசிகளை நெருங் கிச் சென்று பார்க்க முடியும் என்று உறுதிப்படக் கூறியுள்ளனர். (ந)

# ஜப்பானில் அரிசியில் கதிரியக்க பாதிப்பு தடை விதிப்பது குறித்து அரசு ஆலோசனை

ஜப்பானில் கதிரியக்க பாதிப்பு அரிசியில் இருப்பதையடுத்து அதற்கு தடை விதிப்பது குறித்து அரசு ஆலோசித்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜப்பானில் புகுஷிமா அணு உலைக் கூடத்தில் ஏற்பட்ட விபத்தில் அணுக் கதிரியக்க கசிவு ஏற்பட்டது. இது அந்தப் பகுதிகளில் பரவிய நிலையில் புகுஷிமாவில் விவசாயப் பண்ணையில் விளைந்த அரிசியில் கதிரியக்கம், அபாயம் விளைவிக்கக் கூடிய அளவுக்குப் பரவி இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் விளைந்த அரிசியை வியாபாரம் செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டு உள்ளது. மேலும் ஏற்றுமதி செய்யவும் தடை விதிக்கலாமா என்பது குறித்து ஜப்பானிய அரசு ஆலோசனை நடத்தி வருகிறது. (ந)

# அமெ.- மெக்ஸிக்கோவை இணைக்கும் பெரிய சுரங்கப்பாதை கண்டுபிடிப்பு



மிகப்பெரிய போதைப் பொருள் கடத்தல் சுரங்கப் பாதை ஒன்று அமெரிக்கா - மெக்ஸிக்கோவுக்கு இடையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுரங்கத்திலிருந்து 17 தொன் போதைப்பொருள்களும் கைப்பற் றப்பட்டுள்ளன.

2500 அடி நீளமுடைய இந்த ரகசிய சுரங்கப் பாதை அமெரிக்காவின் சாண்டியோகா தொழிற் பூங்கா ஒன்றில் இருந்து மெக்ஸிக்கோவின் எல்லை நகரத்தை இணைத்திருந்ததாகக் கூறப்படுகின்றது. (ந)

# ஏ.ஆர்.ரஹ்மானுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது



துபாய்,நவ.19

சர்வதேச அளவில் ரசிகர்களின் உள்ளத்தைக் கவர்ந்துள்ள பிரபல திரைப்பட இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானின் திறமையைப் பாராட்டி' வாழ்நாள் சாதனையாளர் விருது 'வழங்க உள்ளதாக துபாய் சர்வதேச திரைப்பட விழாவின் தலைவர் அப்துல் ஹமீது ஜூமா தெரிவித்துள்ளார்.

துபாயில், எதிர்வரும் டிசெம்பர் 7 முதல் 14ஆம்திகதி வரை, சர்வதேச திரைப்பட விழா நடைபெற உள்ளது. அதன் போதே இந்த விருது வழங்கப் படவுள்ளது. ஏற்கனவே இந்த விருதை அமிதாப், சுபாஷ் கய், ஷாருக்கான் உள்ளிட்டோர் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழக வீரர்கள் விருது வழங்கிக் கௌரவிப்பு

வலி.வடக்கு, நவ. 19

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் விளையாட்டு அவை ஏற்பாட்டில் அகில இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் பல் கலைக்கழக உடற்கல்வி மைதானத்தில் விளையாட்டு அவைத் தலைவா சி.கோபிநாத் தலைமையில் இடம்பெற்றது.




இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல் கலைக்கழகத்தின் துணை வேந்தர் 'பேராசிரியர்' வசந்தி அரசரெட்ணமும், சிறப்பு விருந்தினராகப் பல்கலைக்கழகத்க தின்பேரவை உறுப்பினர் பால சுப்பிரணியம், விளையாட்டு அவை ஆலோசகர் கலாநிதி நெவில்சுரேந்திரன், பல்கலைக் கழக விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் கே. கணேசநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பல்கலைக் கழகத்தின் நடைமுறைக்கு அமைவாக விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு நான்கவாது தடவையாக வர்ண விருதுகள் பெற்றவர்களைக் கௌரவிக்கும் வகையில் முதல் தடவையாக இந்த நிகழ்வு விளையாட்டு அவையினால் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இந்த நிகழ்வில் உடற் கல்வி துறையுடன் தொர்புடைய பல் கலைக்கழக விரிவுரையாளர்களும் நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படதுடன் விளையாட்டுத் துறையில் உடமையாற்றும் ஊழியர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

(த-86-23)

## 13வயது துடுப்பாட்டத்தில்

# சென்.ஜோன்ஸ் கல்லூரியை வென்றது யாழ்.மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், நவ.19

விதுஷனின் சிறப்பான பந்து வீச்சும் கௌதமனின் நிதான மான துடுப்பாட்டமும் கை கொடுக்க சென்.ஜோன்ஸ் கல்லூரியை வெற்றி கொண்டது யாழ். மத்திய கல்லூரி.

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் முதலாவது சுற்றுக்கான ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ்கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் நாணயச் சுழற் சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி அணியினர் களத்தடுப்பில் ஈடுபட்டனர்.

அதற்கமைய முதலில் துடுப் பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 41 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கௌரிபாலன் 13 ஓட்டங்களையும், எமில்ரன் 13 ஓட்டங்களையும், அஜே 12 ஓட்டங்களையும், கீதபிரதாப் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி வீரனான விதுஷன் 10 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக் களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணியினர் 49 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர்.

இதில் கௌதமன் 51 ஓட்டங்களையும், செந்தூரன் 23 ஓட்டங்களையும், பிரியலக்சன் 13 ஓட்டங்களையும் தமது அணிசார் பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிசார்பாக நிரோஷன், 13 ஓவர்கள் பந்துவீசி 41 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக் களையும் லெனின் 5 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கருணியன் 15 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 2 விக் கெட்டுக்களையும் யதுஷன் 10 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங் களுக்கு 2 விக்கெட்டுக்களையும் அஜே மூன்று ஓவர் பந்து வீசி 3 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

ஆட்ட விதிக்கு அமைய யாழ். மத்திய கல்லூரி அணியினர் முதலாவது இனிங்சில் 40 ஓட்டங் களைக் கூடுதலாகப் பெற்றமையால் வெற்றி பெற்றனர். (எ-23)



வவுனியா மாவட்ட செவிப்புலன் வலுவிழந்தோர் சங்கத்தின் 11 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெற்ற வீதி ஓட்டப்போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய வீர வீராங்கனைகள் இவர்கள் (த-23)

# முல்லைத்தீவு வலயத்தில் வெற்றி பெற்ற ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், நவ. 19

அகில இலங்கை ஆசிரியர் தின விளையாட்டுப் போட்டியில் முல்லைத்தீவு வலயத்தில் இடம்பெற்ற போட்டிகளில் பங்கு பற்றிப் பதக்கங்கள் பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

செல்வி சி.பி.மேரி மெற்றில்டா (முல்லைத்தீவு, வற்றாப் பளை), தட்டு ஏறிதல் - தங்கப் பதக்கம், குண்டு எறிதல்- தங்கப்பதக்கம், ஈட்டி எறிதல் - வெள்ளிப்பதக்கம், 4x 100 அஞ்சல் ஒட்டம் - வெண்கலப் பதக்கம்.

வி. மயூறி - முல்லைத் தீவு - தேவிபுரம் அ.த.க. பாடசாலை), தட்டு எறிதல் - தங்கப் பதக்கம், குண்டு எறிதல் - தங் கப்பதக்கம், ஈட்டி எறிதல், -வெள்ளிப் பதக்கம், 4x100 அஞ்சல் ஒட்டம் - வெள்ளிப்பதக்கம். பி. பாலசேந்தன் (முல்லைத்தீவு- வள்ளிபுரம் க.உ. வித்தியாலயம்) 100 மீற்றர் ஓட்டம் - தங்கப்பதக் கம், 200 மீற்றர் ஒட்டம் வெள்ளிப் பதக்கம், 4x 100 அஞ்சல் ஒட்டம் - வெள்ளிப்பதக்கம்.

எஸ். மோகனதாஸ் (முல்லைத் தீவு ம.வி), 400 மீற்றர், ஒட்டம் - வெண்கலப் பதக்கம், 4x400 மீற்றர் ஒட்டம் - தங்கப்பதக்கம்

எஸ்- முத்துக்குமார் (குமுழு முனை ம.வி) 4 x 100 அஞ்சல் ஒட்டம் வெள்ளிப்பதக்கம்.

(த-23)

# கரப் பந்தாட்ட அணிக்கு வீரர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், நவ.19

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நாடளாவிய ரீதியில் ரூபவாகினி கரப்பந்தாட்ட அணி உருவாக்கப்படவுள்ளது.

இதற்கு யாழ். மாவட்டத்தில் வீரர்கள்,வீரங்கனைக ளைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணபப்பபடிவங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளமுடியும் என தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குநர் ரி. ஈஸ்வராஜா அறிவித்துள்ளார்.

(த-23)

# குருநகர் பாடும் மீன் அணியை வென்றது திருமலை ஒலிம்பிக்ஸ்

யாழ்ப்பாணம், நவ.19

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிரிமியர் லீக் 3 பிரிவுக்கான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை திருகோணமலை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம் பெற்ற இந்த ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எதிர் அணியினரின் கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணமிருந்தனர்.

முதல் பாதி ஆட்டத்தின் போது இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைவதற்கு 20 நிமிடங்கள் இருக்கையில் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் நிதர்சன் தனது அணிக்கான முதலாவது கோலைப் போட்டார்.

யாழ்ப்பாணம் குருநகர் பாடும் மீன் அணியினர் தனது அணிக்காகக் கோல்களைப் பெற எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. மீண்டும் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக வீரன் பதிஜிகான் தனது அணிக்காக இரண்டாவது கோலைப் போட்டு வெற்றியை உறுதிப்படுத்தினார்.

ஆட்ட முடிவில் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை வென்றது.

(த-23)

# உதைபந்தாட்டத்தில் மோதும் அணிகள்

யாழ்ப்பாணம், நவ.19

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழங்களின் 40 வயதுக்கு மேற்பட்டோருக்குமான லீக் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட் டித் தொடரில் நாளை ஞாயிற்றுக் கிழமை குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* ஊறெழு றோயல் விளையாட்டுக் கழக அணி எதிர் பாசையூர் சென். அன்ரனிஸ் மரூண் அணி (மாலை 4மணி).
* குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி எதிர் பாசையூர் சென். அன்ரனிஸ் வெள்ளை அணி (மாலை 4.55 மணி).

(த-23)

# கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடல் புனரமைப்பு

வலி- வடக்கு, நவ.19

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலைத் திருத்தி அமைப்பதற்காக பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கூடைப்பந்தாட்டத்தை ஊக்குவிக்கும் முகமாகவும் பாடசாலை மாணவர்களிடையே விளையாட்டுத் துறையை வளர்த்தெடுக்கும் வகையிலும் இந்த நிதி ஒதுக் கீட்டை வழங்கியுள்ளார்.

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மேடை சேதமடைந்தமையால் அதனைப் பயன்படுத்துவதில் மாணவர்கள் சிரமங்களை எதிர் கொண்டு வந்தனர்.

அதனைத் திருத்தியமைக்க முடித்துள்ளதாகப் பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்தனர்.

(த-86)

# பிறிமியர் லீக் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 19

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிறிமியர் லீக் பிரிவு III இற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை கம்போய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் எவர் சைலின் அணியை எதிர்த்து திருகோணமலை ஒலிம்பிக்ஸ் மோதவுள்ளது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடி தோற்றது இலங்கை



இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 21 ஓட்டங்களால் இலங்கை அணியை வெற்றி கொண்டது. பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் அசத்தலான துடுப்பாட்டத்தின் உதவியுடன் இந்த வெற்றியைப் பதிவு செய்தது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடர் டுபாயில் இடம்பெற்று வருகின்றது. இதில் முதலிரு ஆட்டங்களிலும் இரு அணிகளும் தலா ஒரு ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ள நிலையில் மூன்றாவது ஒரு நாள் ஆட்டம் நேற்று இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதன்படி களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு மொஹமட் ஹபீஸ், இம்ரான் பகாட் சிறப்பான அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர்.

முதலில் மந்தமாக ஆட்டத்தை தொடங்கிய இந்த ஜோடி பின்னர் மிகவேகமாக ஆட்டத்தை தொடர்ந்து சிறப்பான அடித்தளத்தை அமைத்தது. ஹபீஸ் 68 பந்துகளில் தனது 12 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். முதலாவது இலக்குக்காக 120 பந்துகளில் 100 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டன. மறுமுனையில் ஆடிய பகாட்டும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 50 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார். இவர்களது பல பிடியெடுப்புக்களை இலங்கை அணி வீரர்கள் கோட்டை விட்டதால் முதலாவது இலக்குக்கான இணைப்பாட்டம் 150 ஓட்டங்களை எட்டியது.

இறுதியில் 29.2 பந்து பரிமாற்றங்களில் அணி 151 ஓட்டங்களைப் பெற்ற போது முதலாவது இலக்கு சரிக்கப்பட்டது. ஹபீஸ் 83 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து மறுமுனையில் ஆடிய பகாட் அணி மேலதிகமாக 10 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 70 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இலக்கு வீழ்ச்சியை சரிவரப்பயன்படுத்திய இலங்கை அணி, பாகிஸ்தானை கட்டுப்படுத்தியது.

தொடர்ந்து நுழைந்த வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினர். அப்துல் ரஷாக் 6, உமர் அக்மல், மிஷ்பா உல் ஹக் தலா 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். ஒரு கட்டத்தில் பாகிஸ்தான் அணி 193 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது. பின்னர் நுழைந்த அப்ரிடி மற்றும் யுனிஸ்கான் இருவரும் இணைந்து அணியை மெதுவாக மீட்டனர்.

அப்ரிடியின் அதிரடி அதிகமில்லாவிடினும் ஓட்டங்கள் பெறப்பட்டன. 32 ஓட்டங்கள் 6 ஆவது இலக்குக்காக பகிரப்பட்ட நிலையில் இலக்கு வீழ்த்தப்பட்டது. அப்ரிடி 15 ஓட்டங்களுடன் வெளியேறினார். யுனிஸ்கான் இறுதியில் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் பாகிஸ்தான் அணி 8 இலக்குகளை மாத்திரம் இழந்து 257 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் மலிங்க, சீகுகே பிரசன்ன தலா 2 இலக்குகளை சரித்தனர்.

258 என்ற பலமான இலக்கை விரட்ட களம்புகுந்தது இலங்கை அணி. தரங்க, டில்ஷான் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். தரங்க 4 ஓட்டங்கள் விளாசி இலங்கையின் கணக்கை தொடக்கினார். இருப்பினும் உமர் குல்லின் அடுத்த பந்து வீச்சிலேயே நேரடியாக இலக்கு தகர்க்கப்பட்டு ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் களம்புகுந்த சங்ககார, டில்ஷானுடன் இணைந்து ஆட்டத்தை தொடர்ந்தார். வேகமாக இணைப்பாட்டத்தை முன்னெடுத்த சங்கா, டில்ஷான் ஜோடி மேலதிக ஆட்டமிழப்புக்களை தடுத்தது. 48 பந்துகளில் இலங்கை அணி முதலாவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தது. சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய டில்ஷான் 62 பந்துகளில் தனது 24 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இரண்டாவது இலக்குக்காக 106 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் சங்ககார 45 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டானார்'. தொடர்ந்து அணி 133 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் டில்ஷான் 64 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

### மஹேல 10 ஆயிரம் ஓட்டங்கள் தாண்டினார்

அதன் பின்னர் களம்புகுந்த டினேஸ் சந்திமால், மஹேல இருவரும் நிதானமாகத் துடுப்பெடுத்தாடினர். மஹேல ஜெயவர்தன நேற்றைய தினம் 13 ஆவது ஓட்டத்தினைப் பெற்ற போது சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் அரங்கில் 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார். நான்காவது இலக்குக்காக 35 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் மஹேல துரதிர்ஷ்டவசமாக 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

துடுப்பாட்ட பவர்பிளேயில் இலங்கை அணி ஓட்டங்கள் குவிக்க முடியாமல் திணறியது. இறுதியில் சந்திமால் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கையின் வெற்றி கேள்விக்குறியானது.

அடுத்து களம்புகுந்த மலிங்க ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார். இருப்பினும் 6 ஆம் இலக்க துடுப்பாட்ட வீரராக களம்புகுந்த ஜீவன் மெண்டிஸ், மத்தியூஸுடன் இணைந்து துடுப்பெடுத்தாடினார். இருவரும் வேகமாக ஓட்டங்களைக் குவித்தனர். இருப்பினும் 32 ஓட்டங்கள் மட்டும் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் மெண்டிஸ் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதியில் பெரோ, மத்தியூஸ் இணைந்து ஆட்டத்தை தொடர்ந்தனர். இலங்கை அணி 224 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பெரேரா 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதிவரை போராடிய மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கை அணி 48.5 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதன் மூலம் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் அஜ்மல், உமர் குல் தலா 3, அப்ரிடி 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக பாகிஸ்தானின் ஹபீஸ் தெரிவானார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் இன்னிங்ஸில் ஆபிரிக்காவை முந்தியது ஆஸி.

முதலாவது இன்னிங்ஸிற்காக நேற்றைய தினம் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரதும் சிறப்பான ஓட்டக் குவிப்பு மூலம் 296 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதன் மூலம் தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸிற்காகக் பெற்றுக் கொண்ட ஓட்ட எண்ணிக்கையை விட 30 ஓட்டங்கள் மேலதிகமாகப் பெற்றுக் கொண்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ள ஆஸ்திரேலிய அணி அங்கு விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட்டில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றியைப் பதிவு செய்திருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் ஜொகர்னஸ்பேர்க்கில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பான அடித்தளத்தை ஆபிரிக்க அணிக்கு அமைத்துக் கொடுத்தனர். டீ வில்லியர்ஸ் 64, கலிஸ் 54, டுமினி 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆபிரிக்காவின் ஆட்டம் தடுமாறத் தொடங்கியது. இறுதியில் தென்னாபிரிக்க அணி சகல இலக்குகளையும் இழந்து 266 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பில் சிடில் 3, நதன் லயோன், மைக்கல் கிளார்க் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். நேற்று முன்தினம் ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக உரிய நேரத்திற்கு முன்பே முடிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டம் ஆரம்பமானது. ஆஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்ஸை நேற்றுத் தொடங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வொட்ஸன், ஹியூகெஸ் களமிறங்கினர். ஆபிரிக்காவின் பந்து வீச்சை பதம் பார்த்து ஆஸியின் ஓட்டஎண்ணிக்கையை அதிகரித்தனர். முதலாவது இலக்குக்காக சிறப்பான அடித்தளத்தை அமைத்தனர். மதியபோசன இடைவேளை வரை இலக்கு இழப்பின்றி 169 ஓட்டங்களை ஆஸி அணி பெற்றிருந்தது.

பின்னர் ஆட்டம் ஆரம்பமான சிறிது நேரத்தில் முதலாவது இலக்கை இழந்தது. அணி 174 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹியூகெஸ் 88 ஓட்டங்களுடன் அட்டமிழந்தார். தொடர்ந்து அணி 192 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வொட்ஸன் 88 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அதன் பின்னர் நுழைந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற ஆஸ்திரேலிய அணி இக்கட்டு நிலைக்குள் மாட்டுப்பட்டது. பின்வரிசையில் ஜோன்சன் சிறப்பாக ஆட ஆஸி. அணி தென்னாபிரிக்க அணியை முதல் இன்னிங்ஸில் முந்தியது. இறுதியில் ஆஸி. அணி சகல இலக்குகளையும் இழந்து 296 ஓட்டங்களைப் பெற்றது. ஜோன்சன் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

பந்து வீச்சில் ஆபிரிக்க அணி சார்பில் ஸ்ரெய்ன் 4, இம்ரான் தகீர் 3 இலக்குகளை கைப்பற்றினர். 30 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய தென்னாபிரிக்க அணி ஆட்ட நேர முடிவில் இலக்கு நஷ்டமின்றி கணக்கை ஆரம்பிக்காத நிலையில் உள்ளது. (15)



## தேவை

கொழும்பில் உள்ள ரான்ஸ்போர்ட் ஒன்றுக்கு கணக்கு வேலை தெரிந்த சிங்கள மொழியில் சரளமாக உரையாடக் கூடிய ஆண் தேவை.

தொடர்பு:- 0771807672.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. திருமதி இளங்கோவின்
செல்வப்புதல்வி

### இ.ஹேமதா

(திருமலை/மூதூர்/
பட்டித்திடல்
மகா வித்தியாலயம்)

2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 166 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்ததோடு மாவட்ட மட்டத்தில் 93 நிலையைப் பெற்று பாடசாலைக்கும், பெற்றோருக்கும், எமது கிராமத்துக்கும் புகழை ஈட்டித் தந்தமைக்காக அவரைப் பாராட்டுவதோடு கல்வியில் மட்டுமல்லாது சகல துறைகளிலும் சிறந்து விளங்கிட எல்லாம் வல்ல பட்டித்திடல் ஸ்ரீசித்தி விநாயகப் பெருமானின் நல்லருள் வேண்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் இவரின் உயர்வுக்கு அயராது உழைத்த அதிபர், ஆசிரியர்கள் எல்லோருக்கும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பட்டித்திடல், தோப்பூர்.
(10590)(1,6,7)

வாழ்த்துபவர்கள்: பாட்டியம்மா,
தங்கை டிரு மற்றும் உறவுகள்.

நெஞ்சம் நெக்குருகி நிற்கும்

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம்:
13.07.1924

மறைவு:
20.10.2011

திருமதி

### யூலிஸ் மெனிக்கா

தாயுமாகி பாவுமாகி நின்று ஓயுநாள் வரை ஓய்வில்லா துழைத்து
எமை வளர்த்து தெய்வமாகிவிட்ட எம தன்னையே உமது பாதக் கமலங்களில்
எமது கண்ணீரைக் காணிக்கையாக்கி நித்தியத்துள் உமதான்மா நீடு நிலைத்திட
நிமலனை வேண்டித் தொழுதிடலன்றி வேறு கைம்மாறு யாமறியோம் தாயே

பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.
(10604)(1,6,9)

என்றும் நினைவழியாது நின்றிடும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த வரும், 'உதயன்' பத்திரிகையின் ஆரம்பகாலம் முதல், அதன் இணுவில் பகுதி விற்பனை முகவராய் இருந்து, இக்கட்டான கால கட்டங்களிலும் வாசகர்களுக்கு உதயன் சென்றடைவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட

### சபாபதி தனபாலசிங்கம்

அவர்களது மறைவு குறித்து ஆழ்ந்த கவலையுறுவதுடன் அன்னாருக்கு எமது நெஞ்சார்ந்த அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

இல.361,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகத்தினர்
மற்றும்
பணியாளர்கள்.

## இரு கரையோர..(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு வழங்கப்பட்டுவிட்டது என்றும் கோத்தபாய தெரிவித்தார். எனினும் இந்தியத் தரப்பு இந்த விடயத்தை நகர்த்தும் வேகம் மிக மந்தமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கப்பல்களை விற்பதற்கான அனுமதியை அமைச்சரவையிடம் இருந்து இந்திய அரசு பெறவேண்டி இருப்பதால் இந்தத் தாமதங்கள் ஏற்படுவதாகவும் அவர் கூறினார்.

கடற்கொள்ளை மற்றும் போதைப் பொருள் கடத்தல் - பயங்கரவாதம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கைக் கடற்படையின் பலத்தை மேலும் விருத்தி செய்ய வேண்டி இருக்கிறது என்றும் கூறும் கோத்தபாய, நட்பு நாடுகள் உதவினால் ஆழ்கடல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய கடற்கலங்களை இலங்கையால் பெறமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்து மா சமுத்திரத்தின் மொத்தப் பரப்பிலும், எதிர்காலத்தில் கடல் பாதுகாப்பு நடவடிக்கையில் இலங்கையால் பெருமளவு பங்களிப்பை வழங்க முடியும் என்று தான் நம்புகிறார் என்றும் அவர் கூறினார். (உ)

## தீர்ப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும், நூற்றுக்கணக்கான ஆதரவாளர்களும் குழுமியிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, கட்சிப் பிரதித் தலைவர்களான கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாஸ மற்றும் அக்கட்சியின் எம்.பிக்களான பாலித ரங்கே பண்டார, பாலித தெவரப்பெரும, ரஞ்சன் ராமநாயக்க, தயாசிறி ஜயசேகர ஆகியோர் நீதிமன்றுக்கு வருகை தந்திருந்தனர்.

அதேவேளை, ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களான அர்ஜுன ரணதுங்க, ஜயந்த கெட்டகொட மற்றும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், 'ஐக்கிய சோஷலிஸக் கட்சித் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

சரத் பொன்சேகா நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்டபோது அவரது ஆதரவாளர்கள் ஆர்ப்பரித்தனர்.

நீதிமன்றம் தீர்ப்பை அறிவித்த நேரம் மன்றினுள் பெரும் கூச்சல் ஏற்பட்ட அதேவேளை, நீதிமன்ற வளாகத்திலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

• ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டாவது சரத் பொன்சேகாவுக்கு விடுதலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் வந்திருந்த ஆதரவாளர்களும், அவரது உறவினர்களும் இதனால் கோபமுற்றனர்.

இதன் காரணமாக நீதிமன்ற பின் வாயில் வழியாக சரத் பொன்சேகாவை அழைத்துச்செல்லும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட, தகவலறிந்த ஆதரவாளர்கள் அங்கு சென்று வழிமறித்தனர்.

இதனால் அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது. வழிமறித்த ஆதரவாளர்கள் சிறைச்சாலை வானின் கதவுகளைத் திறந்து சரத் பொன்சேகாவை மீட்பதற்குப் போராடினர். எனினும், அதற்குப் பொலிஸார் விட்டுக்கொடுக்காததால் பதற்றம் மேலும் அதிகரித்தது.

எனினும், ஒரு வழியாகப் பொலிஸார் சரத் பொன்சேகாவை நீதிமன்றத்திலிருந்து சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்று விட்டனர்.

பொலிஸாரின் வாகனத்தை பின் தொடர்ந்த ஆதரவாளர்கள், அரசுக்கும் நீதிமன்றத்திற்கும் எதிராகத் தகாத வார்த்தைகளைப் பாவித்து தங்களது கோபத்தை வெளிப்படுத்தினர்.

இதேவேளை, நீதிமன்றத்திற்கு வெளியே ஆதரவாளர்கள் பலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (உ)

## கண்ணீர்க் காணிக்கை

எமது யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் முன்னாள் சிரேஷ்ட ஆசிரியரும் தற்போதைய ஓய்வு பெற்ற ஆசிரியருமாகிய

### வல்லிபுரம் கணபதிப்பிள்ளை

அவர்கள் நேற்று (18.11.2011) வெள்ளிக்கிழமை அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத்துயரம் அடைவதோடு எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினரின் துக்கத்தில் நாமும் பங்கு பற்றுவதோடு எமது அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

''ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!''

யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி.

பாடசாலைச் சமூகம்.

## கண்ணீர் அஞ்சலி

### ஞானப்பிரகாசம் அருளானந்தம்

(முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர்-கரித்தாஸ் கியுடெக்)



ஈரைந்து ஆண்டுகள்
இன்முகம் காட்டி
இல்லாதோர் வாழ்வில்
ஒளி ஏற்ற - மனித முன்னேற்ற
நடுநிலையத்தின்
இயங்குசக்தியாகச் செயற்பட்ட
எமது கிளாக்கர் ஐயாவை
இதயம் நெகிழ்ந்து
அஞ்சலிக்கின்றோம்.

இயக்குநரும் பணியாளர்களும்,
கரித்தாஸ் கியுடெக், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### தியாகராஜா ஸ்ரீதரன்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா ஸ்ரீதரன் கடந்த (15.11.2011) செவ்வாய்க்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-இராசம்மா (வாழைச்சேனை) தம்பதியரின் அன்பு மருமகனும் ஹேமமாலினியின் அன்புக் கணவரும், அருண், பாரத் ஆகியோரின் அன்புத் தந்தையும், மஞ்சு, சூட்டா( காந்தி), குமார், பாபு, பபி, செல்வி, மதன் (கங்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் விஜயராணி, எல்மோ, ஜெயா, சிவா, பாணி,ரகு,ஜோதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தனுஷன், லக்ஷமன், காயத்திரி, கோகுல், தாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்து, பிரசன்னா, தர்சிகா, சௌமியா, சர்மிளா, சாரங்கன், சங்கவி ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2011) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(10609)(1,6,9)

கொழும்பு -13
கனடா -
0014166886971

தகவல்:
சகோதரி - ஸ்ரீஸ்வரி(பபி)

## கண்ணீர்க் காணிக்கை



Nation Trust Bank யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் றொகான் தேவசொலின் தந்தை

### டானியல் ஜெயக்குமார் தேவதாசன்

காலமாகிய செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அவரைப் பிரிந்து நிற்கும் அன்னாரது குடும்பத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர் கௌரி கணேசனும்
ஊழியர்களும்.

**Hotel Rose Cottage & Restaurant.**
**MARINA. ENTERPRISES.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்சேகாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழக்கில் பொன்சேகா மீது 3 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. நீதிபதிகள் குழுவில் ஒருவரான வராவெவ அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் பொன்சேகாவை விடுதலை செய்தார். எனினும் ஏனைய இரு நீதிபதிகளும் பொன்சேகாவை இரு குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுதலை செய்த போதும் ஒரு குற்றச்சாட்டில் அவர் குற்றவாளி எனத் தீர்ப்பளித்தனர்.

இறுதிக்கட்ட போரின்போது சரணடையவரும் விடுதலைப்புலி உறுப்பினர்களைச் சுட்டுக்கொல்லுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டார் என 'சண்டே லீடர்' பத்திரிகையில் வழங்கிய செவ்வியின்போது சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார். இது பொய்யானது எனக் கூறி சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக அவருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டது.

2010ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில், பாதுகாப்புச் செயலாளரால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகப் பொய் கூறியிருந்தமை, அரசுக்கு எதிராக சூழ்ச்சி செய்தமை மற்றும் பொதுமக்களிடையே கருத்து முரண்பாடு, கலகம் என்பவற்றை ஏற்படுத்தியமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுகள் பொன்சேகா மீது சுமத்தப்பட்டிருந்தன.

நீதிபதிகளான தீபாலி விஜேசுந்தர, வராவெவ மற்றும் சர்பிக் ரஷிக் ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டுவந்த நிலையில் நேற்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

தீர்ப்பு அளிக்கப்படுவதற்கு முன்னர் நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தரவும், சர்பிக் ரஷீக்கும் சரத் பொன்சேகாவுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள முதலாவது குற்றச்சாட்டைத் தவிர, மற்றைய இரண்டு குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாக அறிவித்தனர்.

இருந்தபோதிலும், நீதிபதி வராவெவ, சரத் பொன்சேகா மீது சுமத்தப்பட்டுள்ள அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் நிராகரித்து அவரை விடுதலை செய்வதாக அறிவித்தார்.

தொடர்ந்து நீதிபதிகள் குழுவின் தலைவர் தீபாலி விஜேசுந்தர மேற்படி தீர்ப்பை அறிவித்தார். தீர்ப்பு அறிவிக்கப்பட்ட செய்தி நீதிமன்றத்துக்கு வெளியில் கூடியிருந்த பொன்சேகாவின் ஆதரவாளர்களுக்கு தெரிய வந்ததும் அவர்கள் பெரும் அமளிதுமளியில் ஈடுபட்டனர். அரசுக்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் அடித்து நொருக்கப்பட்டன. பொலிஸார் அங்கு கூடியிருந்தவர்களை விரட்டிக் கலைத்தனர்.

இந்நிலையில், சரத் பொன்சேகா நீதிமன்ற பின்வாசல் வழியாக வெலிக்கடை சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (உ)

(மேலும் செய்திகளும் படங்களும் 03 ஆம் பக்கத்தில்)

## போர்க் குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்போனவர்களின் உறவினர்களுக்கு இலவச வீடுகள் மற்றும் ஒரே தடவையிலான நிதிக் கொடுப்பனவு என்ற ரீதியிலான நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் அறிக்கை பரிந்துரை செய்துள்ளது. அதே வேளையில், காணாமற்போனவர்கள் குறித்து விசாரணை நடத்தவேண்டும் என்றும் ஆணைக்குழு கூறியுள்ளது.

பயங்கரவாதிகளிடம் இருந்து பெரும் எண்ணிக்கையிலான மக்களை வெற்றிகரமாக மீட்டெடுப்பதில் படையினர் பெரும் பங்காற்றியுள்ளனர் என்றும் அறிக்கை கூறுகின்றது.

இராணுவத்தின் இரகசியச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சிலரை அல்லது பலரை பொது நீதிமன்றங்களில் நிறுத்தி விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது..

போர் தொடர்பான விவகாரங்களில் அரசு பொறுப்பற்ற தன்மையுடன் நடந்துகொண்டது என்று விமர்சித்துள்ள அறிக்கை, இதிலிருந்து கிடைத்த படிப்பினைகளை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கையில், போர்க் குற்றங்கள் தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷ சகோதரர்களுக்குத் தொடர்புகள் இருந்தன என்பது தொடர்பாக எந்த விடயமும் குறிப்பிடப்படவில்லை. அவர்கள் தவிர்க்கப்பட்டுள்ளார்கள். வெள்ளைக்கொடி விவகாரம் எனப் பரவலாக அறியப்பட்ட பிரச்சினையில் இவர்கள் தொடர்புபட்டிருந்தார்கள் என்று குற்றச்சாட்டுக்கள் உள்ளபோதும் ஆணைக்குழு அறிக்கையில் அது பற்றித் தெரிவிக்கப்படவில்லை.'

வன்னியில் நடத்தப்பட்ட மருத்துவமனைகள் மீதான தாக்குதல், பொதுமக்கள் நிலைகள் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நிலை மீதான எறிகணை வீச்சு, தாக்குதல் தவிர்ப்பு வலயங்கள் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதல்கள், போதியளவு உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் அனுப்பப்படாமை என்பன குறித்தும் ஆணைக்குழுவின் அறிக்கையில் எதுவுமேயில்லை.

- இவ்வாறு அந்த இணையத் தளம் கூறியுள்ளது. (உ)

## 2013 இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மும், இந்தியாவின் இர்கோர்ன் நிறுவனமும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

கொழும்பில் நேற்றுக் காலை நடைபெற்ற எளிமையான நிகழ்வில், அமைச்சர் வெல்கம மற்றும் இந்தியத் தூதர் அசோக் கேகாந்தா ஆகியோர் முன்னிலையில் இரு தரப்பினரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன் அடிப்படையில் பளை தொடக்கம் காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதை இந்திய உதவியுடன் புனரமைக்கப்பட உள்ளது. இந்தப் பகுதியின் புனரமைப்புப் பணிகள் முன்னர் சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருந்தது.

ஏற்கனவே ஓமந்தை தொடக் கம் பளை வரையிலான ரயில் பாதையைப் புனரமைப்பதற்கான புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்பட்ட நிலையில், எஞ்சியுள்ள 55 கி.மீ. தூரமுள்ள பாதையை புனரமைப்பதற்கான உடன்பாடு நேற்றுக் கையெழுத்தானது. ரயில் பாதையை அமைப்பதற்கு 149 மில்லியன் டொலர் நிதி செலவிடப்பட உள்ளது.

இந்தப் பாதை புனரமைப்புப் பணிகள் 2013ஆம் ஆண்டின் இறுதியில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் ரயில் பாதைகளைப் புனரமைக்கும் பணியில் ரயில்வே திணைக்களம் ஈடுபட்டுள்ளதால் வடக்கில் அந்தப் பணிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க அரசு தீர்மானித்ததாக போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார்.

## வருகிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது. பெண்களுக்கும் இடமளிக்கப்பட உள்ளது. இந்தியா, நோர்வே மற்றும் சீனா போன்ற நாடுகளுக்கு இதில் இடமில்லை.

அரசு ஏற்கனவே நியமித்த நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவில் நம்பிக்கை இல்லை என்று சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் மேற்கு நாடுகளும் தெரிவித்து வருவதால் சமாளிப்புக்காக புதிய ஆணைக்குழுவை அரசு நியமிக்க உள்ளது. (உ)

## குற்றமிழைத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவுக்கும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார்.

இதற்கமைய அடையாளம் காணப்பட்ட படையினரே, நிகழ்ந்த போர்க் குற்றங்களுக்கான பொறுப்பாளிகள் என்று நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்தப் படையினருக்கு தண்டனை வழங்கப்பட்ட பின்னர் அவர்களை அரசு பொறுப்பெடுத்துக் கவனித்துக் கொள்ளும் என்று மூன்றாம் தரப்பு ஒன்றின் ஊடாகப் படையினரின் குடும்பத்தினருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்தப் படையினரின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் இலவச வீடுகள் வழங்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

குறித்த படையினருக்கு இரண்டு வருடங்களின் பின்னர் ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவார் என்று ஜனாதிபதியின் செயலாளர் வாய்மொழி மூல உறுதி வழங்கியுள்ளார். ''விசாரணைகளின் பின்னர் படையினருக்குத் தண்டனை விதிக்கப்படும். அவர்கள் இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்ததும் அடுத்து வரும் வெசாக் தினத்தில் ஜனாதிபதியினால் அவர்களில் அனேகருக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படும்'' என்று ஜனாதிபதியின் செயலர் கூறியுள்ளார்.

அதேபோன்று, இராணுவத்தின் இரகசியச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் தண்டனை வழங்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவார் என்றும் தெரியவருகிறது. புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களைத் திருப்திப்படுத்துவதற்காக இவ்வாறு செய்யப்பட உள்ளது. (உ)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் சரவணமுத்து பாலசுப்பிரமணியம்



கடந்த 20.10.2011 அன்று இறைபதம் அடைந்த எமது அன்பு மாமன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று(19.11.2011) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்துடன் அன்னார் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நேரிலும், பத்திரிகை மூலமும் , தொலைபேசி, இணையம் மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் குறிப்பாக பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் நிர்வாக சபையினருக்கும் யாழ்.சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னார் வீட்டில் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் நேரகாலம் பாராது அன்புடன் கவனித்துக் கொண்ட வைத்தியர் மற்றும் உதவியாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அண்ணாமலை வீதி, சுதுமலை. மருமக்கள்.

## மரண அறிவித்தல்

### தற்பரசுந்தரம் தையல்நாயகி



சாவகச்சேரி, சப்பச்சிமாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தற்பரசுந்தரம் தையல்நாயகி நேற்று (18.11.2011) வெள்ளிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு தற்பரசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - முத்தாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் கந்தையா, காலஞ்சென்றவர்களான கணேசு, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் ஜெகதாம்பாள், நிர்மலா, காலஞ்சென்ற மனோகரன் மற்றும் கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும் காயத்திரியின் அன்பு மாமியும். அனந்தினி மணிவண்ணன், விதுஷன், கிஷோபன், ரிஷபன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.11.2011) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமோதரம்பிள்ளை வீதி, சப்பச்சிமாவடி, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

[illegible] 1 2/3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777111400

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

### அமரர் பொன்னையா கந்தையா



கடந்த 20.10.2011 இல் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (19.11.2011) சனிக் கிழமை மு.ப .11.00 மணிக்கு இல.527, நாவலர் வீதியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் (TCT) நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம். J/100, வண்ணார்பண்ணை கிராம மக்களையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இல 5,பென்ரிக்கோஸ்ரல் ஒழுங்கை,கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

க.பஞ்சலிங்கம்(மகன்), கிராம உத்தியோகத்தர்.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் விசுவலிங்கம்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் தம்பாட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் விசுவலிங்கம் நேற்று (18.11.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் இராமசாமி - கனகாம்புரி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற புவனம்மாவின் அன்புக் கணவரும் இராசகுமார் (குமார்), விஜயகுமாரி, இந்திரகுமாரி, வசந்தகுமாரி, ஜெயமாலா(லண்டன்), செல்வக்குமார், ஜெயமதி, வசந்தகுமார், வனிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் மங்களச்செல்வி ஆனந்தராசா ஜெயரெட்ணம், நடனராஜ், தவராசா (லண்டன்), ஜெயமதி, செல்வரூபன், நதீசன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.11.2011) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் தம்பாட்டியில் அமைந்துள்ள அவரின் மகளின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாட்டி விறாட்டி முனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பாட்டி, ஊர்காவற்றுறை.

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# An Invitation

60th Annual Festival of Carols

By

The Combined Choirs

Of

Schools and Colleges of the North

At

The St. John's College Hall

On

Sunday 20th November, 2011, 4.00 p.m

All are wel come

## மரண அறிவித்தல்



### திருமதி அன்னலிங்கம் மகேஸ்வரி

உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற அன்னலிங்கத்தின் மனைவி மகேஸ்வரி நேற்று (18.11.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் கணேசலிங்கம், சறோஜா, அமுதலிங்கம், சொர்ணலிங்கம், சாந்தலிங்கம், விஜயகுமாரி ஆகியோரின் தாயும், ராணி, யோகம், மோகலிங்கம், ஏகாம்பிகை, பவனராணி, விஜயா, ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப.ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் கோயில் அருகில்,
உடுவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.


## படிவம் விற்பனையாகிறது

1. ஆரம்பிருந்து உதவியாளர்
2. நிறு உதவியாளர்
(பட்டதாரிகளுக்கானது)

பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

## கார் வாடகைக்கு உண்டு

திருமணவைபவங்கள் மற்றும் விசேடவைபவங்களுக்கான A/C கார் வாடகைக்கு உண்டு.



தொடர்புகளுக்கு:
S.மதன்,0777289283

## காணி விற்பனைக்கு

நெல்லியடிச் சந்தியில் இருந்து ½ கி.மீ தூரத்தில் நெல்லியடி பருத்தித்துறை வீதிக்கு கிழக்குப் பக்கமாகவும் அவ்வீதியை மேற்கு எல்லையாகவும், வீதிப்பக்கம் 23 அடி அகலத்தையுமுடைய 2 பரப்பு நீள் சதுரக் காணி விற்பனைக்கு.

(10603)(6-7-8) தொடர்புக்கு: 0714720177, 0773140495

## கணினி மலிவு விற்பனை

P iv கணினி மற்றும் LCD Monitor மற்றும் அதனுடன் கூடிய அனைத்துப் பொருள்களும் 23,750/= விலையில் விற்பனைக்கு உண்டு. Free 4 GB Pen/Web cam

**SKY Computer**

162, பிரதான வீதி, யாழ். / 737, K.K.S. Road, யாழ். 222 4865

021 222 1417, 075 0698608

Skype, V/Call, Internet பாவிக்கலாம்
ஒரு வருட உத்தரவாதம் உண்டு.

## சட்டமாணிக் கற்கை யாழ்ப்பாணத்தில்

முதல் தடவையாக

ஆறுமுகம் கருத்தரங்கும் விரிவுரையும்

திகதி : 20.11.2011

பிற்பகல் 1.00 முதல் மாலை 4.00 மணி வரை

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி (பட்டப்படிப்புக்கள் பிரிவு)
இல.454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
T.P.0777246723

## புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

**BIT BIT BIT**
Semester - 1, 3, 5
Final Year Project

**ICT - A/L**
**ICT - O/L**
**ICT - Gr 10**

**Practical Web Development**
Joomla, PHP, MySQL, jQuery, CSS, HTML
Domain Registration & Web Hosting

கணினிக் கல்வியில் தொடர்ச்சியான 10 வருட அனுபவம்.
Mr R.Kumaran-B.Sc. (Computing & IS) TPNo : 0776577359
Visit : www.ictschool.org

MIS Open Source College
74, சபாபதி வீதி தலையாழி பிரம்படி யாழப்பாணம்
இராமநாதன் வீதியிலிருந்து 150 m


## மரண அறிவித்தல்

### தம்பியப்பா கார்த்திகேசு

(வேலணை கலைச்சோலை புத்தக சாலை முன்னாள் உரிமையாளர்)



வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தம்பியப்பா கார்த்திகேசு நேற்று(18.11.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா-அன்னமுத்து தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், விஜயராணியின் அன்புக் கணவரும். கார்த்திகைத்தீபன்(தீபன், UNDP MINE ACTION), சுசீந்திரன்(சுசி-ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற பூரணம் மற்றும் செல்லத்துரை(கனடா), காலஞ்சென்ற இராசம்மா மற்றும் பாக்கியம்(கனடா), இலட்சுமி(கனடா) ஆகியோரின் உடன் பிறப்பும் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, இராசம்மா, சிவஞானம், சொக்கலிங்கம். மற்றும் அருணகிரி (கனடா), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று(19.11.2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று. பிற்பகல் 2.00 மணி அளவில் நல்லடக்கத்துக்காக பூதவுடல் தாவடி கல்வாரி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சைவப்பாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலிச் சந்தை அருகில்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.


யாழ் நகரில் வெளிநாடு செல்ல இருக்கும்
மாணவர்களுக்கான

## விஷேட ஆங்கில பாடநெறி

புதிய பிரிவுகள் ஆரம்பம்

முதல் 10 மாணவர்களுக்கு 25% கழிவு

## City & Guilds பரீட்சைகள் (A1,A2- B1,B2- C1,C2)

- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது
- சான்றிதழுக்கு கால எல்லை இல்லை
- நம்பிக்கைக்குறிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்

**Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கு A1 Exam**
**Student Visa மூலம் UK செல்பவர்களுக்கு B1 & B2 Exam**

## IELTS

GENERAL /ACADEMIC
Full Time & Part Time

## Diploma in English

> ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம்
> இரண்டே மாதங்களில் ஆங்கிலம் பேசுவதற்கான உத்தரவாதம்
> பாடநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பாடநெறிகள் நடத்தப்படுகின்றன

City & Guilds | BRITISH COUNCIL அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையம்

LONDON METROPOLITAN COLLEGE
No:197, Arasady Road, Jaffna.
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
Tel: 021 222 7230, 021 753 8395

# STUDY IN UK



நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி (per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- Admission with in 12hours
- இலவச IELTS வகுப்புகள்

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகளுடன் ஒரே நாளில் அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

January Intake க்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகிறது



London இல் சிறந்த கல்லூரியில் அனுமதி பெற்றுத்தந்ததுடன் Visa வுக்கான சிறந்த வழிகாட்டலையும் வழங்கி எனது வாழ்க்கை பாதையை சிறப்பாக அமைத்து தந்த Exponet க்கு எனது நன்றிகள்.

R.Rakeesan-Jaffna
(Westminster Academy-2011)

பதிவுகளுக்கு
Colombo - 011 7 555511, Jaffna - 021 7538395
Hotline - 0117 555514, Fax - 0117 555517

EXPONET Overseas Consultants

Head Office : 379 - 1/2, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197,Arasady Road, Jaffna.
London Branch : 56, The Gradens Harrow Middlessex, HA1 4EY, UK.
Web: www.expogroup.lk | Email: nimal@expogroup.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.